
KALKI
27.6.1971
40 காசு
கல்கி
இந்த இதழில்
நாவல்:
ஜெகசிற்பியன் எழுதும்
அஜநயனம்



she is the bearer of tradition...
IN
CENTURY SAREES
THE
CENTURY
SPG. & MFG. CO., LTD.
CENTURY BHAVAN,
WORLI, BOMBAY-25 DD.
Century — For 100% cotton textiles
Adroit/CM/ 43

எறும்பு ஒவ்வொரு தானியமாகச் சேர்த்து தன் களஞ்சியத்தை நிரப்புகிறது

நீங்களும் முன்கூட்டியே திட்டமிட்டு, எதிர்காலத்தில கவலையற்று இருக்க வழிசெய்து கொள்ளலாம்.

தேனு பாங்க் உங்கள் விருப்பப்படி சேமித்து கொள்வதற்கென 6 சேமிப்புத் திட்டங்களை உங்களுக்கு வழங்குகிறது.

சேமிப்புக் கணக்குகள் : வட்டி 4%

வயது வராதோர் சேமிப்புத் திட்டம் : வட்டி 4%

தவணை வைப்புகள் : வட்டி 4¼% முதல் 7¼%

ரெக்கரிங் டெபாஸிட் திட்டம் : 5¼% முதல் 7% கூட்டு வட்டி


மாதாந்தர சேவிங்ஸ்-கம்-ஆன்யுவிடி திட்டம் : கூட்டு வட்டி

பல பயன் டெபாஸிட் திட்டம்
மாதவட்டி கிடைக்கும்.

உங்கள் சேமிப்புகள் உங்களுக்குப் பாதுகாப்பளிக்கின்றன. உங்கள் சேமிப்புகள் தேசிய முன்னேற்றத்திற்கு வழி வகுக்கின்றன. மேலும் விவரங்களைப் பெற அருகிலுள்ள தேனு பாங்க் கிளைக்கு விஜயம் செய்யுங்கள் அல்லது எழுதிக் கேளுங்கள்.

தேனு பாங்க்

தலைமை அலுவலகம்: தேவ்கரன் நான்ஜி பில்டிங்ஸ்
17, ஹார்னிமன் சர்க்கிள், ஃபோர்ட், பம்பாய் 1.



Karan Bairo/DB/Tam/213

வெல்டிங் ஒரு மூன்றெழுத்து வார்த்தை

அதற்குச் சிறிது விளக்கம் தேவை

அந்த மூன்று எழுத்துக்கள் ஐஓஎல் என்பது தெளிவு. ஏனெனில் ஐஓஎல் (இந்தியன் ஆக்ஸிஜன் லிமிடெட்) வெல்டிங் தொழில் நுட்பத்தல் முன்னேற்றத்துக்கு எப்போதும் முன்னோடியாக இருந்து, இந்த நாட்டில் புதிய வெல்டிங் உத்திகளை புகுத்தியுள்ளது. அதே சமயத்தில் ஐஓஎல் நம் நாட்டிலேயே பலவகை வெல்டிங் சாதனங்களையும் அதற்குச் சம்பந்த மூள்ள வேறு பொருள்களையும் செய்துள்ளதோடு வேறு எங்கும் உள்ள சிறந்த தொழில் நுட்பவாதிகளுக்குச் சமமான வெல்டிங் தொழில் நுட்பவாதிகள் பலரையும் பயிற்றுவித்துள்ளது.

இன்று நாட்டின் ஒவ்வொரு பெரிய தொழில் பிரதேசத்திலும் 60-க்கும் அதிகமான தொழிற்கூடங்கள், அலுவலகங்கள், டிப்போக்கள், கம்பிரஸிங் நிலையங்களை நிறுவி செயல்பட்டு வருகிறது. ஒரு விரிவான விநியோகிப்புப் பணியையும் அது செய்து வருகிறது. வெல்டிங் சம்பந்த மாக எழக்கூடிய எந்த ஒரு பிரச்னையையும் தீர்த்து வைக்கும் இந்தியா முழுதும் ஐஓஎல் தொழில் நுட்ப நிபுணர்களும், சர்வீஸ் என்ஜினீயர்களும் பணியாற்றுகின்றனர்.

வெல்டிங் துறையில் முதல்வர்கள் :

IOL

IOC - 178R TAM

கல்கி

பொருளடக்கம்

விரோதிகிருது, ஆனி 13 -- ஜூன் 27, 1971

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப்பெயர்களே சம்பவங்களும் கற்பனையே.


சந்தா விவரம்:	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00




விட்டமின்கள் மற்றும்
தாதுப் பொருட்களுக்கான
'உணர முடியாப் பசி' உங்களுக்கு
சோர்வும் எரிச்சலும் ஊட்டுகிறது...

வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக்

மட்டுமே 12 இன்றியமையாத சத்துக்களை அளிக்கிறது
அந்த 'உணர முடியாப் பசி'யைத் தீர்ப்பதற்கு





உங்கள் உடலில் விட்டமின்கள், தாதுக்கள் மற்றும் முக்கிய சத்துக்களுக்கான பசி நிரந்தரமாக இருக்கிறது என்பதை எந்த டாக்டரும் கூறுவார். இந்த 'உணர முடியாப் பசி'யின் விளைவு— சோர்வு, எரிச்சல், இருப்புக் கொள்ளாமை, பசியின்மை, ஜீரண சக்தி குறைவு.

எல்லா சத்துக்களும் அடங்கிய வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் சாப்பிட்டு 'உணர முடியாப் பசி'யைப் போக்குங்கள். அதில் 12 முக்கிய சத்துக்கள் உள்ளன: வளர்ச்சிக்கும், வலிமைக்கும் விட்டமின்கள்; இரத்த விருத்திக்கு இரும்புச் சத்து; நல்ல பசியெடுக்க எல்லாப் பொருட்களும்; நரம்புகளுக்கு உரமூட்ட ஃபாஸ்ஃபேட்டுகள்.

சிந்தித்துப் பாருங்கள்; உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்தில் யாரேனும் ஒருவருக்கு வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் தேவை இன்றே!

இரண்டு அளவுகளில் கிடைக்கிறது:
250 ml 470 ml.

ஒரு தரமான வார்னர் லாம்பர்ட் தயாரிப்பு

WVT-G-7 TM

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்



மலர் 30

இதழ் 48

ஸ்தாபன காங்கிரஸின் கடமை

வெறும் உணர்ச்சி மிகுதியில் பங்களா தேசத்தைச் சுதந்திரத் தனி நாடாக இந்தியா அங்கீகரிக்கவேண்டும் என்ற கோஷம் எழுந்து மக்களின் ஆதரவைப் பெற்று வருகிறது. இருப்பினும் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி இந்த உணர்ச்சிக் கோஷத்தால் நிதானம் இழந்து விடவில்லை. பங்களா தேசத்தைச் சுதந்திர நாடாக அங்கீகரிக்காமலே இருக்கிறார். இந்த நிதானம் பாராட்டுக்குரியது. பங்களா தேசத்துக்கு அங்கீகாரம் தந்தால் அது பகிரங்கமாகப் பாகிஸ்தானின் மீது போர்ப் பிரகடனம் செய்வதேயாகும். இந்த உண்மையை உணர்ந்து, பிரதமர் இவ் விஷயத்தில் அடி எடுத்து வைக்காமல் இருப்பது மிகவும் விவேகமான செயல்.

பங்களா தேசம் விஷயத்தில் பிரதமர் எத்தனை நெரிசலுக்கும் அசைந்து கொடுக்காமல் இருப்பது போலவே இன்னொரு விஷயத்தில் அவர் இதே விவேகத்தையும் முன்னெச்சரிக்கையையும் காட்ட வேண்டும் என விரும்புகிறேன். அதாவது ஆளும் கட்சிக்குப் பார்லிமெண்டில் இருக்கும் பெரும்பான்மை பலத்தைக் கொண்டு அரசியல் சாஸனத்தை மாற்ற வேண்டும் என்று அவர் மீது செய்யப்படும் நெரிசலுக்கு அவர் நெகிழ்ந்து கொடுக்கக் கூடாது.


பிரதமரின் கட்சி சட்ட விரோதமான உபாயங்களைத் தேர்தலில் பின்பற்றியதாலேயே மெஜாரிட்டி பலம் பெற்றுள்ளது என்று பலர் நம்பத்தக்க முகாந்திரங்களுடன் எடுத்துக் கூறி வருகின்றனர். அது ஒரு புறம் இருக்கட்டும். நாம் சுதந்திரம் பெற்றவுடன், அதாவது இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நம்முடைய தேசத்திலுள்ள மிகச் சிறந்த அறிவாளிகள் ஒன்று கூடி அரசியல் சாஸனத்தைத் தீர்க்காலோசனையுடன் வகுத்தனர். அதில் சர்க்கார் அதிகாரம் செலுத்தி மாற்றக்கூடாத முறையில் மக்களுக்கெனச் சில அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தி நியமித்தனர். இந்த உரிமைகளைத் தேர்ந்த அறிஞர்கள் கொண்ட சாஸன நிர்ணய சபை ஏகமனதாக அங்கீகரித்தது. இதையெல்லாம் பிரதமர் மறக்கலாகாது. இப்படிப்பட்ட புனிதத் தன்மை கொண்ட சாஸனத்தின்மீது வெறும் மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு யுத்தம் தொடுப்பது பொருத்த அறிவீனம் என்று பிரதமர் உணர வேண்டும். இன்று தேசம் இருக்கிற நிலைமையில் பிரதமர் அரசியல் சாஸனத்தின் மீது போர் தொடுக்க மாட்டார் என்றே நம்புகிறேன். ஏனெனில், ஏதோ சில கோஷ்டிகள் அடிப்படை உரிமைகளைச் சிதைக்க விரும்பினாலும் பொதுவாக இந்திய மக்கள் இவ்வுரிமைகள் உள்ளவாறே நீடிக்க வேண்டும் என்றுதான் விரும்புகின்றனர்.

இந்த உரிமைகளில் ஒன்று சிறுபான்மை மதத்தினர்களுக்கு உறுதிகூறப்பட்டுள்ள சமான உரிமைகளாகும். பிரதமர் பார்லிமெண்டில் திரட்டக் கூடிய பெரும்பான்மை பலத்தைக் கொண்டு இந்த உரிமையைச் சிறிது பலவீனப்படுத்தும் அபாயம் தோன்றினாலும் கூட, சிறுபான்மை மதத்தினர் அனைவரும் அதை எதிர்த்து நிற்பர்.

மக்களுக்குச் சாஸனம் அளித்துள்ள அடிப்படை உரிமைகளை ஸுப்ரீம் கோர்ட் வலியுறுத்தியுள்ளது: இவற்றை மாற்றுவதில் பார்லிமெண்டின் அதிகாரத்துக்கு ஸுப்ரீம் கோர்ட் வரம்பு வகுத்திருக்கிறது. கோலக்நாத் வழக்கில் ஸுப்ரீம் கோர்ட் இவ்விஷயத்தில் தன் முடிவைத் தெளிவாக வெளியிட்ட பின்னரும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்க பார்லிமெண்ட் முற்படுவது சரியல்ல. ஸுப்ரீம் கோர்ட்டின் தீர்மானமே முடிவு என்று சாஸனத்தைத் தீண்டாமலிருக்க வேண்டும்.

அரசியல் சாஸனத்தை மாற்றக் கூடாது என்பதில் ஸ்தாபன காங்கிரஸ் தீவிரத்துடன் ஈடுபட வேண்டும். * இப்போது இந்தியாவில் உள்ள பல கட்சிகளின் கொள்கைகள் எல்லாம் ஒரே பாட்டைப் பாடுகின்றன. நல்ல விஷய ஞானமுள்ள எவருமே இந்திய அரசியல் இவ்விதம் இருப்பதை விரும்பவில்லை. அரசியல் நடத்தும் கட்சியின்

* இங்கு கூறப்படும் யோசனைக்கு நேர்மாறாக, கோலக்நாத் வழக்குத் தீர்ப்பைப் புறக்கணித்து அரசியல் சாஸனத்தை மாற்றவேண்டும் என்று ஸ்தாபன காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியுள்ள செய்தி, இக்கட்டுரை அச்சாகிக்கொண்டிருக்கையில் வெளியாகியுள்ளது.




கொள்கைகளை எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் வியக்தமாக எதிர்த்து நிற்கவேண்டும் என்பது அறிஞர்களின் விருப்பம். எல்லாரும் ஒரே பாட்டுப் பாடுவதில் பயனில்லை.

காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டு இன்றையப் பிரதமர் தமது உத்தேசங்களை வெளிப்படையாகக் கூறி அதிகார ஸ்தானத்துக்கு வந்துவிட்ட பின்னர், ஸ்தாபன காங்கிரஸ் மிகவும் பலவீனமாகி விட்டது. இன்று போகிற போக்கையே ஸ்தாபன காங்கிரஸ் நீடிக்குமாயின், அக் கட்சி அரசியல் உலகிலிருந்தே மறைந்து, வெறுமே சரித்திரப் புத்தகத்தில் இடம் பெற வேண்டியதுதான். இக் கட்சிக்குப் புத்துயிருட்டி, மக்களின் பேராதரவைப் பெற வேண்டுமாயின் அது அரசியல் சாஸனத்தை உள்ளபடியே காக்கும் பணிக்குத் தன்னைப் பூரணமாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். சுதந்திர ஜனநாயக மார்க்கத்தில் நாம் பிரவேசித்த போது அரசியல் சாஸனம் எந்த உருவம் பெற்றிருந்ததோ, அதையே காக்க வேண்டும்; சாஸன உரிமைகளை மாற்றும் எந்த முயற்சியையும் உறுதியாக எதிர்க்க வேண்டும் என்று ஸ்தாபன காங்கிரஸ் தீர்மானமாக முடிவெடுத்தால் அதற்கு மக்களின் சக்தி வாய்ந்த ஆதரவு கிடைக்கும். இந்த ஆதரவு எந்த உருவம் எடுக்கும் என்று இப்போது அநுமானித்துச் சொல்வதற்கில்லை. சாஸன உரிமைகளை மாற்ற முற்பட்டால் எதிர்ப்பு தீவிரமாக உருவாகும் என்று பிரதமர் அஞ்ச வேண்டியதாகும். எனவே, இப்படிப் பட்ட எதிர்ப்பை வலுவில் அழைக்காமல், அரசியல் சாஸனத்தை மாற்றும் உத்தேசத்தையே பிரதமர் கைவிட வேண்டி நேரலாம். சிதைந்து போயிருக்கும் ஸ்தாபன காங்கிரஸ் புத்துயிர் பெற இந்தப் பணியே வழி. இல்லாவிடில் அது உயிருடன் நீடிப்பது சந்தேகம்தான். நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியல் சாஸனத்தை உள்ளபடி காக்க விரும்பும் சக்திகளும், அதை மாற்ற விரும்பும் சக்திகளும் தெளிவாகப் பிரிந்து ஒன்றை ஒன்று எதிர்த்து நின்றால் அதை எல்லா ஜனநாயகக் கட்சிகளும் வரவேற்கும். இன்று அரசியல் சிந்தனையே பிரமை பிடித்துச் செயலற்று நிற்கிறது. இந்த நிலைமை மாறித் தேசத்தில் அரசியல் கட்சிகள் ஆரோக்கிய நிலை அடைய இவ்வாறு கட்சிகள் தெளிவான கொள்கைகளுடன் பிரிந்து நிற்பது உதவும்.

(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது)

ராஜாஜியின் கருத்துக்கள்

ஆள்கிற கட்சியினர் தங்களுக்குள் உள்ள உட்பூசல்களைக் 'குழி தோண்டிப் புதைக்க வேண்டும்' என்று பிரதமர் விரும்புகிறார். பேதங்களைக் குழி தோண்டிப் புதைக்க ஒரே வழி, கட்சிப் பற்றற்ற ஒரு தேசிய சர்க்காரை அமைப்பதுதான். இன்று இந்தியா எதிர் முகம் கொடுக்க வேண்டிய சிக்கல்களையும், சிரமங்களையும் சமாளிக்க வேண்டுமாயின் தேசிய சர்க்கார் அமைந்தாக வேண்டும். இதைச் செய்வது பிரதமருக்கு எளிதேயாகும். தமது கட்சிக்காரர்கள் யாவரையும் கட்டுப்படுத்தி, அவர்களை ஒரு தேசிய அ

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசாரியாளின் எழுபத்தெட்டாவது ஜயந்தி விழா நாடெங்கும் கொண்டாடப்பெற்றது. ஜூன் 12ந் தேதி மயிலையில் ஹிந்து தர்ம மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற ஜயந்தி விழாவுக்குத் தலைமை வகித்த நீதிபதி ஸ்ரீ என். கிருஷ்ண சுவாமி ரெட்டியார், ஆசாரியர்கள் கூறும் வெகு எளிய தர்மங்களையேனும் நாம் மனப் பூர்வமாகக் கடைப்பிடிப்பதுதான் உண்மையான ஜயந்தி விழாவாகும் எனக் கூறினார். பிரம்மஸ்ரீ டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள், பேராசிரியர் டி. எம். பி. மகாதேவன், ஸ்ரீ இ. வா. ஜகந்நாதன் ஆகியோர் ஆசாரியர்களின் அருட்பிரபாவத்தை விளக்கினர். ஸ்ரீமதி எம். எஸ். பிரார்த்தனையும் மங்களமும் பாடினார்.

சியல் கட்சியாக உருவாக்குவதைவிட தேசிய சர்க்கார் அமைப்பதே சுலபமானது; அதுவே அதிகப் பொருள் படைத்தது என்று பிரதமர் உணருவாராக!

★

சார்லஸ் லாம்(ப்) என்ற பிரபல ஆங்கில எழுத்தாளர் கூறுகிற ஒரு வேடிக்கைக் கதை: ஆதி காலத்தில் சீனத்தில் ஒரு வீடு பற்றி எரிந்த போது அதிலிருந்த ஒரு பன்றியும் வெந்து மாண்டது. அந்தப் பிராணியைத் தொட்டவன் சூடு பொறுக்க மாட்டாமல் விரலை வாயில் வைத்துக்கொண்டான். வெந்த பன்றி மாமிசம் மிகச் சுவையாக இருப்பதாகக் கண்டான். உடனே பக்கத்திலிருந்தவர்கள் தங்கள் வீடுகளை எல்லாம் கொளுத்தி, அங்குள்ள பன்றிகளை வேகவைத்து ருசி பார்த்தார்கள். இப்படியாகத்தானே ஊனைச் சமைத்து உண்ணும் பழக்கம் ஏற்பட்டது.

இந்த வேடிக்கைக் கதையை நினைவூட்டும் முறையில் சில முதல் மந்திரிகள் நடந்து கொள்கிறார்கள். அதாவது, மத்திய சர்க்காருக்கு எதிராக ராஜ்ய சர்க்கார் அதிக சுயாதீன உரிமை பெற வேண்டும் என்ற தங்களது கருத்துக்குக் கிழக்கு வங்கத்தின் கோரிக்கை வலுவூட்டுவதால், பங்களா தேசக் கொந்தளிப்பை இந்த முதன்மந்திரிகள் வரவேற்கிறார்கள்!

★

அவசியமேற்பட்டால் பங்களா தேசப் பிரச்னையில் நாம் யுத்தம் செய்யவும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று பார்லிமெண்டில் பல அங்கத்தினர்கள் கூறி வருகிறார்கள். பத்திரிகைத் தலைப்புச் செய்திகளில் அடிக்கடி, 'யுத்தத்துக்குத் தயாராக வேண்டும்' என்று பார்க்கிறோம். அவசியம் ஏற்படும் போது போருக்குத் தயாராக இருக்க வேண்டும் என்ற மனோபாவம் நல்லதுதான். ஆனாலும் பாகிஸ்தானுடனும் சீனத்துடனும் போரிடத் 'தயார் நிலை'யில் இருப்பது என்பதன் அர்த்தம் என்ன? நம்முடைய பொருளாதாரத்தின் நிலை என்ன? பாகிஸ்தான், சீனம் ஆகிய இரு நாடுகளுடன் ஒரே சமயத்தில் போரிட வேண்டுமாயின் நமது தளவாடத் தேவைகள் என்ன? இதில் நாம் யதார்த்தத்தில் திரட்டக் கூடிய சக்தி எவ்வளவு? இவ்விஷயங்கள் பதவியில் உள்ளவர்களே ஆராய்ந்து பார்க்க வேண்டியவை.

★

'உத்தியோக வர்க்கம்' (bureaucrat) என்பதற்குப் பதிலாக இப்போது புதிய சொல் உபயோகிக்கப்படுகிறது. 'உபத்திரவ வர்க்கம்' (worrycrat) என்பதே இந்த நூதனச் சொல். சர்க்கார் சர்வாதீனக் கொள்கையைப் பின்பற்றுகிற ஆட்சிகளில் எல்லாம் உத்தியோக வர்க்கமானது உபத்திரவ வர்க்கமாகப் பெருகிப் பரிணமிக்கிறது. சர்க்கார் சர்வாதீனம் என்றவுடன் பலவித கட்டுப்பாடுகள் போடப்படுகின்றன. இவற்றை அமுல் செய்ய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகின்றனர். நடைமுறையில் இந்தக் கட்டுப்பாடுகள் செவ்வையாக நடப்பதில்லை. எனவே, கட்டுப்பாடுகளை நன்றாக நடத்த வேண்டும் என்பதற்காக மேலும் பல கட்டுப்பாடுகளை விதித்து, அவற்றை அமுல் செய்ய மேலும் உத்தியோகப் பட்டாளத்தைப் பெருக்குகிறார்கள். பிறரை இன்னலுக்கு ஆளாக்கியேனும் தாங்கள் மட்டும் சலுகை பெற்று முன்னுக்கு வர வேண்டும் என்று கருதுகிறவர்கள் இந்த 'உபத்திரவ வர்க்க'த்தை எப்படித் திருப்திப்படுத்துவது

என்று கற்றுக் கொள்கிறார்கள். இதன் விளைவாக, லஞ்ச ஊழல் பொது விதியாகிறது.

★

நமது நாட்டின் பொதுமக்கள் அனைவரும் ஆண்டவனைப் பற்றியும், மதத்தைப் பற்றியும் நன்கு அறிந்தவர்கள். ஆயினும் துரதிருஷ்டவசமாக நம் மக்கள் உலகிலேயே பொருளாதாரத்தில் மிகவும் விஷய ஞானமற்றவர்களாக இருக்கிறார்கள். ஆனபடியால் இன்றைய அரசியல்வாதிகளின் மாயப் பிரசாரத்துக்குப் பலியாகிறார்கள். தங்களது பிரசார கோஷங்களைச் செயலாக்கினாலே முன்னேற முடியும் என்று கூறி வோட்டுக் கேட்கிற சுயநலவாதிகள் இம்மக்களை எளிதில் ஏமாற்ற முடிகிறது. கட்சிக்காரர்களின் சொந்த நலன்களைக் கருதாது, தேச நலனை மட்டுமே கருதும் ஒரே கட்சி சுதந்திரக் கட்சிதான். பொருளாதாரம், ஜனநாயகம் ஆகியன குறித்த உறுதியான நல்ல கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது சுதந்திரக் கட்சி. ஆனால் இக்கட்சி அவதூறுகளையும் அபவாதங்களையும் எதிர்த்துப் போரிட வேண்டியிருக்கிறது.

என்ன சேதி?

நடிகர் சத்யன் மறைந்தார்

மலையாளப் பட உலகில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்து, சுமார் நூற்றைம்பது படங்களில் நடித்துப் புகழுடன் விளங்கிய சத்யன் 15–6–71 அன்று சென்னை நகரில் உள்ள ஒரு தனியார் மருத்துவ மனையில் மரணம் அடைந்தார். ரத்தத்தில் ஏற்பட்ட புற்று நோய், அந்த ஐம்பத்தாறு வயதுக் கலைஞரின் திடீர் மறைவுக்குக் காரணமாக அமைந்தது.



திருவனந்தபுரத்தைச் சேர்ந்த சத்யன் சில தமிழ்ப் படங்களிலும் நடித்திருக்கிறார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடித்ததும், சிறிது காலம் சப் இன்ஸ்பெக்டராக வேலை பார்த்தார். பிறகு ராணுவத்தில் சேர்ந்து இரண்டாவது உலக மகா யுத்தத்தில் பங்கு கொண்டார். பின்னர் திரைப் படங்களில் நடிக்கலானார்.

''செம்மீன்'', ''கடல் பாலம்'', ''வாழ்வே மாயம்'', ''அடிமகள்'', ''முடியனாய புத்ரன்'', ''நீலக் குயில்'' ஆகிய மலையாளப் படங்கள் இவருக்குப் பெரும் புகழ் தேடித் தந்தவை. அவற்றுள் ''செம்மீன்'' படத்துக்கு ஜனாதிபதியின் தங்கப் பதக்கமும், அயல் நாட்டுப் பரிசுகளும் கிடைத்தன.

நடிகர் சத்யனின் உடல், சென்னை கோடம்பாக்கம், மலையாள கலாசித்ர பரிஷத் காரியாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு சிவாஜி கணேசன், எம். ஜி. ஆர். மற்றும் ஏராளமான நடிக நடிகையர்கள் குழுமித் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர். தமிழ்ப் பட நடிகர் மட்டுமல்லாமல் வட இந்தியத் திரைப்பட நடிகர்களும் சத்யனின் மரணத்துக்கு அநுதாபம் தெரிவித்தனர்.

திரைப்பட உலக வரலாற்றில் தம் இயல்பான நடிப்பினால் அரும் சாதனை புரிந்த நடிகர் சத்யனின் உறவினருக்கு நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கோவூரில் கும்பாபிஷேகம்

'கோ' என்றால் ஆண்டவன். அவனது இல்லம் கோயில். அவன் எங்குமே இருப்பவன்தான். எனினும், அவனது அருட் சக்தியை மக்கள் உணருமாறு மகான்கள் வெளிப்படுத்திய இல்லங்களே கோயில்கள் ஆயின. அந்தக் 'கோ'வின் சாந்நித்தியம் ஓர் ஊர் முழுதும் தெற்றெனப் பரவியிருந்தது போலும். அதனால்தான் அந்த ஊரே கோவூர் எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும். 'கோ' என்பது பசுவையும் குறிக்கும். காமதேனு, நந்தினி ஆகிய திவ்வியப் பசுக்கள் வழிபட்ட பல தலங்களும் நம் நாட்டில் உள்ளன. அந்த முறையில் கோவூரும் 'கோ-புரம்' என வட மொழியில் வழங்குகிறது. சங்கீத சத்குரு ஸ்ரீ தியாகையர் கோவூரில் அருளிய பஞ்ச ரத்தினக் கிருதிகளில் 'கோபுரவாஸ சுந்தரேச' என்றே பாடுகிறார். 'கோபுரம்' என்னும் போதும் நமக்குக் கோயில் கோபுரம் நினைவு வருகிறது. இந்த ஊரே ஓர் ஆலயமோ என்று எண்ணி வியக்கத் தோன்றுகிறது.

சேக்கிழார் பெருமான் அவதரித்த குன்றத்தூருக்கு அருகே, சென்னை மாநகரின் அண்மையில் அமைந்துள்ளது கோவூர் சுந்தரேசப் பெருமானின் அற்புதத் திரு ஆலயம். சௌந்தர நாயகியுடன் சேர்ந்து அருள்பாலிக்கிறார் இறைவன்.

இந்தத் தலத்தைப் 'பாடல் பெற்ற தலம்' என்று புதிய பொருளில் கூறலாம். தேவாரப் பாடல் பெறவிட்டாலும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளிடமிருந்து ஐந்து அமுதப் பாடல்களைப் பெற்றவர் சுந்தரேசுவரர்.

கோவூர் ஆலயத் திருப்பணி சுமார் இரண்டு லட்ச ரூபாய் செலவில் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. கோயில் சொத்துக்களைக் கொண்டே ஜீர்ணோத்தாரணம் செய்திருக்கிறார்கள். ஜூலை 5ந் தேதி கும்பாபிஷேகம் நடக்கிறது. இதற்குப் பொது மக்களின் திரவிய காணிக்கை தேவைப்படுகிறது. இந்த உத்தமப் பணிக்குப் பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: திரு மு. குருசாமி, பொருளாளர், திருப்பணிக் குழு, ஸ்ரீ சுந்தரேசுவரர் தேவஸ்தானம், கோவூர், சென்னை — 56.

ஆலய வழிபாடு

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அருளுரை

உதவி பெற்றதற்கு நன்றி செலுத்துவது ஒரு சிறந்த கடமை. ஒரு சிறு புல்லைக்கூட சிருஷ்டிக்கத் திறனற்ற மனிதனுக்கு இத்தனை உணவும், உடையும், மற்ற உபகரணங்களும் வழங்கும் ஆண்டவனுக்கு நன்றி காட்டுவது நமது கடமை. இவ்வாறு நன்றி கூறும் அடையாளமாகவே நாம் உண்பதை அவனுக்குமுன் காட்டி நிவேதனம் செய்ய வேண்டும். அவனுக்குக் காட்டிவிட்டுப் பிறகு நாம் தான் உண்ணப் போகிறோம். நாம் பலவிதமான ஆடை ஆபரணங்கள் அணிவதற்கு அருள் செய்யும் ஆண்டவனுக்குத் திரு ஆபரணங்களைச் செய்து சமர்ப்பிக்கிறோம். எல்லோருமே இவ்விதம் வீட்டில் பூஜை செய்து ஈசுவரார்ப்பணம் செய்ய இயலாது. எனவே, சமுதாய வழிபாட்டு நிலையங்களாக ஆலயங்கள் எழுந்துள்ளன.

ஆதியில் மகரிஷிகள் மந்திர சக்தியால் எங்கும் நிறைந்த பரம்பொருளைச் சில விக்கிரகங்களில் விசேஷ சாந்நித்தியம் கொள்ளச் செய்தனர். அப்படிப்பட்ட மூர்த்திகளைச் சுற்றிக் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன.

வீட்டில் பூஜை செய்கிறவர் உள்பட அனைவரும் கோயிலுக்குப் போவது என்று கட்டுப்பாடாகப் பழக்கம் வைத்துக் கொண்டால்தான் அங்கு பூஜைகள் குறைவற நடக்கும். நான் கோயிலுக்குப் போகிறேன் என்றால், எனக்காகவாவது கோயிலைச் சுத்தமாக வைக்கிறார்கள்; விளக்குகள் போடுகிறார்கள்; நைவேத்தியம் சுத்தமாகச் செய்கிறார்கள்.

சின்னஞ் சிறிய சூட்சுமமான தர்மங்களை எல்லாம் மறந்து விட்டோம். நமக்கு உணவு தருபவனுக்கு நல்லபடி நிவேதனம் நடக்க வேண்டும், நமக்கு உடை தருபவனுக்கு நல்ல வஸ்திரம் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் கவனிக்கத் தவறுகிறோம். இப்போது ஓர் ஊரில் யார் ரொம்ப அழுக்குத் துணி கட்டிக் கொண்டிருக்கிறார் என்று பார்த்தால் ஸ்வாமிதான் என்று தெரிகிறது. நம் ஊர் கோயிலில் ஸ்வாமியின் வஸ்திரம் சுத்தமாயிருக்கிறதா என்பதில் மனதைச் செலுத்தும்போது மனசின் அழுக்கும் போய்விடும். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று', 'அரனை மறவேல்', 'திருமாலுக்கு அடிமை செய்' என்றெல்லாம் புண்ணிய மொழிகள் வழங்கும் இந்த நாட்டில் ஒவ்வோர் ஊரிலும் உள்ள ஈச்வரன் கோயிலையும், பெருமாள் கோயிலையும் நல்ல நிலையில் வைத்திருந்து வழிபட வேண்டும்.



தற்போது ஆலய வழிபாட்டுக் கிரமங்களில் என்ன வேண்டுமானாலும் மாறுதல் செய்யலாம் என்று எண்ணப்படுகிறது. எங்கேயும் உள்ள மின்சாரத்தை வெளிப்படுத்த ஆங்காங்கே மின் சக்தி ஸ்தாபனம் இருப்பது போல், எங்கும் உள்ள ஈசுவர சக்தியை வெளிப்படுத்த ஆங்காங்கே மந்திர பூர்வமாக, ஆகமபூர்வமாக ஆலயங்கள் எழுப்பப்பட்டு, அவற்றின் பூஜாகிரமங்கள் உருவாகியுள்ளன. மின்சக்தி இயந்திரத்தில் நாம் தாறுமாறாகக் குறுக்கிட்டால் தேகம் போய்விடும். அது போலவே ஆத்ம க்ஷேமத்துக்கான ஆலய யந்திரத்தில் குறுக்கிட்டால் ஆத்மா போய்விடும்.

'குருக்கள் அநுஷ்டானம் இல்லாதவராக இருக்கிறாரே, எதைச் செய்தால் என்ன?' என்கிறார்கள். அதாவது பாக்கி இருக்கிற ஸ்வாமியையும் வெளியே அனுப்பிவிடலாம் என்கிறார்கள். கோயிலில் இப்போதுள்ள ஆசாரக் குறைவை நிவிருத்தி செய்ய வேண்டுமேயன்றி, ஆசாரத்தில் இல்லாத புது விஷயங்களைப் புகுத்தக் கூடாது.

ராஜீய விவகாரங்களின் பொருட்டு மத விஷயங்களை மாற்றக் கூடாது. புதிது ஸ்திரமாக இராது. ஆடி மாதம் வெள்ளம் வரும் போது கரையைச் சில இடங்களில் இடிக்கும். அது பற்றிக் கவலை வேண்டாம். புது ஆவேசத்தைப் பற்றிக் கோபம் கொள்ள வேண்டாம். ஜனங்களிடம் நாம் நியாயத்தை விளக்கினால் அவர்கள் ஒப்புக் கொள்வார்கள். புது ஆவேசம் தானாகப் போய்விடும். சீர்திருத்தக்காரர்கள் நம் சாஸ்திரங்களைப் படிக்கவில்லை. அதனால் கோபம் அடைகிறார்கள். அதற்காக நாமும் கோபம் கொள்ளலாகாது. எதிர்க்கட்சியிடத்திலும் நமக்குப் பிரியம் வேண்டும். ஆகமத்தின் கருத்தை நாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

இந்தக் கோயில்களைக் கட்டிய மன்னர்களின் காலத்திலிருந்து இன்றுவரை அவற்றில் பின்பற்றப்படும் நியதிகளை அப்படியே காக்க வேண்டும். நாம் சரியாக இருந்து, உண்மையான பக்தியுடன் வழிபாடு செய்து, உண்மையான அன்புடன் எடுத்துச் சொன்னால் எல்லோரும் கேட்பார்கள். இன்று கோயில்கள் விஷயம் இப்படியானதற்கு நாமே காரணம்என்று உணர்ந்து, முதலில் நம்மைத் திருத்திக்கொள்வோமாக!


LIFEBUOY
for health
LIFEBUOY SOAP
லைப்பாய்
இருக்குமிடம்: அதுவே
ஆரோக்கியம்
இருக்குமிடம்
நீராடும் இன்பம் தருவதிலே நிகரில்லாத சோப் லைப்பாய். குதூகல உணர்ச்சியின் குற்றாலம். ஆரோக்கிய மலர்ச்சியின் ஆலோலம். நல்ல சோப்புக்குரிய நன்மைகள் யாவும் பெறுவீர், மேலும் பெறுவீர் லைப்பாய் துணையால்...
அழுக்கிலுள்ள கிருமிகளைக்
கழுவிக் களைவது
லைப்பாய்

அகதிகள் நிதிக்கு அள்ளித் தாரீர்!



கிழக்கு வங்கத்திலிருந்து பாகிஸ்தான் ராணுவத்தின் அடக்குமுறைக்கும், அட்டூழியங்களுக்கும், பீரங்கிச் சுடுதலுக்கும், விமானத் தாக்குதலுக்கும் ஆளாகி லட்சக் கணக்கான அகதிகள் பாரதம் வந்து சேர்கின்றனர். பொருளிழந்து, வீடிழந்து, உறவினர்களை இழந்து பிழைத்தால் போதும் என்று இந்திய மண்ணில் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது. இது வரையில் நாற்பது லட்சம் பேர்கள் வந்துள்ளனர் என்று அதிகாரபூர்வமாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் எண்ணிக்கை இதைவிட அதிகமாகவே இருக்கும்.

இவர்களுடைய கதைகள் சோகத்தின் சிகரம்.

கிழக்கு வங்கத்தில் மிருகங்கள் வேட்டையாடப்படுவது போல் மக்கள் ராணுவத்தினரால் வேட்டையாடிச் சுடப்படுகின்றனர்; பாகிஸ்தானிய விமானங்கள் நகரங்கள் மீதும், கிராமங்கள் மீதும் குண்டுமாரி பொழிகின்றன; புழு பூச்சிகள் போல் மக்கள் மடிகின்றனர்; மைல் கணக்கில் வீடுகளும் குடியிருப்புப் பகுதிகளும் கொளுத்தப்படுகின்றன; ஓடும் மக்கள் சுட்டு வீழ்த்தப்படுகின்றனர்; என்றெல்லாம் சென்ற மூன்று மாத காலமாகத் தினந்தோறும் பத்திரிகைகளில் படித்து வருகிறோம். நெஞ்சம் பதைக்கிறோம். சரித்திரத்திலே கண்டும் கேட்டுமிராத கொடுமைக்குக் கிழக்கு வங்க மக்கள் ஆளாகியுள்ளார்கள்.

கிழக்கு வங்காளத்தில் கல்விக்கேந்திரமாக விளங்கிய டாக்கா பல்கலைக் கழகத்தினுள்ளே வசித்து வந்த மாணவர் அத்தனை பேரும் பீரங்கிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்களாம். மதிப்புக்குரிய பேராசிரியர்கள், வெளியே இழுத்து வரப்பட்டு, சுட்டுத் தள்ளப்பட்டார்களாம்.

பழைய டாக்கா பகுதியிலுள்ள ஓர் உயர்ந்த கட்டடத்தின் மேல் தளத்தில் பீரங்கியைப் பொருத்தி அதன் நாற்புறத்திலும் உள்ள மக்கள் அனைவரையும் சுட்டு வீழ்த்தினார்களாம். பிணங்களை ஆற்றில் தூக்கி எறிந்தார்களாம்.

இந்துக்கள் வசிக்கும் ஒரு பகுதியில் தெருவின் இரு முனைகளிலும் பீரங்கிகளைப் பொருத்தி, அந்தத் தெருவிலிருந்த அத்தனை பேரையும் சுட்டுத் தள்ள அந்தத் தெருவே பிணக் குவியலாக மாறிவிட்டதாம்.

பிணங்களைக் கொத்தித் தின்னும் கழுகுகள் வயிறு நிறைய தின்று விட்டதால் உயரப் பறக்க முடியாமல், தரை மட்டத்திலேயே கூட்டம் கூட்டமாக வட்டமிடுகின்றனவாம்.

பிணங்களைப் புதைக்கக் குழிகள் தோண்டுமாறு சிலர் அமர்த்தப்படுகின்றனர். காரியம் முடிந்ததும் அவர்களையும் சுட்டு வீழ்த்தி, அவர்கள் தோண்டிய குழியிலேயே தள்ளிவிடுகின்றனர், பாகிஸ்தான் ராணுவத்தினர். பெண்களிடம் அவர்கள் நடந்து கொள்ளும் முறை எழுதத் தரமன்று. இன்னும் எத்தனையோ அட்டூழியங்கள்.


ஹிந்து சமூகத்தை அடியோடு கிழக்கு வங்காளத்திலிருந்து ஒழித்து விட்டு, கிழக்கு வங்கத்தை ஒரு காலனியாகவே ஆக்கி, அடக்கி ஆள பாகிஸ்தான் ராணுவம் திட்டமிட்டு அதன்படி செயல் புரிந்து வருகிறது. இதற்காக 30 லட்சம் கிழக்குப் பாகிஸ்தானிய மக்களைப் படுகொலை செய்ய நேரிட்டாலும் தயங்காது செய்வோம் என்று வீரம் பேசுகிறார்கள் பாக் ராணுவத்தினர்.

நாட்டை விட்டுப் பலவந்தமாக வெளியேற்றிவிட்டு அப்படி வெளியேறுவோர் மீதே அட்டூழியங்களைப் புரியும் சம்பவம் ஹிட்லர் ஆதிக்கத்தில் யூதர்கள் பால் நடைபெற்றது. அதற்கு ஈடான அக்கிரமம் இன்று கிழக்கு வங்கத்தில் நடந்திருக்கிறது.

அகதிகளை இந்தியாவிலேயே வைத்துக் கொள்ள முடியுமா? எத்தனை காலம் வைத்துக் கொள்வது, எங்கே வைத்துக் கொள்வது, எப்போது, எப்படி அவர்களுடைய நாட்டுக்







உடை, நோய்களிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் ஆகிய பொறுப்புக்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

உயிர் தப்பி ஓடி வந்து இங்கு சரணடைந்திருக்கும் அகதிகள் எல்லாரும் மிக சமீப காலம் வரையில் நம்முடன் நமது நாட்டில், நமது சகோதரர்களாகவே சம அந்தஸ்துடன் வாழ்ந்தவர்கள்தானே. இந்தப் பிணைப்பை மறந்துவிட முடியுமா ?

'லட்சோப லட்சம் அகதிகளுக்கு நிவாரணமளிப்பது என்பது இலேசான காரியமா ? நான் கொடுக்கிற ஐந்தோ பத்தோ என்ன சாதித்துவிடப் போகிறது?' என்று யாரும் அலட்சியமாய் இருந்துவிடக் கூடாது. சிறு துளி பெருவெள்ளமாகப் பெருகும்.

உலக நாடுகள் உதவி அளிக்க முன்வந்துள்ளன. நமது அரசாங்கமும் அதனுடைய பட்ஜெட்டில் இதற்கென நிதி ஒதுக்கிச் செயல்பட்டு வருகிறது. தனி மனிதர்களும் தங்கள் அனுதாபத்தையும் மனிதாபிமானத்தையும் காட்டும் வகையில் அகதிகள் கஷ்ட

குத் திருப்பி அனுப்புவது? இதை யார் செய்வது—போன்ற பிரச்னைகளைப் பாரத அரசு சமாளிக்க வேண்டியிருக்கிறது. இந்த அரசியல் விவகாரம் ஒருபுறமிருக்க அகதிகளின் உடனடிப் பிரச்னைகளைக் கவனிக்க வேண்டிய பெரும் பொறுப்பு பாரதத்தின் மீது சுமந்துள்ளது.

நாற்பது லட்சம் அகதிகளுக்கு இருப்பிடம், அவர்களுக்கு உணவு




நிவாரணத்துக்கு உதவி அளிக்க முன்வர வேண்டியது அவசியம்.

இதன் அவசியத்தை உணர்ந்து, தமிழ் நாட்டில் வங்காள தேச அகதி நிவாரண உதவிக் கமிட்டி என்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் உயர் போஷகர் தமிழக அரசின் முதல்வர் திரு கருணாநிதி. உபதலைவர்கள் சென்னை மேயர் திரு சா. கணேசன், ஷெரிப் திரு ஆர். ரத்னம் ஆகியோர். தலைவர், தொழில் துறைப் பிரமுகரும், ஈஸன் கூட்டுக் கம்பெனிகளின் தலைவருமான திரு கே. ஈசுவரன். எளிய மக்களிடம் இயல்பாகவே அனுதாபம் உள்ளவர். தொழிலதிபர்கள் திரு எம். வி. அருணாசலம், திரு எம். ஏ. எம். ராமசாமி, செத்ரா எஸ். நாராயணஸ்வாமி மற்றும் பலர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவின் முதலாவது பொதுக்கூட்டம் சமீபத்தில் சென்னை கோகலே மண்டபத்தில் முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது. அச்சமயம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ரூபாய் ஐயாயிரமும், தமிழ் நாட்டின் சார்பில் ரூபாய் இருபத்தி ஐயாயிரமும் வங்க தேச அகதி நிதிக்காக முதல்வர் வழங்கினார். ஈஸன் கம்பெனிகள் சார்பில் பன்னிரண்டாயிரம் ரூபாய் அளித்தார் திரு கே. ஈசுவரன். இங்லிஷ் எலெக்ட்ரிக் கம்பெனி ரூ. 5000, செட்டி நாடு சிமெண்ட்ஸ் கம்பெனி ரூ. 5000, தென் இந்திய ஷிப்பிங் கார்ப்பொரேஷன் ரூ. 30,000 என்று அகதி நிதிக்கு உதவி அளித்திருக்கின்றன. இதுவரையில் சுமார் ரூ. 85,000 வசூலாகி விருப்பதாகத் தெரிகிறது. மேலும் பலரிடமிருந்து உதவி அளிப்பதாக வாக்குறுதிகள் வந்துள்ளன. அகில இந்திய வங்க உதவி நிதிக்குத் தமிழ்நாட்டு உதவிக் கமிட்டியின் முதல்





தவணையாக ஒரு லட்சம் விரைவிலேயே அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சொத்து சுதந்திரங்களையெல்லாம் விட்டு விட்டு அகதிகளாய்த் தஞ்சம் என்று வந்துள்ள நம் சகோதரர்களின் துயர் துடைக்க நாமும் அள்ளிக் கொடுப்போம். நிதி அனுப்ப வேண்டிய முகவரி:

திரு கே. ஈசுவரன், தலைவர், வங்கதேச அகதி உதவி கமிட்டி, ஈஸன் என்ஜினீரிங் கம்பெனி அலுவலகம், 5-7, செகண்ட்லேன் பீச், சென்னை-1.

படங்கள் முதல் பக்கம் :

1. கோகலே மண்டபம் பொதுக்கூட்டத்தில் முதல்வர் பேசுகிறார். அருகே திரு மாதவனும், ஈஸன் கம்பெனித் தலைவர் திரு கே. ஈசுவரனும்.

2. ஓர் அகதிக் குடும்பம்.

இந்தப் பக்கங்களில் : 1. நான்கு குழந்தைகளுடன் தப்பிவந்த தாயின் துயர நிலை. 2. உற்றார் உறவினரை இழந்து, கண்ணீர் உகுக்கும் சகோதரி. 3. பங்களாதேச உதவிக் குழுவின் துணைத் தலைவர் பத்மஜா நாயுடுவிடம் புது தில்லியில் பண முடிப்பு வழங்கப்படுகிறது. 4. அகதிகளுக்கென அமெரிக்க ஸ்தாபனமாகிய கேர் அனுப்பிய கூடாரங்கள், புது தில்லியில் அமெரிக்க விமானத்தில் ஏற்றப்படுகின்றன. 5. அகதிகளை மாற்று இடங்களுக்கு ஏற்றிச் செல்லவும் அவர்களுக்குத் தேவையான உணவு உடை முதலானவற்றைச் சுமந்து செல்லவும் அமெரிக்க விமானங்கள் வந்துள்ளன. படத்தில் அமெரிக்க விமானிகள் தங்கள் பாஸ்போர்ட் முதலானவற்றைச் சரி பார்த்துக் கொள்கின்றனர். 6. லண்டனில் பங்களா தேச கமிட்டி தீவிரமாகச் செயல்படுகிறது.



இன்ப சங்கமம்!

கடலொடு வானமாய் யாம்
இருந்தோம்; — நாங்கள்
காதல் சுகத்தை உணரவில்லை — பின்
கடலும் கரையுமாய ஆகிவிட்டோம்; — பெரும்
காதல் இறுகத் தழுவிக்கொண்டோம்!

மேகமும் தென்றலு மாய்
இருந்தோம்; — காத
மென்மையை நாங்கள் உணரவில்லை! — பின்
மேகமும் குன்றுமாய் ஆகிவிட்டோம்; — இடி
மின்ன இருவரும் பின்னிக் கொண்டோம்!

கவிஞனும் சொல்லுமாய் யாம் இருந்தோம்;
— உண்மைக்
காதல் சுகத்தை உணரவில்லை! — பின்
கவிஞனும் பாடலும் ஆகிவிட்டோம்; — தெய்வக்
கற்பனை வானில் பறந்து சென்றோம்!

அருவியும் சாரலுமாய் யாம் இருநதோம் ;
— காதல்
அருமையை நாங்கள் உணரவில்லை! — பின்
அருவியும் பாறையும் ஆகிவிட்டோம்; — காதல்
அரங்கொடு ஜல தரங்கபிட்டோம்!

குழலொடு காற்றென யாம் இருந்தோம் ;
— காதல்
குளுமையை நாங்கள் உணரவில்லை! — பின்
குழலும் இதழுமாய் ஆகிவிட்டோம்; — இன்பம்
குழறிடும் தேனைப் பிழிந்து தின்றோம் !

பிறந்த இடமே சிறந்திடினும் — காதல்
பெருகிடவே அது என்ன செய்யும்? — அ..
பிறந்த இடத்தும் புகும் இடமே — காதல்
பெண்களுக்காம் இன்ப சங்கமம்காண் !



தமிழழகன்



சாதாரண ஆண்டில் சிறப்புச் சிறுகதைகள்

சாதாரண ஆண்டில் 'கல்கி'யில் இடம் பெற்ற சிறப்புச் சிறுகதைகளுள் மிகச் சிறந்த ஒன்றினைத் தேர்ந்தெடுப்பது குறித்து வாசகர்களின் அபிப்பிராயங்களையும் கோரியிருந்தோம்.

பல்வேறு சிறப்புச் சிறுகதைகளுக்கும் ஆதரவு தெரிவித்து வந்த கடிதங்களின் எண்ணிக்கைகள் வருமாறு:

1.	களிமண் கால்கள்	...	20
2.	பொய்மான்	...	41
3.	உயிருக்குப்பின் உறவு	...	28
4.	முடிச்சுக்கள்	...	28
5.	கொடிமலர்	...	25
6.	அதிர்ஷ்டம்	...	41
7.	இரண்டு காலைப் பொழுதுகள்-வாசவன்	...	105
8.	நப்பசலையின் காதல் -கோவி. மணிசேகரன்	...	108

வாசகர்கள் எழுதியுள்ள கடிதங்களின் அடிப்படையில் விசேஷப் பரிசான ரூபாய் ஆயிரத்தை திரு வாசவன் எழுதிய 'இரண்டு காலைப் பொழுதுகள்' என்ற சிறுகதைக்கும், திரு கோவி. மணிசேகரன் எழுதிய 'நப்பசலையின் காதல்' என்ற சிறுகதைக்கும் சமமாகப் பகிர்ந்து அளிக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

இவ்விரு கதைகளைத் தேர்ந்தெடுத்து வந்த கடிதங்களுள் ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் மூன்று கடிதங்களே அதிகம் பெற்றிருந்தமையால் விசேஷப் பரிசைப் பகிர்ந்தளிப்பதே சரி என்ற முடிவுக்கு வந்தோம்.

பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்கு எங்கள் பாராட்டுக்கள். வாசகர்கள் இந்தப் பரிசுத் திட்டத்தில் காட்டிய ஈடுபாட்டுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். வாசகர்களின் விமரிசனங்கள் சில இங்கு இடம் பெறுகின்றன.

கோவி. மணிசேகரன்



வாசவன்



★ பெண்ணின் கற்பும் அன்பும் அன்று தொட்டுச் சாதித்த பெருமைகளையெல்லாம் மனத்தில் கொண்டு இப்பெருமைகள் சிரஞ்சீவியாக வாழ வேண்டுமே என்ற ஆதங்கத்தோடு ஒரு சமுதாயப் பிரச்னையை அலசுகிறது வாசவனின் "இரு காலைப் பொழுதுகள்". நடுத்தரக் குடும்பத்தில் பெண் சம்பாதிப்பது என்பது தவிர்க்க முடியாததாகிவிட்ட நிலையில், மனிதாபிமானத்தின் உன்னதத்துக்கு அறிகுறியாக நிற்கும் மீராவும் தந்தையும் ஒரு புறமும், மனித உணர்ச்சிகளின் தாழ்ச்சிக்கு அறிகுறியாக நிற்கும் தாயும் தனயன்மார்களும் இன்னொரு புறமும் நின்றுகொண்டு மோதுகிறார்கள்! பயன்? தீர்வு ஏற்பட்டு விடுகிறது: கதையும் உயர்ந்து விடுகிறது!

-குமாரி வே. கோமதி.

★ தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டெரித்துக் கொண்டு, வாழவும் பிடிக்காமல் சாகவும் முடியாமல் குடும்ப பாரத்தைச் சுமந்து தள்ளாடிக் கொண்டிருக்கும் எத்தனையோ மீராக்களை நாம் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பார்க்கிறோம். இன்றைய சமூகத்தில் ஆழமாய் வேர் விட்டுப் புரையோடியிருக்கும் இந்தச் சீர்கேட்டை ஆசிரியர் வாசவன் இந்தக் கதையின் மூலம் நம் கண் முன்பு விண்டு காட்டியிருக்கிறார். "இருபத்தாறு வயது வரை உனக்கு ஒரு வரன் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்க யோக்கியதை இல்லாத என்னால் 'போகாதே' என்று எப்படிச் சொல்ல முடியும்" என்ற அப்பாவின் வார்த்தைகள் நம் நெஞ்சை நெகிழ வைக்கின்றன. "அந்தத் தர்ம வேலியைத் தாண்டி என்னால் போக முடியவில்லை" என்ற மீராவின் மொழிகள் ஒரு பாரதப் பெண்ணின் பண்பை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன.

சரோஜா ராமசந்திரன்

★ தன்னைச் சேர்ந்தவர்கள் தனக்கு ஒரு வாழ்க்கையைத் தேடித் தருவார்கள் என்று எதிர்பார்த்து ஏமாந்து போன ஒரு பெண்ணின் எதிர் நடவடிக்கையும், அந்தப் பெண்ணுடைய தந்தையின் பாச எதிரொலியும்தான் கதையின் கரு.

அளவான அழுத்தமான உரையாடல்கள், தெளிவான, கோவையான நிகழ்ச்சிகளின் அமைப்பு, ஆற்றொழுக்கு நடையில் அபாரமான கருத்துக்கள், முழுமையான கதாபாத்திரங்கள், பாரதப் பண்பாட்டை யொட்டிய நல்ல முடிவு... ஓ! யதார்த்தமான சிறந்த கதைக்கு வேறு என்ன வேண்டும்?

கற்கண்டு இனிக்கத்தானே செய்யும்! சாதாரண ஆண்டில் வெளியான அசாதாரணக் கதையை எழுதிய வாசவனைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன்; உளமாரப் பாராட்டுகிறேன்.

- பாமா கோபாலன்

★ நப்பசலையின் காதல் என்று ஆசிரியர் அளித்திருக்கும் தலைப்பு, தமிழா அல்லது திருமுடிக்காரியின் மேல் கொண்ட அன்பா என்ற போட்டியே. எது வெற்றி பெற்றது என்பது கதையின் முடிவிலே தெரிகிறது.

மலையமானிலும் தமிழைத் தேர்ந்தெடுத்ததால் நப்பசலையின் மொழிப் பற்று தெளிவாகிறது. மிலாடுடையானை நெஞ்சிலிருந்து நீக்கவோ, ஒதுக்கவோ இன்றி, தன்னில் இரண்டறக் கலந்துவிட்ட தன்மையைக் காரி தெளிவுறுத்தும் பொழுது கற்புடைத்தன்மை புலனாகிறது. அவ்வாறு கற்பில் ஓங்கி நின்ற

தால், நப்பசலையால் பேராண்மை மிக்க பெரு வீரர் என்று அழைக்கப்பெறும் பாக்கியம் பெற்றான். கொடைத்தன்மையையும் காத்துக் கொண்டான். இத்தனை கருத்துக்களையும் இச்சிறு கதையில் ஓடவிட்டிருக்கிறார் கோவி. மணிசேகரன். நப்பசலையின் காதல் என்றே தலைப்பெடுத்து, காதல் யார் மேல் என்று சொல்லாமல் விட்டிருப்பது சிறந்த உத்தி.

கா. உ. உமாமகேசவரி

★ தமிழ் நாட்டில் இல்லையெனாது வாரி வழங்கிய கடையேழு வள்ளல்களில் ஒருவரான காரியின் வள்ளல் தன்மை, ஏகபத்தினி விரதம் ஆகியவற்றைப் புகழாதவர்கள் இப்புவியில் யாருமில்லை. அவனுடைய பத்தினி விரதத்துக்குக் கேடு விளைவிக்க விதி நப்பசலையார் ரூபத்தில் சிறிது விளையாடியது. நப்பசலையாரின் உடலில் இரண்டறக் கலந்த தமிழை எவ்வாறு பிரிக்க முடியாதோ அவ்வாறே காரியின் ஊனில் இரண்டறக் கலந்த மிலாடுடையாளைப் பிரிக்க இயலாது என்பதைத் தன் சொற்றிறத்தால் நப்பசலையாரிடம் நவின்று தன் பத்தினி விரதத்தைக் காப்பாற்றி அழியாப் புகழ் அடைந்தான், காரி.

- எஸ். இசக்கியம்மாள்

★ நெருடலான கதையமைப்பு ; அதையும் நேர்படச் சொல்லும் போக்கு ; மளமளவென்று வந்து விழும் சொல் வரிசை; வழுக்கிச் செல்லும் நடை; நடுத்தர, உயர்தர வகுப்பாரின் அர்த்தமற்ற பழக்க வழக்கங்களின் விலாவில் ஓர் இடி; இடையிடையே தத்துவ முடிச்சு; மாயா என்ற கதைத் தலைவியின் பெயரில் அமைந்த நயம்; இறுதியில் மாயை விலகித் தம்பதியர்க்கு ஞானம் பிறக்கும் நலம்—இவையெல்லாம் சேர்ந்து பொன்னித் துறைவனின் 'முடிச்சுகளை'ச் சிறப்புச் சிறுகதையாக்கி விடுகின்றன.

ந. சுலோசனா

★ ஒரு மத்தியதரக் குடும்ப அங்கத்தினருடைய மனத்தின் அப்பட்டமான பிரதிபலிப்பு, கதை முழுவதிலும் விரவி நிற்கும் காரத் தன்மையுடன் கூடியதொரு நகைச்சுவை, (Caustic humour) கையில் கிடைத்த பொருள் கையை விட்டு நழுவி விடுமோ என்ற கதாநாயகனின் தவிப்பைச் சொல்லாமல் கட்டிக்காட்டும் நயம் இவையெல்லாம் சேர்ந்து பொன்னித்துறைவனின் படைப்பை நம் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியச் செய்து விடுகின்றன.

ஆர். கோமதி

★ எடுத்துக்கொண்ட கருத்தாலும், பாத்திரங்களின் உயர்வாலும் மனத்தை நிறைத்து நிற்பது குணசீலனின் 'கொடிமலர்'. புகழை விரும்பாத சேதுமாதவனைப் பற்றியும், புகழுக்காக ஒரு சிறு தவற்றைச் செய்து விட்டுப் புழுப் போலத் துடிக்கும் பாஸ்கரனைப் பற்றியும் அறிகிறோம். இறுதியில் பாஸ்கரன் சேதுவிடம் மன்னிப்புப் பெறும் கட்டத்தில் நம் உள்ளம் அவனுக்காகப் பரிதாபப்படுகிறது. பொதுவாக மனிதனிடம் காணப்படும் பலவீனத்தைக் 'குணசீலன்' சிறப்பாகக் கையாண்டிருக்கிறார். இது ஒரு முத்து என்பதில் ஐயமில்லை.

டி. கே. சுகந்தா.

★ வரதட்சிணைக் கொடுமை பல காலமாக நம்மவரிடையே வளர்ந்துவிட்ட ஒன்றுதானென்றாலும், அது எப்படிப்பட்ட இழிவான சமுதாய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை வ. சா. நாகராஜன் காட்டும் சிறப்பு ஒன்றே போதுமே. இளம் பெண்களுடன் நெருங்கிப் பழகி அவர்கள் மனங்களில் சலனத்தை ஏற்படுத்திவிட்டுப் பின் அவர்களை அடியோடு மறந்துவிடுவதை இக்கால இளைஞர்களில் சிலர் பொழுது போக்காக வைத்துக் கொண்டுள்ளனர் என்பதை மறைமுகமாகக் கண்டிக்கவும் செய்கிறார். பெண்கள் வேலை பார்த்து வீட்டைப் பராமரிப்பது என்பது மிக அத்தியாவசியமாகிவிட்ட இக்காலத்தில் ஆண்களுக்கிடையே வேலை செய்யும் பெண்கள் எவ்வாறு மன உறுதியற்றவர்களாய், வெளிப் பகட்டில் மனம் பறி கொடுத்துவிடும் பேதைகளாய் இருக்கின்றனர் என்பதைப் படிப்பவரிடம் விரசம் என்ற எண்ணம் தோன்றாத விதத்தில் அழகாகச் சித்திரித்துள்ளார். எய்தவன் இருக்க அம்பை நொந்து என்ன பயன்? கல்யாணியைப் போன்ற பேதைப் பெண்களும், அவளைக் காதலிப்பது போல் பாவனை செய்து ஏமாற்றிய இளைஞனைப் போன்ற ஆண்களும் இருப்பதற்குக் காரணமே சமுதாயத்தின் அடித்தளத்தில் ஆழப் பதிந்துள்ள வரதட்சிணைக் கொடுமையே எனக் கூறி, அக்குறையைக் களையாவிடில் கல்யாணியைப் போல் கானல் நீர் என நம்பி ஏமாறும் பெண்கள் தோன்றுவதைத் தவிர்க்கமுடியாது என எச்சரித்து, 'பொய் மா'னை ஒரு சமுதாயச் சீர்திருத்தக் கதையாகவே வடித்துள்ளார்.

என். ஐயம்

★ மனைவியை ஏமாற்றிவிட்டதாகக் கணவன் நினைக்கிறார். மகளை ஏமாற்றிவிட்டதாகத் தாயார் நினைக்கிறாள். ஆனால் ஒருவராலும் ஒருவரையும் ஏமாற்ற முடியவில்லை. எல்லா இடங்களிலும் உண்மை வைரம்போல் இருந்து கொண்டு பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஏமாற்ற நினைத்தவர்கள் ஏமாந்தார்கள். ஏமாற்ற நினைக்காத மகள் ஏமாறவில்லை. இதுதான் உண்மையின் லட்சணம்.

அசல் நன்றாக இருந்தால்தானே நகல் நன்றாக இருக்கும்? இங்கு அசல் கெட்டுவிட்டது. ஆனால் நகல் நன்றாக இருக்கிறது. இரும்புக் கால்களில் உறுதியாக நிற்பவர்களைப் பார்த்து, களிமண் கால்களில் நிற்பவர் சந்தேகிக்கிறார், பயப்படுகிறார். அது இயல்புதானே! கெட்டுப் போனவர்கள் பிறரையும் கெட்டவர்களாகத் தானே எண்ணுவார்கள்? ஜி. எஸ். பாலகிருஷ்ணன் எழுதிய ''களிமண் கால்கள்'' என்ற கதையின் கருத்து இதுதான். கதையின் கருத்துக்கேற்ப, அதன் தலைப்பு சிறப்பாக அமைந்துவிட்டது.

எஸ். அய்யாசாமி

★ அதிர்ஷ்டத்தை நம்பி லாட்டரிச்சீட்டை வாங்கி மனக்கோட்டை கட்டிக்கொண்டு தன் குழந்தைகள் படிப்பை அசட்டையாக விடுவது, சமயத்தில் உதவிய நண்பரைக் கடிந்து கொள்வது, உத்தியோகம் வாங்கிக் கொடுத்தவரை உதாசீனப்படுத்திப் பேசுவது, இரவு தூக்கமின்றிப் புரள்வது, மனைவி தன் கணவர் மனம் மாறிவிட்டதாக நினைப்பது போன்ற சம்பவங்களைத் திறம்படக் கையாண்டிருக்கிறார் எஸ். கிருஷ்ணமூர்த்தி. 'அதிர்ஷ்டம்' காலத்துக்கு ஏற்ற கதை.

என். கஸ்தூரி.

★ உயிருடன் இருக்கும்பொழுது அந்த உயிரை மதிக்காதவர்கள் அந்த உயிர் அழிந்த பிறகு, கர்மம் சுற்றும் என அஞ்சியும் கௌரவத்துக்காகவும் தெய்வமாக மதித்து, வழிபட்டு உறவு முறை கொள்கின்றனர். இந்த உலக உண்மையை ''உயிருக்குப் பின் உறவு'' என்ற தமது கதையில் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார் உமா குருமூர்த்தி.

ஆர். புண்ணியவதி

பன்னிரண்டாம் அத்தியாயம்

மறைந்த கடிதம்

மாஜி ஸப் ஜட்ஜ் அய்யாசாமி முதலியார் ஐம்பத்தைந்து பிராயம் வரையில் பொருட் செல்வம் தேடிய பிறகு, இப்போது அருட்செல்வம் ஈட்டுவதில் முனைந்திருந்தார். சைவத் தொண்டர் மகாநாடுகளிலும், மற்றும் சிவனடியார் திருக்கூட்டங்களிலும் அவரைத் தவறாமல் முன்னணியில் பார்ப்பது சாத்தியமாயிருந்தது. ''வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்னும் விந்தை மனிதர்'' கூட்டத்தை அவர் சேர்ந்தவர் அல்ல. சைவத் திருக் கூட்டங்களுக்கு அவர் தமது இல்லக் கிழத்தியையும் குழந்தைகளையும் அழைத்துப் போவதுண்டு.

பேரூரில் நடந்த சைவத் தொண்டர் மகாநாட்டுக்கு அவர் தமது குடும்பத்துடன் சென்று, ஞானியார் சுவாமிகளின் அமுத



மகுடபதி

அமரர் கல்கி

மொழிகளையும், இன்னும் பல சைவத் திருவாளர்களின் அரிய சொற்பொழிவுகளையும் செவிகளால் பருகி விட்டுக் கோயமுத்தூருக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

கோயமுத்தூரில் அய்யாசாமி முதலியாரின் பங்களா அமைதியான சுகவாசத்துக்கென்றே அமைந்ததென்று சொல்லலாம். தென்னிந்தியாவில் பல இடங்களிலும் உத்தியோகம் பார்த்த அய்யாசாமி முதலியார், மயிலாப்பூரில் அவருக்குச் சொந்த வீடு இருந்தும், கோயமுத்தூரின் சீதோஷ்ண ஸ்திதியை முன்னிட்டு, அந்நகரைத் தமது வாசத்துக்குத் தேர்ந்தெடுத்தார். அப்படிப்பட்டவர், நல்ல பங்களாவாகத் தேர்ந்தெடுத்ததில் வியப்பில்லை அல்லவா?

அந்த விஸ்தாரமான அழகிய பங்களாவில், அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் ஒரு தனி அறை இருந்தது. அவற்றில், பங்களாவின் முகப்பு அறைகள் இரண்டில் ஒன்று பங்கஜத்தினுடையது. அய்யாசாமி முதலியாரின் அறைக்கு அடுத்தபடியாகப் பங்கஜத்தின் அறையில்தான் புத்தகங்கள் அதிகமாயிருக்கும். ஐந்தாவது பாரத்தில் பங்கஜத்தின் பள்ளிக்கூடப் படிப்பை முதலியார் நிறுத்திவிட்டார். அதற்குப் பிறகு அவளுடைய அறிவை விசாலிக்கச் செய்யும் பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்டிருந்தார்.



ஒரு பக்கத்தில் முதலியார் பங்கஜத்துக்குச் சைவ சமய அறிவையும், தமிழ் இலக்கியத்தின் சுவையையும் ஊட்டிக் கொண்டிருக்கையில், மற்றொரு பக்கம், அச் செல்வி சர்க்குலேடிங் லைப்ரெரியிலிருந்து நாவல்கள் வாங்கி வாசித்துத் தள்ளிக் கொண்டிருந்தாள். இது வரையில் சுமார் முந்நூறு நாவல்கள் வாசித்திருந்தபடியால், தானே ஒரு நாவல் எழுதவும் ஆரம்பித்திருந்தாள். அதில் முக்கால் பங்கு எழுதி, கதாநாயகனையும், கதாநாயகியையும் மிகவும் ரசமான ஒரு கட்டத்தில் கொண்டு விட்டிருந்தாளாதலால், பேரூரில் அவள் செவிகள் ஒரு பக்கம் சைவச் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கொண்டே இருக்கையில், இன்னொரு பக்கம் அவளுடைய மனம் வீட்டில் விட்டு வந்த நாவல் கையெழுத்துப் பிரதிக்குத் திரும்பத் திரும்பப் போய்க் கொண்டிருந்தது ரசமான விஷயமாகும்.

எனவே, அன்று காலையில் பேரூரிலிருந்து திரும்பிப் பங்களாவுக்கு வந்து சேர்ந்ததும், பங்கஜம் அவசர அவசரமாகத் தன்னுடைய அறையைத் திறப்பதற்குப் போனாள். பங்களாவில், தோட்ட வேலை, மேஜை நாற்காலிகளைத் துடைக்கும் வேலை எல்லாவற்றுக்கும் மருதக் கவுண்டன் என்று ஒருவன் இருந்தான். அவன், கையில் மேஜை துடைக்கும் துணியுடன் பங்கஜத்தின் பின்னோடு வந்து, ''சாவியை இங்கே கொடு, அம்மா! நான் திறக்கிறேன்'' என்றான்.

''எல்லாம் நானே திறந்து கொள்கிறேன்'' என்று பங்கஜம் பூட்டைத் திறந்தாள். வழக்கம் போல் சுலபமாய்த் திறக்காமல், சாவி சுழல்வதற்குக் கஷ்டப்பட்டது.

''இது என்ன, யாராவது பூட்டை மறு சாவி போட்டுத் திறந்தார்களா?'' என்று கேட்டுக் கொண்டே, பங்கஜம் அழுத்தித் திறந்தாள். பூட்டும் திறந்து கொண்டது.

மருதன், ''அதென்ன, அம்மா, அப்படிச் சொல்றே? இங்கே எவன் மறு சாவி போட்டுத் திறக்கிறவன்?'' என்று கேட்டுக் கொண்டே பங்கஜத்தின் பின்னோடு அறைக்குள் நுழைந்து மேஜை நாற்காலிகளை மளமளவென்று தட்டத் தொடங்கினான்.

''ஒரே தூசாயிருக்கிறதே? தட்டின அப்புறம் வந்தா நல்லாயிருக்குமே?'' என்றான் மருதன். அப்போது அவனுடைய கண்கள் அறையின் நாலா பக்கமும் சுழன்று சுழன்று பார்த்தன.


பங்கஜம் அவன் சொன்னதையும் கவனிக்காமல், தூசையும் பொருட்படுத்தாமல், தன்னுடைய நாவல் கையெழுத்துப் பிரதியை ஆவலாகப் புரட்டிப் பார்க்கத் தொடங்கினாள்.

மருதன், சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே வந்தவன், வாசல் ஜன்னலண்டை திடீரென்று குனிந்து எதையோ எடுத்தான்.

அது பங்கஜத்துக்குத் தெரிந்துவிட்டது. அவன் எடுத்தது வெள்ளையாய் ஏதோ ஒரு கடுதாசி மாதிரி இருந்தது.

''அது என்ன, மருதா, இங்கே கொண்டு வா!'' என்றாள்.

''ஒன்றுமில்லே, அம்மா! குப்பைக் கடுதாசி'' என்று சொல்லிக் கொண்டே மருதக் கவுண்டன் கடுதாசியைக்கையில் கசக்கினான்.



''கொண்டு வா, என்றால் கொண்டு வா!'' என்று பங்கஜம் வீடு இடியும் படி கத்தினாள். அவள் கண்களில் தீப்பொறி பொரிந்தது.

முன்னொரு தடவை பங்கஜம் கதை எழுதியிருந்த காகிதம் ஒன்று பறந்து போய்த் தரையில் விழுந்து, அதை வீடு கூட்டுகிறவள் குப்பைத் தொட்டியில் கொண்டு போய்ப் போட்டு விட்டாள். அது முதல், எந்தக் காகிதமானாலும் அதை வேலைக்காரர்கள் தொட்டால், பங்கஜத்துக்குப் பிரமாதமான கோபம் வந்து விடும்.

மருதன், ''ஏன் அம்மா கோவிச்சுக்கிறே? இந்தா!'' என்று கொடுத்தான்.

பங்கஜம், அதை வாங்கிப் பிரித்துப் படித்தாள். படிக்கும்போதே அவளுடைய முகத்தில் எல்லையற்ற ஆச்சரியத்தின் அறிகுறி உண்டாயிற்று.

''முட்டாள்! இதைப் போய்க் கசக்கி எறியப் பார்த்தாயே?'' என்று சொல்லிக் கொண்டே அவள் மருதன் இருந்த இடத்தை நிமிர்ந்து பார்த்தாள். அங்கே அவனைக் காணவில்லை. பங்கஜம் கடிதம் படிக்கும் போதே அவன் நழுவி விட்டான்.

''மருதா! மருதா!'' என்று கூப்பிட்டுவிட்டு, மறுபடியும் ஒரு தடவை கடிதத்தைப் படித்தாள். உடனே, அந்த அறையிலிருந்து வெளிக்கிளம்பி, தகப்பனாரின் அறையை நோக்கிச் சென்றாள். வழியில் தாழ்வாரத்தில் மருதன் எதிர்ப்பட்டான்.

''இந்தக் காகிதம் எப்படியடா வந்தது? யார் என் அறையில்



போட்டார்கள்?'' என்று கோபமாக அவனைக் கேட்டாள்.

''எனக்குத் தெரியாது. அம்மா! நான் போட்டிருந்தால் அதை எடுத்துக் கசக்குவேனா? எந்த நாய் போட்டதோ!'' என்றான்.

பங்கஜம் விரைந்து அப்பாவின் அறைக்குள் சென்றாள். அங்கே அப்பாவைக் காணவில்லை.

''மருதா! அப்பா எங்கே?'' என்று கத்தினாள்.

''ஸ்நானம் செய்யறாங்க!'' என்றான் மருதன்.

இதற்குள் சமையற்கட்டிலிருந்து, ''பங்கஜம்! காப்பி சாப்பிட்டுவிட்டுப் போ!'' என்று தாயாரின் குரல் கேட்டது.

பங்கஜம் கடிதத்தை முதலியாரின் மேஜையின் மேலிருந்த பெரிய புராணத்துக்குள் வெளியில் கொஞ்சம் தெரியும்படி நீட்டி வைத்துவிட்டு, சமையலறைக்குச் சென்றாள். அந்தக் கடிதத்தைப் பற்றித் தாயாரிடம் சொல்ல அவள் விரும்பவில்லை.

சற்று நேரத்துக்கெல்லாம், பங்கஜம் காப்பி சாப்பிட்டுவிட்டு முதலியாரின் அறைக்கு வந்தபோது அங்கே அவர் இருந்தார். பங்கஜம் பெரிய புராணத்தைப் புரட்டினாள்; மறுபடியும் புரட்டினாள்; மறுபடியும் மறுபடியும் புரட்டினாள்.

தகப்பனாரைப் பார்த்து, ''அப்பா! இந்தப் புத்தகத்துக்குள் ஒரு கடிதம் வைத்தேனே, எடுத்தீர்களா?'' என்றாள்.

''நான் எடுக்கவில்லையே? என்ன கடிதம்?''

''இது என்ன அதிசயமாயிருக்கே!'' என்று சொல்லிக் கொண்டே பங்கஜம் மேஜை மேலிருந்த திருமந்திரம், திருவாசகம், திருக்குறள், கலித்தொகை கம்பராமாயணம் முதலிய புத்தகங்களையும் புரட்டத் தொடங்கினாள். ஒன்றிலும் அகப்படவில்லை.

''இதென்ன மாயமாயிருக்கே? அதற்குள் எப்படிப் போயிருக்கும்?'' என்றாள் பங்கஜம்.

''நீ எழுதுகிற நாவலில் யாராவது துப்பறிகிறவன் வருகிறானே, இல்லையோ? அவனை அழைத்துக் கொண்டு வந்து கண்டுபிடிக்கச் சொல்லு. என்ன கடிதம், என்ன விஷயம் என்று எனக்குத் தெரியப்படுத்துவது உசிதமாயிருந்தால் அவ்விதமே செய். இல்லாவிட்டால் உன்னுடைய அறைக்குப் போய் நாவலின் அடுத்த அத்தியாயத்தை எழுது!'' என்று முதலியார் தமாஷ் செய்தார்.

''நாவலாவது, ஒன்றாவது, அப்பா! நாவலில் நடப்பதையெல்லாம் காட்டிலும் அதிசயமான சம்பவம் நடந்திருக்கிறது. செந்திருவை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதோ, இல்லையோ?''

''ஞாபகம் இல்லாமல் என்ன? அதுகிட்டேயிருந்து கடிதம் வரவில்லை என்றுதான் நீ உருகிக் கொண்டிருந்தாயே! கடிதம் அதனிடமிருந்து வந்ததுதானா?''

''ஆமாம், அப்பா! ஆனால், கடிதத்தில் எழுதியிருந்த விஷயம் ரொம்ப ஆச்சரியம்.''

''ரொம்ப ஆச்சரியமா? ரொம்ப ரொம்ப ரொம்ப ஆச்சரியமா?''

''விளையாட்டுக்குச் சொல்லவில்லை, அப்பா! இரண்டு மூன்று தடவை நான் வாசித்தேன்; அதனால் அப்படியே ஞாபகம் இருக்கிறது. அதில் எழுதியிருந்தபடியே உங்களுக்கு எழுதிக் காட்டி விடுகிறேன்'' என்று கூறி, மளமளவென்று காகிதமும் பேனாவும் எடுத்துப் பின்வருமாறு எழுதினாள்:

''என் உயிரினுமினிய அருமைத் தோழி பங்கஜத்துக்குச் செந்திரு அன்புடன் எழுதிக் கொண்டது. இரண்டு மாதங்களுக்கு முன்பு நீ போட்ட கடிதம் கிடைத்தது. அதற்கு நான் பதில் போடாததற்குக் காரணம் நான் ஜெயிலிலேயே இருந்ததுதான். மூன்று வருஷங்களாய் நான் ஜெயிலிலேதான் இருந்து வருகிறேன். எனக்கு ஒரு பெரிய ஆபத்து வருவதற்கு இருக்கிறது. அதனால் இன்று காலையில் ஜெயிலிலிருந்து தப்பித்துக் கொண்டு ஓடி வந்து விட்டேன். இந்தக் கடிதம் கொண்டு வருகிற பாட்டனுக்கு என்னிடம் ரொம்பவும் அபிமானம். அது மற்ற விவரம் எல்லாம் சொல்லும். நீ உடனே புறப்பட்டு வந்து என்னை அழைத்துப் போகவும். உன்னிடமும் மாமாவிடமும் யோசனை கேட்க வேண்டியிருக்கிறது. உங்களைத் தவிர எனக்கு வேறு கதி கிடையாது. உங்கள் வீடு தெரியாதபடியால் பாட்டனை அனுப்பியிருக்கிறேன். ஊரில் கலாட்டாவாக இருப்பதால், உடனே நீயாவது மாமாவாவது வந்து என்னை அழைத்துப் போகவும். ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாக உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள தோழி,
செந்திரு''

மேற்கண்டவாறு பங்கஜம் எழுதி, முதலியாரிடம்கொடுத்தாள். முதலியார்

அதைப் படித்துவிட்டு, ''இது என்ன வேடிக்கை, குழந்தை! நீ எழுதும் நாவலில் யாராவது கதாநாயகி இப்படிக் கடிதம் எழுதுகிறாளா?'' என்று கேட்டார்.

பங்கஜம் சிறிது ஆத்திரத்துடன், ''இல்லவே இல்லை, அப்பா! சத்தியமாய்ச் சொல்கிறேன். நிஜமாகவே வந்த கடிதந்தான்'' என்றாள்.

''அதைச் செந்திருதான் எழுதினான் என்று உனக்கு எப்படித் தெரியும்?''

''என் தோழியின் கையெழுத்து எனக்குத் தெரியாதா, அப்பா !''

முதலியார் சிறிது சிந்தனையில் ஆழ்ந்தார். ''மேலே விலாசம், தேதி, போட்டிருந்ததா?'' என்று கேட்டார்.

''கோயமுத்தூர் என்று போட்டிருந்தது. தேதி போட்டிருந்ததாக ஞாபகம் இல்லை.''

''கடிதம் எங்கேதான் போயிருக்கும்? ஆனால் உன்னிடம் அது எப்படிக் கிடைத்தது ? அதைச் சொல்லவில்லையே ?'' என்றார் முதலியார்.

பங்கஜம் விவரமாகச் சொன்னாள்.

''மருதா! மருதா!'' என்று முதலியார் கூப்பிட்டார். மருதன் வரவில்லை. மருதன் வீட்டிலேயே இல்லை என்று தெரிந்தது.

* * *

அப்போது மருதன், அந்தப் பங்களா இருந்த சாலையின் முனைக்கு அப்பால் ஒதுங்கி நின்ற ஒரு மோட்டார் வண்டியின் டிரைவரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தான். டிரைவர் அதை வாங்கிக் கொண்டு அவனிடம் ரூபாய் ஐம்பது நோட்டாகக் கொடுத்தான்.

''இந்த ஐம்பது ரூபாய் என்னத்துக்கு ஆச்சு? எனக்கு வேலை போய் விடும் போலிருக்கு'' என்றான் மருதன்.

''வேலை போனால் நேரே கள்ளிப்பட்டிக் கவுண்டர் வீட்டுக்கு வந்துவிடு. வேலை கொடுப்பாரு !'' என்றான் டிரைவர்.

(தொடரும்)

படித்துப் பாருங்கள்

வளரும் இந்தியா (தமிழ்நாடு)

இந்தியாவின் சென்ற இருபது ஆண்டு பொருளாதார முன்னேற்றத்துக்கு ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தோடு ஏராளமான நிதியைக் கடனாகவும் மானியமாகவும் அளித்து உதவிய பல நாடுகளில் முதலிடம் வகிப்பது அமெரிக்கா. நம் நாட்டுக்கு அமெரிக்கா அளித்துள்ள நிதி உதவி இப்போது கிட்டத்தட்ட ரூ. 7500 கோடி. இதுவரையில் அயல்நாடுகளிலிருந்து பெற்றுள்ள சுமார் 13,700 கோடி ரூபாய் உதவியில் அமெரிக்காவின் பங்கு 56.5 சதவிதமாகும். அதாவது பாதிக்கு மேல். இந்த உதவியை நன்றியுடன் பெற்றுக் கல்வி, விவசாயம், தொழில்கள் போன்ற பல்வேறுதுறைகளில், நாட்டின் முன்னேற்றத்துக்காக நாம் பயன்படுத்தி வந்திருக்கிறோம்.

இந்தத் துறைகளில் அமெரிக்க உதவியுடன் தமிழ் நாடு அடைந்துள்ள முன்னேற்றங்களைப் பல கோணங்களிலிருந்து விளக்குகிறது இச்சிறு புத்தகம். வண்ணப் படங்களுடனும், கண்கவர் புகைப்படங்களுடனும் நாம் அடைந்து வரும் முன்னேற்றச் சிறப்புக்களை எளிதில் உணர்ந்து பாராட்டும் வகையில் கவர்ச்சிகரமாக இச்சிறு புத்தகம் விவரிக்கிறது.

கிடைக்குமிடம்: அமெரிக்கத் தகவல் நிலையம், சென்னை -- 6.

எம். எல். ஏ.

அமரக் கோட்டையின் தெருவெல்லாம் தேர்தல் முழக்கம். தேர்தலில் பழுத்த பழமான நீலமேகம் தம் தேர்தல் சின்னமான யானையைக் காட்ட, கோவில் யானையையே அலங்கரித்து மாபெரும் ஊர்வலம் விட்டார். அதைக் கண்டு அவரை எதிர்த்து நின்ற சமூக சேவகி தமயந்தியோ மலைத்தாள்; கவலைப்பட்டாள். பல தேர்தல்களில் தலையிட்டு அந்தச் 'சேவை'யின் பயனாக ஒரு பங்களாவும் முப்பது ஏக்கர் நிலமும் சம்பாதித்த உடையாப் பிள்ளை, நீலமேகத்துக்குத் தேர்தல் சதியாலோசனைகள் சொல்ல ஆஜராகி விட்டார். தேர்தலில் நின்ற தமயந்திக்கும் அவளுக்கு உதவவந்த பலருக்கும் எதிராக அவரது சதித் திட்டங்களெல்லாம் உருவாகத்தான் செய்தன. ஆனால் அவை நிறைவேறாமல் முறியடிக்க நீலமேகத்தின் மகள் மல்லிகாவும், மோகனசுந்தரத்தின் மனைவி மீனலோசனியும் ஆபத்பாந்தவர்களாக வந்தார்கள். இடையில் காதலும் குறுக்கிடுகிறது. தியாக உணர்ச்சியும் செல்வாக்குப் பெறுகிறது.

தேர்தல் காலத்தில் எத்தனை தில்லுமுல்லுகள், சதிவேலைகள் நடக்கும் என்பதைத் தத்ரூபமாக இந்த 'எம். எல். ஏ.' நாவலில் சித்திரித்திருக்கிறார் நாவலாசிரியர் திரு பெரி. சோமசுந்தரம். பிரசுரம்: கலைமகள், சென்னை-4; விலை: ரூ. 3.50.

தோத்திர நூல்கள்

பல்லாண்டுகளாக ஆஸ்திகப் பெருமக்கள் கருவூலங்களாக மதித்துப் போற்றி வரும் தோத்திர நூல்களையும் பூஜா விதிகளையும் விரத அனுஷ்டானங்களையும் நாகர லிபி தெரியாதவர்களுக்கு உபயோகமாகும் பொருட்டுச் சென்னை, பி.டி. பாணி கம்பெனியார் தமிழில் சிறு சிறு நூல்களாக வெளியிட்டுள்ளனர்.

இருபத்தேழு பூஜா விதிகள் அடங்கிய நூல் **விரத கல்ப மஞ்சரி**. விலை ரூ. 2.75.

சகல சித்திகளையும் தரவல்ல **தேவி மஹாத்மியம்**. தியானம், ஆவாஹனம், கவசம் முதலியவைகளோடு ஸரஸ்வதி ஸூக்தம், நாராயணி ஸ்துதி ஆகியவைகளையும் கொண்டது. விலை ரூ. 1.75.

பஜனை செய்ய விரும்பும் பக்த சிலர்களுக்கு **பஜனோத்ஸவ பத்ததி** என்ற இந்நூல் மிகவும் பயனுள்ளதாகும். விலை: ரூ. 1.00.

பிரசுரம்: பி.டி. பாணி கம்பெனி, 17, வெங்கடாசல செட்டித் தெரு, சென்னை-5.


அழகைப் பொழியும்
அழகுசித்ரம்
தாவண்கெரே
வாயில்கள்

ராமாயணம்

ராஜாஜி

92. மங்களம்

ராமசந்திரனுடைய ஏவலின்படி விபீஷணனுக்கு லங்காபுரியில் ராஜ்யாபிஷேகம் உடனே விமரிசையாக நடத்தப்பட்டது. லங்கேசனாகப் பட்டம் சூட்டப்பட்டு விபீஷணன் நகரத்துக்கு வெளியில் பாசறையிலிருந்து ராமனிடம் ந்து வணங்கினான்.

"அரசனுடைய உத்தரவு பெற்று லங்கைக்குள் சென்று சீதைக்குச் செய்தியைத் தெரிவிப்பாய்" என்று ராமன் ஹனுமானிடம் சொல்ல, அவனும் அவ்வாறே விபீஷணன் ஆணையைப் பெற்று அசோக வனம் சென்றான்.

ஹனுமான் சீதையைக் கண்டான். பிராட்டியின் ஆனந்தம் பேச்சுக்கு இடம் தரவில்லை.

"ஏன், அம்மணி, பேசவில்லை?" என்றான் ஹனுமான்.

"பேச முடியவில்லை, என் அப்பனே! உனக்கு நான் என்ன செய்து நான் பட்ட கடனைத் தீர்ப்பேன்? உன் விவேகம், உன் வீரம், உன் மனோ பலம், உன் பொறுமை, உன் விநயம் உலகத்தில் வேறு யாருக்கு உண்டு? உனக்குச் சமானம் இந்தப் பூவுலகில் ஒருவரும் இல்லை" என்றாள். கண்களில் ஆனந்த வெள்ளம் பெருக இவ்வாறு சீதை சொன்னாள். அப்போது ஹனுமான் சிறை காத்த அரக்கிகளைப் பார்த்தான். அவர்களைக் கண்டதும் அவனுடைய பழைய கோபம் மறுபடியும் பொங்கிற்று.

சீதையைப் பார்த்து, "உம்மை வேதனை செய்த இந்தப் பாபிகளை வதம் செய்வேன். உத்தரவு அளிப்பீராக!" என்றான் ஹனுமான்.

"வேண்டாம், அப்பனே. தவறு செய்யாதவர்கள் உலகத்தில் யாரே உளர்?" என்றாள் சீதை.

ந கஸ்சித் ந அபராத்யதி

பிராட்டியின் இந்தச் சொற்களை வைணவ பக்தர்கள் அமிருதமாகப் பாவிக்கிறார்கள். தேவியின் அருள் இருக்கப் பயம் என்பது கிடையாது. எந்தப் பாபியும் பிராட்டியின் பொன்னடியை அடைந்து உய்யப் பெறலாம் என்பது சாஸ்திரம்.

"அரசனுடைய உததரவை அவர்கள் நடத்தினார்கள். அவர்கள் பேரில் என்ன குற்றம்? அரசன் மாண்டான். இவர்களை இப்போது தண்டிப்பது நியாயமல்ல" என்றாள் சீதை.

"ராமனுக்கு என்ன செய்தி கொண்டு போக உத்தரவு?" என்று ஹனுமான் கேட்டான்.

"அவரைக் காண ஆசைப்படுகிறேன். அவ்வளவே!" என்றாள்.

ராமனிடம் ஹனுமான் திரும்பிச் சென்று சீதையைத் தரிசித்து வந்த



தாகச் சொன்னான். என்ன காரணமோ ராமனுடைய முகம் கறுத்தது. கண் கலங்கிற்று. பெரும் யோசனையில் ஆழ்ந்தான். கொஞ்ச நேரங் கழித்து, "விபீஷணா! சீதையை நீராட்டிச் சகல பூஷணங்களும் தரிக்கச் செய்து அழைத்து வருவீர்" என்றான்.

செய்தியை அசோக வனத்துக்குக் கொண்டு போனதும் சீதை, "நான் இருக்கும் இந்த நிலையிலேயே போக விரும்புகிறேன்" என்றாள்.

"அப்படியல்ல, தேவி! சக்கரவர்த்தித் திருமகன் உத்தரவுப்படி செய்ய வேண்டும்" என்று விபீஷணன் சமாதானப்படுத்தினான்.

சகல பூஷணங்களும் தரித்துப் பல்லக்கில் சென்றாள் சீதை.

* * *

'சீதை வருகிறாள்' என்று தெரிந்ததும் ராமன் தன் தியானத்தினின்று விழித்தான். நடந்துபோன நிகழ்ச்சிகள் எல்லாம் அவன் மனத்தில் சமுத்திர அலைகளைப் போல் மோதின. ரோஷம், துயரம், சந்தோஷம் கலந்த நிலையில் இருந்தான்.

வானரப் படையின் அபாரமான கூட்டத்துக்கு நடுவில் சீதையைப் பல்லக்கில் எடுத்து வரும் பொழுது வானரர்கள் தேவியைப் பார்க்க ஆசைப்பட்டுப் பெருங் கூட்டமாகச் சுற்றிக் கொண்டார்கள். வானரத் தலைவர்கள் அவர்களைத் தள்ளி அப்புறப்படுத்தவும் பெருங் குழப்பம் உண்டாயிற்று.

"யாரையும் தடை செய்ய வேண்டாம். எனக்கு உதவிய இந்த வானரர்கள் என் ஆப்த நண்பர்கள் ஆவார்கள். என்னைச் சுற்றி இவர்கள் இருப்பதே அவளுக்கு மகிழ்ச்சி தரும். யாரையும் விலகச் சொல்ல வேண்டாம்" என்றான் ராமன்.

ராமனுடைய மன நிலையானது பக்கத்திலிருந்த நண்பர்கள் யாருக்கும் விளங்கவில்லை. லக்ஷ்மணனுக்குக்கூட விளங்கவில்லை.

பல்லக்கிலிருந்து இறங்கித் தரையைப் பார்த்த வண்ணமாகச் சீதாதேவி ராமனை நோக்கி நடந்தாள்.

"ஆரிய புத்திரனே!" என்று ஒரு சொல்லைச் சொல்லிவிட்டு விம்மி விம்மி அழுதாள்.

"சத்துருவை வதம் செய்தேன்; உன்னை மீட்டேன். என் க்ஷத்திரியக் கடமையைச் செய்து முடித்தேன். என் சபதம் முடிந்தது" என்றான் ராமன்.

இவ்வாறு பொருள் விளங்காத, கொஞ்சமும் எதிர்பாராத சொற்கள் வெளிவந்ததும் அல்லாமல், சக்கரவர்த்தித் திருமகனுடைய முகம் ஏனோ கறுத்தது; பிறகு இன்னும் கடுஞ் சொற்களைச் சொன்னான்.

"உனக்காக அல்ல, இந்தக் கோர யுத்தத்தை நான் நடத்தியது. என் கடமையைத் தீர்க்கத்தான் செய்தேன். உன்னை அடைந்தது எனக்கு இப்போது மகிழ்ச்சி தரவில்லை. அபவாதம் என்கிற புகை உன்னை மூடி மறைக்கிறது. இப்போது என்ன செய்யப் பிரியப்படுகிறாய்? நீ என்னை விட்டுத் தனியாகத்தான் இருக்க வேண்டும். நம்முடைய பந்துக்கள் நண்பர்கள் இவர்களில் யாருடைய பாதுகாப்பிலாவது நீ இருக்கலாம். க்ஷத்திரியனான ஒருவன், அயலான் இல்லத்தில் வெகு காலம் இருந்த தன் மனைவியை எப்படித் திரும்ப அழைத்துக் கொள்வான்? உன் யோசனை என்ன?"

சீதை ராமனை நோக்கினாள். அவள் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது: "தகாத மொழிகளைப் பேசினீர். இதயத்தைப் பிளக்கும் சொற்களைக் காதால் கேட்டேன். பாமரர்கள் சொல்லக் கூடிய சொல் ஆரிய புத்திரனுடைய வாயினின்று வந்தது. அரக்கன் என்னைப் பலாத்காரமாகத் தூக்கி வந்தான். உம்முடைய ரோஷம் உம்முடைய விவேகத்தைக் கலைத்துவிட்டது. நாதனே! நான் எந்தக் குலத்தில் பிறந்தவள் என்பதை மறந்தீர். ஜனகராஜன் என் தகப்பனார் ஆவர். அவரால் வளர்த்துப் பண்பட்டவள் நான். லக்ஷ்மணா, கட்டைகளைக் கொண்டு வருவாய். தீயை வளர்ப்பாய்!" என்றாள்.

அப்போது ராமன் செய்து வந்ததையெல்லாம் பார்த்து மகா கோபம் பொங்கிப் பொறுக்க மாட்டாமலிருந்த லக்ஷ்மணன் சீதையின் உத்தரவைக் கேட்டதும் ராமன் முகத்தைப் பார்த்தான்.

ராமன், "வேண்டாம்" என்றும் சொல்லவில்லை; மனம் இளகினதாக யாதொரு சின்னமும் காணப்படவுமில்லை.

சீதை சொன்னபடியே லக்ஷ்மணன் தீமூட்டி விட்டான். பிராட்டியானவள் தரையைப் பார்த்த வண்ணமாகக் கணவனை வலம் செய்துவிட்டு, "தெய்வங்காள்! உங்களை வணங்குகிறேன். மகரிஷி கணங்களே! உங்களை நமஸ்கரிக்கிறேன். அக்கினியே! என் பரிசுத்தத்தை நீ அறிவாய். இதோ உனக்குள் பிரவேசிக்கிறேன்" என்று சொல்லிக் கொழுந்து விட்டு எரியும் தீயில் குதித்து விழுந்தாள்.

தேவர்கள் அனைவரும் வந்து கூடி விட்டார்கள். பிரமன் பேசினான்:

"நாராயணா, ராவணனைச் சம்ஹாரம் செய்ய அவதரித்த சர்வேசுவரனே! இவள் உம்முடைய பிராட்டி லக்ஷ்மியன்றோ!" என்றான் பிரமன். எல்லோரும் துதித்த வண்ணம் நின்றார்கள். அச்சமயம் ஓர் அற்புதம் நிகழ்ந்தது.

சாக்ஷாத் அக்கினி தேவன் எரியும் நெருப்பிலிருந்து கிளம்பிச் சீதையை அப்படியே வஸ்திர பூஷணதாரியாக எடுத்து ராமனிடம் தந்தான்!

பிரமனைப் பார்த்து ராமன் சொன்னான்:

"நான் தசரதன் மகன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். நான் யார்? எங்கிருந்து வந்தேன் என்பது உங்களுக்குத்தான் தெரியும். நீங்கள்தான் சொல்ல வேண்டும்."

இவ்வாறு ராமன் பிரமனுக்குச் சொல்லிவிட்டுத் தேவியை அழைத்துக் கொண்டான்.

"சீதையே! உன் பழியற்ற புனித நிலை எனக்குத் தெரியாதா? இந்தப் பரீட்சை நான் செய்தது மக்களின் திருப்திக்காகவே. ஜனங்கள் சொல்வார்கள் அல்லவா — ராமன் 'காமத்தால் மதி இழந்தான். உலக வழக்கத்துக்கு மாறுபட்டு நடந்து கொண்டான்' — இவ்வாறு அவர்கள் எண்ணுவார்களே என்று இப்படி உன்னைச் சோதனை செய்தேன்" என்று சொல்லி ராமன் அவளை இரு கைகளையும் நீட்டி அழைத்துக் கொண்டான்.

அப்போது தசரதனும் வந்து இறங்கி, சக்கரவர்த்தித் திருமகனைத் தன் மடியில் உட்கார வைத்து ஆசீர்வதித்தான்.

"குழந்தாய்!" என்று தசரதன் சீதையை நோக்கி, "என் மகனை மன்னிப்பாய்! உலக தர்மத்தைக் காப்பதற்காக அவன் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்வாய். உனக்கு மங்களம்!" என்றான்.

இந்திரனும் வரம் தந்தான். யுத்தத்தில் ராமனுக்காக மாண்டு பிரேதங்களாகக் கிடந்த வானரர்கள் அனைவரும் உயிர் பெற்று எழுந்தார்கள்.

* * *

வனத்தில் ஆசிரமத்திலே தனியாக விட்டுப் போன தேவியை இழந்து துயரத்தில் மூழ்கி, பிறகு ராமன் தடையும் தடங்கலும் தாண்டி மகா பல பராக்கிரமம் பெற்ற அரக்கனாகிய திருடனை வதம் செய்துவிட்டு மறுபடியும் அடைந்தான். சீதையும் நாதனை அடைந்துவிட்டாள். இருவரும் விமானத்தில் அயோத்திக்குத் திரும்பிச் சென்றார்கள். கூட நண்பர்களாகிய வானர வீரர்களும் விபீஷணன் முதலியவர்களும் சென்றார்கள். ராவணனுடைய புஷ்பக விமானத்தில் மேலே வாயு மார்க்கமாகப் போய்க் கொண்டிருந்தபோது சக்கரவர்த்தித் திருமகன், தானும் லக்ஷ்மணனும் நடந்த காட்டையும், என்றும் மறக்க முடியாத எல்லா இடங்களையும் சீதைக்குக் காட்டி விளக்கிக் கொண்டே சென்றான். "அதோ பார்! உன்னை நான் அடைவதற்காக நளன் கட்டித் தந்த சேது. அதோ பார் கிஷ்கிந்தை! ஹனுமானையும், சுக்ரீவனையும் நான் நண்பர்களாக அடைந்த இடமும் இதுவே!" என்றெல்லாம் சொல்லிக் காட்டிக் கொண்டே சென்றான்.

* * *

பரத்வாஜ ஆசிரமத்தில் தங்கி அங்கிருந்து குகனுக்கும் பரதனுக்கும் முன்னதாகவே செய்தி அனுப்பினார்கள்.

அயோத்தி நகரம் ஆனந்த வெள்ளத்தில் தெப்பமாக மிதந்தது. பரதனைச் சேர்ந்து விட்டான் ராமன். கூனியும் கைகேயியும் இவனுக்காகப் பதவியை விரும்பினார்கள். விரும்பி, ஏதேதோ செய்தார்கள். அவர்கள் கோரிய பயனைக் காட்டிலும் பன்மடங்கு பெரிய மகிழ்ச்சியை யல்லவோ இப்போது அடைந்தான் பரதன், ராமனடியில் பணிந்து! எந்தக் கிரீடம் தரும் ராமன் பாதங்கள் அளிக்கும் மகிழ்ச்சியை! எந்த ராஜ்ய பதவி தரும் பரதன் அடைந்த பல்லாண்டு புகழை? 'பரிசுத்தத்தில் பரதாழ்வானுக்கு ஒப்பாகார் பெருமாள்; யோக்யதையில் பரதாழ்வானுக்கு ஒப்பாகார் பெருமாள்' — இவ்வாறு அல்லவா திவ்யப் பிரபந்தங்களில் ஸ்ரீராமனுக்கும் மேலே தைரியமாகப் பரதாழ்வானை வைத்துச் சொல்லப்படுகிறது!

ராமன் திரும்பி வரும் வரை பதினான்கு வருஷங்கள், அண்ணன் பாதுகைகளைச் சிம்மாதனத்தில் வைத்து ராஜ்யத்தைத் தொட்டுக் கொண்டு தவம் கிடந்தான் பரதன். இப்போது தந்தை தசரதன் முதலில் விரும்பிய வண்ணம் ராமன் ராஜ்ய பட்டாபிஷேகம் பெற்றதைக் கண்டு, இவ்வளவு நாள் தவம் கிடந்த பரதன், உள்ளம் பூரித்து மகிழ்ந்தான்.

ஆஞ்சநேயனைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ராமன் கையிலிருந்து பிராட்டி முத்து மாலையை வாங்கி ஹனு

மான் கழுத்தில் போட்டாள். போடும் சமயம் தேவியின் அன்பு, முகத்தில் முறுவலாகப் பூத்தது! ஹனுமானுக்கு வேறு என்ன வேண்டும்!

* * *

வால்மீகியால் பாடப்பட்ட சக்கரவர்த்தித் திருமகன் கதையைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தேன். படித்தோரும் கேட்டோரும் எல்லா பாபத்தினின்றும் கஷ்டத்தினின்றும் மீள்வார்களாக!

ஞான சாகரமான ஸ்ரீசங்கரர் சொன்னார்: தசரதன் திருமகனை நாம் துதித்து ஆராதித்துத் தியானித்து உள்ளத்தில் நிறுத்தி வைத்தோமானால் செய்த பாவங்களனைத்தும் அற்றுப் போகும். ராமாவதாரத்துக்குப் பிறகு மகா சௌலப்யமூர்த்தியாக மீண்டும் அவதரித்தான் பகவான். கோவிந்தனாக இடையர்களுடன் வாசம் செய்து வளர்ந்து பிறகு அர்ஜுனனுக்கு வார் பிடித்துக் கோல் எடுத்துத் தேர் ஓட்டினான். பார்த்தனுக்கு ஞானம் உபதேசித்துவிட்டு முடிவில் பகவான் சொன்னான்: ''நான் ஒருவனே புகலிடம் என்று அறிந்து, ஐயம் தீர்ந்த உள்ளத்துடன் என்னை அடைவாய். எல்லாப் பாபங்களினின்றும் உன்னைத் தவிர்ப்பேன். இது சத்தியம். அன்பனே கவலைப்படாதே!'' கண்ணபிரான் செய்த இந்தச் சூளுரை, நம் எல்லோருக்குமாகச் செய்த சூளுரையாகும். நம் அனைவருக்காக அர்ஜுனன் அந்த வாக்கைப் பகவானிடம் பெற்றான்.



மங்களம்

[அடுத்த இதழில் முடிவுரை]

வட்ட மேஜை

★ இக் குறிப்பிட்ட கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

லாட்டரி திட்டத்தை எதிர்க்கும் நான் இம்மாத பரிசுச் சீட்டு பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்குத் திரட்டப்படுகிறதென்று தெரிந்ததும் ஒரு சீட்டு வாங்கினேன். அதில், ''முதல்வர் கலைஞர் கருணாநிதி பிறந்த நாளை முன்னிட்டு'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட வாசகம் ஏதோ திரு கருணாநிதி தம் சொந்தப் பணத்தைத் தமது பிறந்தநாளை முன்னிட்டு மக்களுக்குப் பரிசு அளிப்பதுபோல் ஓர் எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

மக்கள் நிதி கொண்டு நடத்தப்படும் ஒரு பொதுத் திட்டத்தில் ஒரு தனி நபரின் பெயர் விளம்பரப்படுத்தப்படுவது, பொது நிதியில் குறிப்பிட்ட அந்தத் தனி நபர் உரிமை கொண்டாடுவது போலத்தானே !

தூத்துக்குடி — 2
7—6—71 இ. ஆ. தெய்வநாயகம்

தவளையை விழுங்கிய பாம்பு தத்தித் தத்திச் செல்வதுபோல் ஒரு நகைச்சுவைச் சித்திரம் 30—5—71 இதழில் இடம் பெற்றுள்ளது. ஆயின் தவளையின் முன்புறமிருந்து அதனை விழுங்கிய பாம்பு பின்நோக்கியல்லவோ தத்திச் செல்ல வேண்டும்? முன்னோக்கிப் போவது எவ்வாறு ?

சிதாம்பரம்மண்டி
9—6—71 என். முரளி

பணம் சேமிப்பதில் ஆர்வம் கொண்டநான், நான்கு மாதங்களுக்குமுன் என் பெயருக்குப் போஸ்டாபீஸில் கணக்கு ஏற்படுத்தியிருந்தேன். மாதம் ஐந்து ரூபாய் கட்டி வர வேண்டும். இரண்டு தடவை பத்து தேதிகளுக்குள் தொகையைச் செலுத்தி வந்தேன். எனக்கு கணக்கமளிக்கும் வகையில் வரவு வைத்துக் கொண்டு உடனடியாகப் புத்தகத்தை என்னிடம் தந்தனர். மூன்றும் தடவை காலை பத்து மணிக்குப் பணம் செலுத்திய எனக்குப் பகல் ஒரு மணிக்குத் தான் புத்தகம் கிடைத்தது. நாலாவதாய் இந்த மாதத்தில் பணம் கட்டச் சென்ற என்னை, அடுத்த நாள் வரும்படி கூறினார், சம்பந்தப்பட்டவர். அடுத்த நாள் வேலை காரணமாய்ப் பிற்பகல் இரண்டு மணிக்குச் சென்ற என்னை,'ஏன் காலையில் வரவில்லை?.... அடுத்த வாரம் வந்து பாருங்கள்' என்று கூறி திகைக்க வைத்தார், அலுவலர். சோர்வடைந்த நான் திரும்பும் போது அருகே கௌண்டரில் ஸ்டாம்பு விற்பவர், 'காப்பிச் செலவுக்கு எட்டணாவோ பத்தணாவோ தந்து பாருங்களேன்' என எனக்கு மட்டும் எட்டும் குரலில் கூறினார். சேமிக்கும் ஆர்வத்தைப் போஸ்டாபீஸிலேயே விட்டு விட்டு வீட்டுக்குத் திரும்பினேன் !

உதகை
3—6—71 நா. ச. வேணுகோபால்

★ **பொ**ன்னுக்குடிச் சந்திரத்துக்குப் பாத்தியப்பட்ட கமார் என்பது ஏக்கரா புஞ்சை நிலங்களைப் பாளையங்கோட்டைப் பஞ்சாயத்து யூனியன் ஏலத்துக்கு விட்டு வந்தது. அதை வடகரையில் உள்ள விவசாயிகள் கூட்டுறவு முறையில் ஏலம் எடுத்துப் பயிரிட்டு வந்தார்கள்.

அந்நிலங்களை அரசு, விதைப் பண்ணை ஏற்படுத்துவதற்காக எடுத்துக் கொண்டது. சோளம் விதைத்துப் பயிர் வளர்ந்திருந்தது. அரசு அலுவலர்கள் அதை அழித்துவிட்டு சுரமற்ற வேனற்காலத்தில் அறுபது படி கொண்ட எட்டு கோட்டைக் கடலையை விதைத்தார்கள். படி ஒன்றுக்குக் கடலை கிரயம் நான்கு ரூபாயாகிறது. உரம், உழவு எல்லாம் செய்து கடலை முளைக்கவில்லை. அரசுக்கு அதனால் இரண்டாயிரம் ரூபாய் வரை நஷ்டம். அரசு செய்யும் தொழில் எல்லாம் இவ்விதம் தான் இருக்கும் என்று வடகரை விவசாய மக்கள் உணர்ந்து கொண்டனர்.

வடகரை
12—6—71 எஸ். ஷேசன்

அலாவுதீன் நிகழ்த்தாத அற்புதங்கள்!

இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியோடு டெஸ்ட் பந்தயங்கள் ஆட வாடேகர் தலைமையில் இந்திய கோஷ்டி விமானமேறிவிட்டது. மேற்கிந்தியத் தீவுகளில் மகத்தான சாதனைகள் புரிந்த காவஸ்கர், சர்தேசாய்; பந்து வீச்சில் மன்னர்களான வேங்கடராகவன், பிரசன்னா, பேதி, சந்திரசேகர் முதலியவர்கள் செல்கிறார்கள். இந்தத் தருணத்தில் லார்ட்ஸ், ஓவல் மைதானங்களில் அதிசய விளக்கின் துணையின்றியே நிகழ்த்தப்பட்ட சில அற்புதங்களை நினைவுகூர்வோம்! ●

லார்ட்ஸில் நடந்தது!

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டியின் புகழ்பெற்ற ஆல்ரௌண்டர், லியரி கான்ஸ்டன்டைனிடம் டாக்டர் சொன்னார்: "நீங்கள் கிரிக்கெட் பந்தை ஒரு வாரத்துக்காவது தொடக் கூடாது. மீறினால் நிரந்தரமாக உங்கள் உடல் பாதிக்கப்படும்!"

இருபத்தைந்து வயது நிரம்பிய கான்ஸ்டன்டைன் உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த போதிலும் மனம் தளர்ந்து விடவில்லை. முதல் தடவையாக மேற்கிந்தியத் தீவு கோஷ்டி டெஸ்ட்மாட்ச் ஆடும் தகுதியைப் பெற்றிருக்கும் போது, கான்ஸ்டன்டைன் இல்லாமல் ஆடுவதா?— மானேஜர் மால்லெட்டுக்கு அளவற்ற வருத்தம்!

"நீங்கள் ஆடுவதாயிருந்தால் நிறையப் பேர் பார்க்க வருவார்கள். இல்லாவிட்டால் கூட்டம் குறைந்து விடுமே? டாக்டர் சொல்வதையும் அலட்சியப்படுத்துவதற்கில்லை. ஆகவே நீங்களே முடிவு செய்யுங்கள்!" என்றார் மானேஜர் மால்லெட்.

"நான் உங்களை எச்சரிக்கிறேன். ஆடுவது ஆபத்து. உங்கள் உடல்நிலை பாதிக்கப்படலாம்!" — டாக்டர்.

"நான் ஆடுவதென்று முடிவு செய்துவிட்டேன்!" — கான்ஸ்டன்டைன்.

"உங்களுக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது!" என்றார் டாக்டர்.

உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த ஆல்ரௌண்டர் கான்ஸ்டன்டைனுக்கு மஸாஜ், வெந்நீர் ஸ்நானம் போன்ற சில இயற்கை வைத்தியங்கள் நடந்தன.

கான்ஸ்டன்டைன் உடல் பாதிக்கப்பட்ட நிலையிலும் ஆடி எண்பத்தாறு ரன்கள் எடுத்தார். அவற்றில் இரண்டு ஸிக்ஸரும், எட்டு பவுண்டரிகளும். மேற்கிந்தியத் தீவு இன்னிங்ஸ் தோல்வியடையாமலிருக்க உறுதுணையாயிருந்தார்.

லார்ட்ஸில் ஆல்ரௌண்டர் கான்ஸ்டன்டைன் நாற்பது நிமிடங்கள் பந்து வீசி, 6.3 ஓவர்களில் 11 ரன்கள் கொடுத்து ஆறு விக்கெட் எடுத்தது மகத்தான சாதனை.

கான்ஸ்டன்டைனின் 'மகத்தான இன்னிங்ஸ்' என்று புகழப்பெற்ற இந்த லார்ட்ஸ் மாட்சிலிருந்து அவரது புகழ் ஓங்கியது. லங்காஷயர் லீக் க்ளப் அவரது சட்டப் படிப்பைத் தொடர, 'புரொபஷனல் கிரிக்கெட்கார'ராகச் சேர்த்துக் கொண்டது. 1954ல் கான்ஸ்டன்டைன் பாரிஸ்டர் ஆனார். 1962ல் லண்டனில் அவர் டிரினிடாட், டொபாக்கோவின் ஹைகமிஷனராகப் பணி புரிந்தார்.

ஓவலில் நடந்தது!

ஆஸ்திரேலிய கிரிக்கெட் மன்னர் பிராட்மன் 1930ம் ஆண்டு ஏப்ரல் 30ந் தேதியிலிருந்து மே 31ந் தேதி வரை இங்கிலாந்தில் 32 நாட்கள் ஆடி ஆயிரத்தொரு ரன்களைக் குவித்தார். பிராட்மனின் மகோன்னத நாட்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, "இங்கிலாந்து பௌலர்களுக்கு அனுமதி கிடைக்குமானால் எந்தப் பந்தயமும் தொடங்குவதற்கு முன்னால், 'பிராட்மன்! நீங்கள் ஆட வேண்டாம். ஆனால் உங்களுக்குச் சத ரன்கள் கொடுத்து விடுகிறோம்!' என்று தயங்காமல் சொல்லிவிடுவார்கள்" என்று கூறுவதுண்டு.

லீட்ஸில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் மன்னர் பிராட்மன் 334 ரன்கள் எடுத்து டெஸ்ட் ரிகார்டு கண்டார். இந்தச் சாதனையைப் பதினொன்று வயது இளைஞன் லென் ஹட்டன் பார்த்தான். இந்தச் சாதனையை எப்படியாவது முறியடிக்க வேண்டும் என்ற ஆவல் துளிர்த்தது.

ஓவலில் டெஸ்ட் பந்தயத்தில் லென் ஹட்டனும் எட்ரிச்சும் முதலில் ஆட வந்தார்கள். 29 ரன்களில் எட்ரிச் மைதானத்தை விட்டு வெளியேறினார். ஹட்டன் அபாரமாக ஆடி 331 ரன்கள் எடுத்தார். இன்னும் நான்கு ரன்கள் எடுத்தால் உலக ரிகார்டான



லார்ட்ஸ் மைதானத்தின் ஒரு தோற்றம்.

பிராட்மனின் ஸ்கோரைத் தாண்டிவிடலாம். நினைத்தபடியே ஹட்டன் பவுண்டரி அடித்து அந்த அசுர சாதனையைச் செய்தார். மைதானம் ஒரே ஆனந்த வெள்ளத்தில் மிதந்தது. தொப்பிகள் வானத்தில் பறந்தன. தொடர்ந்து ஹட்டன் ஆடினார். மொத்தம் பதின்மூன்று மணி நேரம் 20 நிமிஷங்கள் ஆடி 35 பவுண்டரிகளைக் கண்டார். அவர் எண்ணிக்கை 364ஐ எட்டியது.

இந்த மகத்தான சாதனைக்குப் பிறகு ஹட்டன் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அந்தச் சமயம் ஒரு பெண்மணி ஹட்டனை விளித்தாள்.

"மிஸ்டர் ஹட்டன்! என்ன பரிதாபம்! இன்னும் ஒரு ரன் உங்களால் எடுக்க முடியவில்லையே?" என்று பரிதாபப்பட்டாள் அந்தப் பெண்மணி.

"என்ன? ஏன்?" என்று வியப்பும் தடுமாற்றமுமாய்க் கேட்டார் சாதனை கண்ட ஹட்டன்.

"இன்னும் ஒரு ரன் நீங்கள் எடுத்திருந்தால் ஒரு நாளைக்கு ஒரு ரன் விதம் ஒரு வருஷத்துக்குரிய ரன்களைப் பூர்த்தி செய்திருக்கலாமே?" என்றாள் அந்தப் பெண்மணி.

பிராட்மனின் உலக ரிகார்டை ஹட்டன் முறியடித்ததும் இங்கிலாந்துக்கு இன்னிங்ஸ் வெற்றி பெற்றுத் தந்ததும்கூட அந்தப் பெண்மணியைத் திருப்திப்படுத்தவில்லை! அவருடைய ஸ்கோர் 365 ஆக இருக்கக் கூடாதா என்றுதான் ஏங்கினாள். — குண்டுமணி


ஹரைஸ்-இன்-ஓட்டல், சுழலும் ஓட்டல் இவையெல்லாம் பழசு. இப்போது லேட்டஸ்ட் ஓட்டல் என்ன தெரியுமா? பறக்கும் ஓட்டல்!

இப்படி ஒரு பறக்கும் 'டூரிஸ்ட்' ஓட்டலை ரஷ்ய நிபுணர்கள் உருவாக்கி வருகின்றனராம். நம் ஊர் டூரிஸ்ட் பஸ்களைப் போல் இந்தப் பறக்கும் டூரிஸ்ட் ஓட்டலில் பணம் கட்டினால் ஆகாயத்தில் பறந்துகொண்டே ரஷ்யாவின் பல முக்கிய இடங்களைச் சுற்றிக் காட்டுவார்களாம்.



ரஷ்யாவில் உள்ள சில எரிமலைகளின் அனல் கக்கும் வாய்களை அதன் உச்சியில் பறந்து பார்க்கலாம். இதில் ஏறிப் பிரயாணம் செய்ய ஆரம்பித்தால் சுமார் 25 நாட்களுக்குக்கூடக் கீழே இறங்காமல் பறந்து ஊர் சுற்றிப் பார்க்க அத்தனை வசதிகளுடன் இதனை அமைத்து வருகிறார்கள். ஒரு நடனஅரங்கு, நீச்சல்குளம் எல்லாம் இதில் இருக்கும். 15 மாடிக் கட்டிடத்தின் உயரமுள்ள இந்த ஆகாயக் கப்பலின் உச்சியில் சென்று பார்க்க (பறக்கும் போதே) 'லிஃப்ட்' இருக்கும். மணிக்கு 200 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஹெலிகாப்டர் போல இதை எந்த மைதானத்திலும் வேண்டுமானாலும் இறக்கிக் கொள்ளலாம். ஆதாரம்: சோவியத் நாடு தகவல்: சம்பத் குமாரி

சென்ற பத்து ஆண்டுகளில் ஓர் இந்தியனின் சராசரி வருமானம் நான்கு சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. இதே பத்தாண்டுகளில்



ஜப்பானியரின் சராசரி வருமானம் நூற்றிப் பதினாறு சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

பவன்ஸ் ஜர்னல் - - பாபு

முழுமுதல் பொருள்

'முழுமுதற் பொருள். தன்னிடமிருந்து முழுசாக ஒரு பொருளை எடுத்தது; படைத்தது. திரும்பப் பார்த்தால் முழுப் பொருள் அப்படியே முழுப் பொருளாகவே இருக்கிறது.'

'எப்படி ஐயா முடியும்? ஒன்றிலிருந்து ஒன்றை எடுத்தபின் அந்த ஒன்று கிள்ளாமல் கிரியாமல் அப்படியே இருக்கிறது என்றால் எந்த மடையன் ஐயா நம்புவான்? என்னிடம் நூறு ரூபாய் இருக்கிறது. அந்த நூறை எடுத்து நான் செலவிட்டுவிட்டால் மிஞ்சுவது என்ன? பூஜ்யம் தானே?' என்று சண்டைக்குவந்து விட்டார் ஒரு கணித ஆசிரியர்.

'ஐயா! நீரோ உபாத்தியாயர். மாணக்கர்களுக்குக் கல்வியறிவு ஊட்டுபவர். தாங்கள் அறிந்ததை அவர்களுக்குப் புகட்டுகிறீர்கள்! அதாவது தங்கள் அறிவைச் செலவிடுகிறீர்கள்! அதனால் தங்கள் அறிவு குறைந்து விடுகிறதா? எடுக்க எடுக்க அது அப்படியே குறையாமல்தானே இருக்கிறது!'

இவ்வாறு மடக்கியபின்தான் முழுமுதற் பொருளும் முழுமுதற்பொருளாகவே இருக்க முடியும் என்பதை ஏற்றார் அந்தக் கணித ஆசிரியர்.



ஏற்காவிட்டால் அவருடைய அறிவு முழுவதும் செலவழிந்து விட்டதாக ஆகிவிடுமே!

* * *

அறியாமை என்பது இருள். அதுவும் அமாவாசை இருள்; இன்னும் சொல்லப் போனால் சன்னல் கதவுகளை இறுகச் சாத்திய பின் சூழ்ந்திருக்கும் கருந்தகார இருள்.

இந்த இருளை ஒரு சிறிய மெழுகு வத்தி எப்படி ஓட ஓட விரட்டி விடுகிறது? இருள் எத்தனை பெரியது? மெழுகுவத்தி எத்தனை சிறியது? இருந்தாலும் மெழுகு வத்திக்கெதிரே இருளால் நிற்க முடிவதில்லை. அறிவு என்னும் ஒளி சிறிது பாய்ந்தாலும் அறியாமை என்னும் இருள் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடுகிறது.

(தக்ஷிணபாரத் ஹிந்தி பிரசார சபையின் பொன் விழாவில் ஸ்ரீ கங்கா சரண் சிங் எம். பி. யின் சொற்பெருக்கினிடையே வந்த கருத்துக்கள்.) - ரா. வி.



அவள்: 'உலகின் மிக மோசமான மனிதரிடம் சேர்ப்பிக்கவும்'னு ஒரு கடிதம் எழுதி போஸ்ட் பண்ணினால் தபால் இலாகா அதை என்ன செய்யும்?

அவன்: உனக்கே திருப்பி அனுப்பிவிடும்! -'தமூஸ்'



டாம்கான் திடீர் புளி

- இந்தப் புட்டியில் இருப்பது டாம்கான்-இயற்கைப் புளியின் சுத்தமான சாரம் உடனடியாக உபயோகிக்கத் தகுந்தது.
- கறிகள், கூட்டுகள், சாம்பார், ரஸம் முதலிய யாவற்றுக்கும் புளிப்பான சுவை கூட்டுவது டாம்கான்
- டாம்கான் சுத்தமானது, சுகாதாரமானது கொட்டைகள், நார்கள், தூசி, பூச்சிகள் அற்ற தூய்மையான புளியின் சாரம்
- டாம்கான் உபயோகிக்க மூன்றே வினாடிகள் போதும் —விரல்களை அசுத்தப் படுத்திக் கொள்ள வேண்டாம் —கச்சா புளியானால் ஊறவைத்து, பிழிந்து, வடிகட்ட 10 நிமிடங்களுக்கு மேலேயே ஆகும்.
- ஒரே தேக்கரண்டி டாம்கான்- 6 பேர்களுக்கான உணவுக்கு ருசி சேர்த்து விடும்.
- 450 மற்றும் 225 கிம் புட்டிகளில் எல்லா கடைகளிலும் கிடைக்கிறது.



பம்பாயிலுள்ள திருமதி ரன்னு பேதி கூறுகிறார்: "டாம்கான் திடீர் புளி உபயோகிக்கத் தொடங்கியதிலிருந்து எனக்கு அதிக நேரம் மிஞ்சுகிறது. வேலை மிகுந்த இல்லத்தரசி-களுக்கு டாம்கான் - ஒரு வரப்பிரசாதம்."

fci

தயாரிப்பவர்கள்:
ஃபுட் கான்ஸென்ட்ரேட்ஸ் (இந்தியா)
B-49 இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் பெங்களூர்-10

Interpub/FCI/1A TH

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 40

"நான்தான் கொன்றேன்!"

திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் சோழ வம்சாவளியை விவரிக்கும்போது, ''வானுலகைப் பார்க்கும் ஆசையினால் ஆதித்தன் அஸ்தமனத்தை அடைந்தான். உலகில் கலி என்னும் காரிருள் சூழ்ந்தது!'' என்று கூறப்பட்டிருக்கிறது. வீரபாண்டியன் தலைகொண்ட வீராதி வீரனாகிய சோழ சாம்ராஜ்யத்துப் பட்டத்து இளவரசன் ஆதித்த கரிகாலன் அகால மரணமடைந்தது பற்றித்தான் அவ்வாறு திருவாலங்காட்டுச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

ஆதித்த கரிகாலன் மரணமுற்றுக் கிடந்த கடம்பூர் அரண்மனையின் அறையில் அப்போது உண்மையாகவே காரிருள் சூழ்ந்திருந்தது.

காளாமுகத் தோற்றங் கொண்டவனால் கழுத்து நெரிபட்டுத் தரையில் தடாலென்று தள்ளப்பட்ட வல்லவரையனுடைய உள்ளத்திலும் அவ்வாறே சிறிது நேரம் இருள் குடிகொண்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அந்த உள்ளத்தில் ஒளி தோன்றிய போது, நினைவு வரத் தொடங்கிய போது, அவன் கண்களும் விழித்தன. ஆனால் அவனைச் சுற்றிலும் சூழ்ந்திருந்த இருளின் காரணத்தினால் அவனுடைய கண்ணுக்கு எதுவும் கோசரம் ஆகவில்லை. ஆதலின், அவன் எங்கே இருக்கிறான், என்ன நிலைமையில் இருக்கிறான் என்பதும் அவன் உள்ளத்தில் புலப்படவில்லை.

மண்டையை வலித்துக் கொண்டிருந்த உணர்ச்சி முதலில் ஏற்பட்டது. கழுத்து நெரிபட்ட இடத்திலும் வலி தோன்றியது. மூச்சு விடுவதற்குத் திணற வேண்டியிருந்ததை அறிந்தான். இந்த மண்டைவலி எப்படி வந்தது? இந்தக் கழுத்து வலி எதனால் ஏற்பட்டது? மூச்சு விடுவதற்கு ஏன் கஷ்டமாயிருக்கிறது? ஆகா! அந்தக் காளாமுகன்! அவனைத் தான் கண்டது உண்மையா? அவன் தன் கழுத்தை நெரித்துக் கொல்ல முயன்றது உண்மையா? எதற்காகக் கழுத்தை நெரித்தான்? தான் சத்தம் போடுவதைத் தடுப்பதற்காகவா? தன்னை அப்பால் நகர வொட்டாமல் தடுப்பதற்காகவா? ஏன்? ஏன்? அவனுடைய இரும்புப் பிடியை மீறிக்கொண்டு தான் போக விரும்பியது எங்கே? ஆகா! நினைவு வருகிறது! ஆதித்த

அமரர் கல்கி





கரிகாலரிடம் போக விரும்பினேன்! ஐயோ! அவர் கதி என்ன ஆயிற்று? நந்தினி என்ன ஆனாள்? ரவிதாஸன் என்ன செய்தான்? தன்னைத் தடுக்கப் பார்த்துத் தரையில் தள்ளிய காளாமுகன் பிறகு என்ன செய்திருப்பான்?... தான் இப்போது இருப்பது எங்கே? பாதாளச் சிறையிலா? சுரங்கப் பாதையிலா? கண் விழிகள் பிதுங்கும்படியாக வந்தியத்தேவன் சுற்றுமுற்றும் உற்றுப் பார்த்தான். ஒன்றுமே தெரியவில்லை. கடவுளே! இப்படியும் ஓர் அந்தகாரம் உண்டா?.... தான் விழுந்த இடம் நந்தினியின் அந்தப்புர அறையில், யாழ்க்களஞ்சியத்தின் அருகில் என்பது நினைவு வந்தது. அங்கேயே அவன் கிடக்கிறானா? அல்லது வேறு எங்கேயாவது தூக்கிக் கொண்டு போய்ப் போட்டு விட்டிருக்கிறார்களா? இதை எப்படித் தெரிந்து கொள்வது?

இரண்டு கைகளையும் நீட்டித் துழாவிப் பார்த்தான். ஒரு பொருள் கைக்குத் தட்டுப்பட்டது. அது என்ன? கத்தி போல் அல்லவா இருக்கிறது? ஆம்; கத்திதான்! திருகுமடல் உள்ள கத்தி! சாதாரணக் கத்திகளைவிட மிகச் சக்தி வாய்ந்தது! எவன் பேரிலாவது பாய்ந்தால், அவன் செத்தான்! இம்மாதிரி விசித்திரமான கத்தியை எங்கேயோ பார்த்தோமே? அது எங்கே? யார் கையில் பார்த்தோம்!...ஆம்! இடும்பன்காரியின் கையில் அல்லவா பார்த்தோம்! அன்று முன்னிரவில் நடந்தவையெல்லாம் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தன! இந்தக் கத்தி இங்கே எப்படி வந்தது? ஓ! இதன் மடல் ஈரமாயிருக்கிறதே! ஈரம் எப்படி வந்தது? தண்ணீரா? இல்லை! எண்ணெயா? அதுவும் இல்லை! இரத்தமாகத்தான் இருக்க வேண்டும்! ஐயோ! யாருடைய இரத்தம்? ஒருவேளை தன்னுடைய இரத்தமேதானோ? வந்தியத்தேவன் தன் பின் மண்டையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். அங்கேயெல்லாம் வலித்ததே தவிர, இரத்தம் வந்ததாகத் தெரியவில்லை. உடம்பில் வேறு எங்கும் கத்திக் காயத்தின் வலி இல்லை!... பின், இந்த முறுக்குக் கத்தியின் மடல் யாருடைய இரத்தத்தைக் குடித்துவிட்டு இங்கே நம் அருகில் கிடக்கிறது? இதனால் அவன் யாரையும் காயப்படுத்தவில்லை. இதற்கு முன் அவன் கையினால் அதை எடுத்ததும் இல்லை! பின்னே யார் அதை உபயோகித்திருப்பார்கள்! இடும்பன்காரியாயிருக்குமா? அவன் யார் மேல் இதைப் பிரயோகித்திருப்பான்? ஒரு வேளை இடும்பன்காரிதான் அந்தப் பயங்கரத் தோற்றங் கொண்ட காளாமுகனின் வேடத்தில் வந்தானா? இல்லை! இல்லை! அப்படியிருக்க முடியாது! இடும்பன்காரி அவ்வளவு நெடிதுயர்ந்த உருவம் கொண்டவன் அல்ல....

இது என்ன? காலடிச் சத்தமா? யாராவது வருகிறார்களா? பேசாமல் இருக்கலாமா? குரல் கொடுக்கலாமா? வருகிறவர்கள் கையில் விளக்குடன் வரக்கூடாதோ? எங்கே இருக்கிறோம் என்றாவது தெரிந்து கொள்ளலாம் அல்லவா? இருட்டில் தெரியாமல் தன்னை மிதித்து விடப் பார்க்கிறார்களே?....

இந்த எண்ணம் தோன்றியதும் வந்தியத்தேவன் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான். கையில் அந்தச் சிறிய கத்தியை ஆயத்தமாக வைத்துக் கொண்டு, ''யார் அங்கே?'' என்று கேட்டான்.

அவனுடைய குரல் ஒலி அவனுக்கு அளவில்லாத வியப்பை அளித்தது. அதை அவனாலேயே அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. அவனுடைய குரலாகவே தோன்றவில்லை. அந்தக் காளாமுகன் பிடித்த பிடியினால் அவனுடைய தொண்டைக்கு இந்தக் கேடு நேர்ந்திருக்கிறது. சத்தம் வெளியில் வருவதற்கே கஷ்டமாயிருக்கிறது.

மறுபடியும் ஒரு தடவை, ''யார் அங்கே?'' என்று உரக்கச் சத்தமிட்டுக் கேட்க முயன்றான். ஏதோ அதுவும் ஓர் உறுமல் சத்தமாக வந்ததே தவிர, குரல் ஒலியாகவே தோன்றவில்லை.

மீண்டும் காலடிச் சத்தம் விரைவாகக் கேட்டு நின்றது. வந்தவர் அவனுடைய குரலைக் கேட்டுப் பேயோ பிசாசோ என்று பயந்து வந்த வழியே திரும்பிப் போய் விட்டார் போலும்.


இதை எண்ணி வந்தியத்தேவன் சிரிக்க முயன்றான். சிரிப்புக் குரலும் அம்மாதிரி உருத் தெரியாமலேதான் ஒலித்தது.

சரி; இனி உட்கார்ந்திருப்பதிலோ, காத்திருப்பதிலோ பயனில்லை. எழுந்து நடந்து எங்கே இருக்கிறோம் என்று சோதித்துப் பார்க்க வேண்டியதுதான்.

எழுந்து நின்றான்; கால்கள் தள்ளாடின. ஆயினும் சமாளித்துக் கொண்டு நடந்தான். கைகளை எவ்வளவு நீட்டினாலும் ஒன்றும் தட்டுப்படவில்லை.

தூரத்தில் ஏதோ சிறிது பளபளவென்று தெரிந்தது. ஆகா! அது நிலைக் கண்ணாடி போல் அல்லவா இருக்கிறது? அதில் எங்கிருந்தோ மிக மெல்லிய ஒளிக்கிரணம் ஒன்று பட்டதினால் அது பளபளக்கிறது. ரவிதாஸன் கையில் புலியின் உடலை எடுத்துக் கொண்டு

நுழைந்த தோற்றம் அந்தக் கண்ணாடியிலே பிரதிபலித்தது வந்தியத்தேவனின் நினைவுக்கு வந்தது. சரி, சரி! நந்தினியின் அந்தப்புர அறைக்குள்ளே தான் இன்னமும் இருக்கிறோம். ஆனால் ஏன் இங்கே இப்படி இருள் சூழ்ந்திருக்கிறது? ஏன் நிசப்தம் குடிகொண்டிருக்கிறது? இந்த அறையில்" சற்று முன்னால் இருந்தவர்கள் அத்தனை பேரும் என்ன ஆனார்கள்?



தமிழ் அறிஞரும், பழம்பெரும் தேசபக்தருமான திரு "மதுரமித்திரன்" என். சுப்பிரமணியம் அவர்களின் மணிவிழா பாராட்டுக் கூட்டம் சமீபத்தில் நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமையில் திருவல்லிக்கேணியில் நடைபெற்றது. திரு எம். பக்தவத்சலம் மதுரமித்திரன் சுப்பிரமணியம் அவர்களின் சேவைகளைப் பாராட்டி அன்னாருக்குப் பொன்னாடை போர்த்தினார்.

இவ்விதம் எண்ணமிட்டுக் கொண்டே வந்தியத்தேவன் இருட்டில் தடுமாறிக் கொண்டு நடந்தான். வாசற்படிக்கருகில் போனால் ஒரு வேளை வெளிச்சம் இருக்கலாம், — அல்லது அங்கிருந்து வெளியேறி யாரையாவது கேட்டு நடந்ததைத் தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டு சென்றான்.

ஏதோ காலில் தடுக்கவே மறுபடியும் தடால் என்று விழுந்தான். ஆனால் இம்முறை ஏதோ மிருதுவான பொருளின் மீது விழுந்தபடியால் பலமாக அடிபடவில்லை. அந்த மிருதுவான பொருள் புலியின் தோல் என்று தெரிந்தது. ரவிதாஸன் கையில் எடுத்துக் கொண்டு வந்து எறிந்த புலித் தோல் மீது அவன் விழுந்திருக்க வேண்டும்....

தடுமாறி விழுந்தபோது கையிலிருந்த கத்தி நழுவி விட்டது; அதைக் கண்டுபிடித்து எடுத்துக் கொள்வதற்காகக் கையை நீட்டித் துழாவினான். கையில் மிருதுவாக ஏதோ தட்டுப்பட்டது. வந்தியத்தேவனுடைய உடம்பெல்லாம் நடுங்கியது. ரோமங்கள் குத்திட்டு நின்றன; நெஞ்சில் பீதி குடிகொண்டது.

அப்படியும் இருக்க முடியுமா என்று எண்ணிக் கொண்டே மறுபடியும் தடவிப் பார்த்தான்.

ஆம்; அது ஒரு மனித உடல்தான்! அவன் கையில் தட்டுப்பட்டது அந்த மனிதனின் உள்ளங் கை! புலித் தோலை உடனே அகற்றித் தூர எறிந்தான். பிறகு உற்றுப் பார்த்தான். கண்ணாடியில் விழுந்த இலேசான ஒளி பிரதிபலித்துக் கீழே கிடந்த உடலையும் சிறிது புலப்படுத்தியது. ஐயோ!

இளவரசர் ஆதித்தகரிகாலர் அல்லவா கிடக்கிறார்? அவர் அல்ல! அவருடைய உயிர் அற்ற உடல்தான் கிடக்கிறது!

வந்தியத்தேவனுடைய நெஞ்சு விம்மித் தொண்டையை அடைத்துக் கொண்டது. கண்களில் அவனை அறியாமல் கண்ணீர் ததும்பியது.

நடுநடுங்கிய கைகளினால் கரிகாலருடைய உடம்பின் பல பகுதிகளையும் தொட்டுப் பார்த்தான். சிறிதும் சந்தேகத்துக்கு இடம் இல்லை. உயிர் சென்றுவிட்ட வெறுங் கூடுதான்!

அந்த உயிரற்ற உடம்பின் விலாப் பக்கத்திலிருந்து பெருகிப் பக்கத்தில் வழிந்திருந்த இரத்தம் அவனுடைய கைகளை நனைத்தது.

அச்சமயம் அவனுக்குக் குந்தவைப் பிராட்டியின் நினைவு உண்டாயிற்று. அந்த மாதரசி அவனை எதற்காக அனுப்பி வைத்தாளோ, அந்தக் காரியத்தில் அவன் வெற்றி அடையவில்லை. முழுத் தோல்வி அடைந்தான்! இனி அவள் முகத்தில் விழிப்பது எங்ஙனம்?

அவனால் எவ்வளவு பிரயத்தனம் செய்ய முடியுமோ, அவ்வளவும் செய்தாகி விட்டது. ஆனாலும் பயன்படவில்லை. விதி வென்று விட்டது!

இளவரசரின் உயிரற்ற உடலை எடுத்துத் தன்னுடைய மடியிலே போட்டுக் கொண்டான். மேலே என்ன செய்வது என்று தெரியவில்லை. சிந்திக்கும் சக்தியையே இழந்து விட்டான். சத்தம் போட்டு அலறுவதற்குத் தொண்டையிலும் சக்தி இல்லாமற் போய் விட்டது.

''இளவரசர் இறந்து விட்டார்; ஒப்புக் கொண்ட காரியத்தில் நாம் வெற்றி பெறவில்லை; குந்தவையின் முகத்தில் இனி விழிக்க முடியாது!'' என்னும் இந்த எண்ணங்களே திரும்பத் திரும்ப அவன் மனத்தில் வந்து கொண்டிருந்தன.

இவ்வாறு எண்ணிக் கொண்டு அவன் எத்தனை நேரம் அங்கே உட்கார்ந்திருந்தான் என்பது அவனுக்கே தெரியாது.

தீவர்த்தி வெளிச்சத்துடன் மனிதர்கள் சிலர் அந்த அறையை நெருங்கி வருகிறார்கள் என்பதைக் கண்ட பிறகுதான் அவனுக்கு ஓரளவு சுயநினைவு வந்தது.

கரிகாலருடைய உடலைத் தன்னுடைய மடியிலிருந்து எடுத்துக் கீழே வைத்து விட்டு எழுந்து நின்றான்.

பத்துப் பன்னிரண்டு ஆள்கள் முன் வாசற் பக்கமிருந்து வந்தார்கள். அவர்களில் இருவர் தீவர்த்தி பிடித்துக் கொண்டிருந்தார்கள். மற்றும் சிலர் வேல் ஏந்திக் கொண்டு வந்தார்கள்.

எல்லாருக்கும் முன்னால் கந்தமாறனும் அவனுக்கு அடுத்தாற்போல் பெரிய சம்புவரையரும் வந்தார்கள்.

வந்தவர்கள் எல்லாருடைய முகங்களும் பயப்பிராந்தியைக் காட்டின. தீவர்த்தி வெளிச்சத்தில் பேயடித்தவர்களைப் போல் காணப்பட்டார்கள்.

கந்தமாறனுடைய முகத்திலே மட்டும் கோபமும் ஆத்திரமும் கொந்தளித்துக் கொண்டிருந்தன.


அவன் வந்தியத் தேவனைப் பார்த்ததும், ''அடே, பாதகா! கொலைகாரா! சிநேகத் துரோகி! இராஜத் துரோகி! நீ தப்பித்துக் கொண்டு ஓடவில்லையா! போய் விட்டாய் என்றல்லவா நினைத்தேன்?'' என்று கர்ஜனை செய்தான்.

பின்னர் பெரிய சம்புவரையரை நோக்கி, ''தந்தையே! அதோ பாருங்கள் கொலைகாரனை! சிநேகிதன் போல் நடித்துப் பாதகம் செய்த பழிகாரனைப் பாருங்கள்! நம்முடைய வம்சத்துக்கு அழியாத களங்கத்தை உண்டு பண்ணிய சண்டாளனைப் பாருங்கள்! அவன் முகத்தோற்றத்தைப் பாருங்கள்! அவன் செய்த பயங்கரக் குற்றம் அவன் முகத்திலேயே எழுதியுள்ளதைப் போல் பிரதிபலிப்பதைப் பாருங்கள்!'' என்றான்.

சம்புவரையர் அதற்கெல்லாம் மறுமொழி ஒன்றும் சொல்லாமல் கீழே கிடந்த ஆதித்த கரிகாலனுடைய உடலை அணுகினார். அதன் தலைமாட்டில் உட்கார்ந்து, சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, ''ஐயோ! விதியே! இது என் வீட்டிலா நேர வேண்டும்? விருந்துக்கு என்று அழைத்து வேந்தனைக் கொன்ற பழி என் தலையிலா விடிய வேண்டும்?'' என்று புலம்பிக் கொண்டே தமது தலையில் 'படார், படார்' என்று அடித்துக் கொண்டு புலம்பினார்.

கந்தமாறன், ''தந்தையே! நம் குலத்துக்கு அந்தப் பழி ஒருநாளும் வராது! இதோ கொலைகாரனைக் கையும் மெய்யுமாகப் பிடித்திருக்கிறோம்! இவன் இளவரசரைக் கொல்வதற்கு உபயோகித்த கத்தி அதோ கிடப்பதைப் பாருங்கள்! அதில் இரத்தம் தோய்ந்திருப்பதைப் பாருங்கள்! முன்னால் நான் வந்து பார்த்த போது இவன் இல்லை, கத்தியும் இல்லை. ஓடப் பார்த்து முடியாமல் திரும்பி வந்து விட்டான்! ஒருவேளை இளவரசர் உடம்பில் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கிறதோ என்று பார்க்க வந்தான் போலும்! கத்தியால் குத்தியது போதாது என்று தொண்டையைத் திருகிவிட்டுப் போக வந்தான் போலும்! தந்தையே! இப்பேர்ப்பட்ட மகா பாதகனுக்கு, — சதிகாரத் துரோகிக்கு, — என்ன தண்டனை கொடுப்பது? எது கொடுத்தாலும் போதாதே?'' என்று பேசிக் கொண்டே போனான்.

வந்தியத் தேவன் ஏற்கனவே தொண்டை நெரிந்து பேச முடியாத நிலையிலிருந்தான். கந்தமாறனுடைய வார்த்தைகள் அவனைத் திக்பிரமை கொள்ளச் செய்தன. பிறர் கொலைகாரனைக் கருதக் கூடிய நிலையில் தான் இருப்பது அப்போதுதான் அவனுக்குத் தெரிய வந்தது. இளவரசனைக் குத்திக் கொன்ற குற்றத்தையல்லவா இந்தக் கந்தமாறன் தன் மீது சுமத்துகிறான்? முன்னே இவன் முதுகில் நான் கத்தியால் குத்தியதாகச் சொன்னான். இப்போது இளவரசரை நான் கொன்று விட்டதாகவே சொல்கிறான்! நம் நிலை அப்படி இருக்கிறது! யாரும் சந்தேகிக்கக் கூடியதாக இருக்கிறது! ஆகா! அந்தப் பழுவூர் மோகினி, — அழகே வடிவான விஷப் பாம்பு, — இதற்காகவே திட்டமிட்டிருந்தாள் போலும்! இதற்காகவே தன்னைச் சில முறை காப்பாற்றி


காலமெதுவாயினும்
கோலாகலம் தரும் கோகா-கோலா!
Enjoy Coke



னுன் போலும்! குந்தவைப் பிராட்டியின் பேரில் இவனுக்கு உள்ள குரோதத்தை இவ்விதம் தீர்த்துக் கொண்டான்! ஆகா! அந்தச் சௌந்தரிய வடிவங் கொண்ட பெண் பேய் எங்கே? எப்படித் தப்பித்தாள்? காரியம் முடிந்ததும் மந்திரவாதி ரவிதாஸன் முதலியவர்களோடு சுரங்க வழியில் தப்பி ஓடிவிட்டாள் போலும்!....

இவ்வாறு எண்ணமிட்ட வந்தியத்தேவன் சிந்தனை சட்டென்று இன்னொரு பக்கம் திரும்பியது! ஆதித்த கரிகாலரைத் தான் கொல்லவில்லை என்பது நிச்சயம். ஆனால் வேறு யார் கொன்றிருப்பார்கள்? நந்தினியா? அல்லது ரவிதாஸனா? அல்லது காளாமுகனா?— ஒருவேளை தான் நினைவு மறக்கும் தறுவாயில் ஒரு கணம் தோன்றி மறைந்த மணிமேகலையாகத்தான் இருக்குமோ? அல்லது இந்த முறுக்குக் கத்தியை எடுத்து வந்தவனை இடும்பன்காரியாக இருக்குமோ? ஒருகால், கந்தமாறனே தான் நந்தினி மேல் கொண்ட மோகத்தினால் இந்தப் படுபாதகத்தைச் செய்துவிட்டு நம் பேரில் பழியைப் போடுகிறானா? அல்லது நந்தினி சொல்லிய அதிசயமான இரகசியத்தைக் கேட்டுவிட்டுத் தன்னைத் தானே நொந்து கொண்ட ஆதித்த கரிகாலர் தற்கொலை செய்து கொண்டு இறந்தாரா?

கந்தமாறன், தன் பக்கத்தில் நின்ற ஆட்களைப் பார்த்து, ''தடியர்களே! ஏன் சும்மா நிற்கிறீர்கள்? இந்தக் கொலைகாரனைப் பிடித்துக் கட்டுங்கள்!'' என்று கத்தியதுந்தான் வந்தியத்தேவனுக்குத் தனது இக்கட்டான நிலைமை மறுபடியும் ஞாபகத்துக்கு வந்தது.

கந்தமாறனை அவன் இரக்கமும் துயரமும் ததும்பிய கண்களினால் பார்த்தான். ஒரு பெரு முயற்சி செய்து தொண்டையில் ஜீவனைத் தருவித்துக் கொண்டு, ''கந்தமாறா! இது என்ன? நான் இத்தகைய கொடுஞ் செயலைச் செய்திருப்பேன் என்று நீ நம்புகிறாயா? எதற்காக நான் செய்ய வேண்டும்? எனக்கு என்ன லாபம் இதனால்? நண்பா!....'' என்பதற்குள் கந்தமாறன், ''சீச்சீ! நான் உன் நண்பன் அல்ல. அவ்விதம் கூறிய உன் நாவை அறுக்க வேண்டும். உனக்கு என்ன லாபம் என்று கேட்கிறாய்? ஏன் லாபம் இல்லை? நந்தினியின் கடைக்கண் கடாட்சத்தைப் பெறலாம் என்ற ஆசைதான்! அடே! அந்தப் பழுவூர் மோகினி இப்போது எங்கே?'' என்றான்.

''கந்தமாறா! உண்மையில் எனக்குத் தெரியாது. நான் இங்கே நினைவிழந்து கிடந்தேன். நீங்கள் வருவதற்குச் சற்று முன்புதான் நினைவுபெற்றேன். நந்தினி என்ன ஆனாள் என்று எனக்குத் தெரியாது. ஒரு வேளை சுரங்கப் பாதை வழியாக வெளியேறியிருக்கலாம். வேட்டை மண்டபத்தில் அவளுடைய ஆட்கள், — வீரபாண்டியனுடைய ஆபத்துதவிகள், — நாலு பேர் காத்திருந்தார்கள். அவர்களுடன் நந்தினி போயிருக்கலாம்!''

கந்தமாறன், ''ஓகோ! உன்னையும் ஏமாற்றி விட்டுப் போய் விட்டாளாக்கும். ஆனால் உனக்கு ஒன்றும் தெரியாது என்று சாதிக்க வேண்டாம். அதை யார் நம்புவார்கள்? நீ அவளுடைய மோக வலையில் விழுந்திருந்தாய், காலால் இட்ட காரியத்தைத் தலையினாலே முடிப்பதற்குத் தயாராயிருந்தாய் என்பது எனக்குத் தெரியாதா? ஆதித்த கரிகாலரே சொல்லியிருக்கிறார். நந்தினியும் அவரிடத்தில் உன்னைப் பற்றிய உண்மையைச் சொல்லியிருக்கிறாள். அவள் தூண்டியோ, அவளுக்குத் திருப்தி தரும் என்று நினைத்தோ, நீ இந்தக் கொலை பாதகத்தைச் செய்து விட்டாய்! உன்னுடைய முகத்தில் விழித்தாலும் பாவம்!'' என்றான்.

''கந்தமாறா! சத்தியமாகச் சொல்லுகிறேன். நான் இளவரசரைக் கொல்லவில்லை. அவர் உயிரைக் காப்பாற்றும் பொறுப்பைப் பழையாறை இளைய பிராட்டியிடம் நான் ஏற்றுக் கொண்டு வந்தேன்.....''

''இவ்விதம் சொல்லித்தான் இளவரசரை ஏமாற்றினாய்! பிறகு வஞ்சகம் செய்து குத்திக் கொன்றாய்! இல்லாவிட்டால், இந்த அறைக்குள் எப்படி வந்து சேர்ந்தாய்? எதற்காக வந்தாய்?''

“**க**ந்தமாறா! இளவரசருக்கு ஆபத்து வரப் போவதையறிந்து அவரைப் பாதுகாக்க வந்தேன். அந்த முயற்சியில்

4

தமிழக முதல்வரின் 48வது பிறந்த நாளுக்காக ஜனாதிபதி கிரி எழுதிய வாழ்த்துக் கடிதம் சென்னை வந்து சேர நாலு நாட்கள் ஆயின.

டெக்கான் ஹெரால்ட் - 'நாயக்'



விநோத சம்பிரதாயம்

கல்யாணமென்றால் ஐந்து நாட்கள் ஒரே தமாஷும் கேலியும் கொண்டாட்டமுமாக இருந்து வந்தது. இப்பொழுது நலிந்து ஒரு நாள் கல்யாணத்தில் வந்து முடிந்திருக்கிறது. இருந்தாலும் பல விநோதமான சம்பிரதாயங்கள் போய்விடவில்லை. வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு மாவட்டங்களில் 'அம்மான் கோலம்' என்ற சம்பிரதாயம் வேடிக்கையானது; அதிசயமானதும்கூட. திருமணம் முடிந்த அன்றிரவு மணமான பெண்ணுக்கு வேஷ்டி, சட்டை அணிவித்து அவளைப் புருஷ வேஷத்தில் மாப்பிள்ளை தங்கியிருக்கும் இல்லத்துக்குப் பெண்ணின் மாமாவும் பெண் வீட்டைச் சேர்ந்தவர்களும் அழைத்துச் செல்கிறார்கள். புருஷ வேஷத்தில் வந்துள்ள மணப் பெண், மாப்பிள்ளையிடம் மாப்பிள்ளைத் தோழமை நடித்து, அவரிடம் ஐந்தோ, பத்தோ பணம் வாங்கிக் கொண்டு வந்துவிடுவாளாம். மணப் பெண்ணுக்குத் தெரிந்த மொழிகளில் மாப்பிள்ளையிடம் ஜாலமாகப் பேசி அந்தப் பெண் சமாளித்து வருவதை அனைவரும் வேடிக்கை பார்த்து மகிழ்வார்களாம். மணப் பெண்ணின் சாமர்த்தியத்தை எடை போடும் இந்த 'அம்மான் கோலம்' விசித்திரமாக இருக்கிறது.

இதை எடுத்துரைத்தவர்: புரசைவாக்கம் சாம்ப மூர்த்தி சாஸ்திரிகள்.

தகவல்: பி. எஸ். எம்.

தோற்றுப் போனேன். ஆனால் அது என் குற்றம் இல்லை. உன் தங்கை மணிமேகலையை வேணுமானால் கேட்டுப் பார்! அவள்தான் என்னை....."

"ச்சீ! என் தங்கையைப் பற்றிப் பேசாதே! அவள் பெயரையே சொல்லாதே! ஜாக்கிரதை! இனி அவள் பேச்சை எடுத்தால் தெரியுமா? உன் கழுத்தைப் பிடித்து நெரித்து இப்பொழுதே கொன்று விடுவேன்!"

இவ்விதம் கூறிவிட்டுக் கந்தமாறன் வந்தியத் தேவன் மீது பாய்ந்து அவன் மார்பையும் தோள்களையும் சேர்த்துப் பிணைத்திருந்த கயிறுகளைப் பிடித்து ஒரு குலுக்குக் குலுக்கினான்.

பின்னர், இமை ஆதித்த கரிகாலன் உடலுக்கருகில் உட்கார்ந்து வேதனையில் ஆழ்ந்திருந்த சம்புவரையரைப் பார்த்து, "தந்தையே! இவனை என்ன செய்கிறது என்று சொல்லுங்கள்! நம் குலத்துக்கு அழியா அபகீர்த்தியை உண்டுபண்ணிய இந்தக் கொலை பாதகனை என்ன செய்கிறது என்று சொல்லுங்கள்! தாங்கள் அநுமதி கொடுத்தால் இவனை இந்த நிமிடமே கண்ட துண்டமாக்கிப் போடுகிறேன்! தந்தையே! சொல்லுங்கள்!" என்று கத்தினான்.

கரிகாலனுடைய உடலைத் தடவிப் பார்த்துக் கொண்டு பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்திருந்த சம்புவரையர் கந்தமாறனுடைய கூச்சலைக் கேட்டு அண்ணாந்து பார்த்தார்.

அவருடைய பார்வை கந்தமாறனுக்கு அப்பால் சென்றது. அந்த அறையிலே இருந்த கட்டில் திரைச் சீலை அசைந்ததைக் கண்டார். மறுகணம் அத்திரைச் சீலையை விலக்கிக் கொண்டு ஓர் உருவம் வெளிப்படுவதைப் பார்த்தார். கண்களில் நீர் ததும்பியிருந்த காரணத்தினால் திரைச் சீலையிலிருந்து வெளிப்பட்டு வந்தது யார் என்பதை அவர் உடனே தெரிந்து கொள்ளவில்லை. இன்னும் சிறிது அருகில் அந்த உருவம் வந்ததைக் கண்டதும் அவள் தமது செல்வக் குமாரி மணிமேகலை என்பதை அறிந்து கொண்டார். அதனால் அவருக்கு ஏற்பட்ட வியப்பும் அருவருப்பும் வேதனையுடன் கலந்து முகத்தில் தோன்றின.

"மணிமேகலை! நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று அவர் கேட்ட வார்த்தைகள், கந்தமாறனையும் திரும்பிப் பார்க்கும்படி செய்தன.

"அப்பா! நான் இங்கேயேதான் இருந்தேன். அவரை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று அண்ணனுக்குச் சொல்லுங்கள். அவர் பேரில் குற்றம் ஒன்றுமில்லை!" என்றாள்.

கந்தமாறன், "அப்பா! பார்த்தீர்களா? இந்தப் பாதகன் எப்படி என் தங்கையின் மனத்தைக் கெடுத்திருக்கிறான், பார்த்தீர்களா? இவன் பேரில் குற்றம் ஒன்றும் இல்லையாமே?" என்று சீறிக் கொண்டே சிரித்தான்.

"ஆம், அண்ணா! நிச்சயமாக இவர் பேரில் குற்றம் ஒன்றுமில்லை!" என்று மணிமேகலை உறுதியாகக் கூறினாள்.

கந்தமாறனை ஒரு பக்கம் ஆத்திரமும் இன்னொரு பக்கம் வெட்கமும் சேர்ந்து பிடுங்கித் தின்றன.

"தங்காய்! வாயை மூடிக் கொள்! உன்னை யார் இங்கே அழைத்தார்கள்? நீ இங்கே வந்திருக்கவே கூடாது. உன் புத்தி சுவாதீனத்தில் இல்லை. உடனே



KMS-6/PREM ASSOCIATES TAM

இரண்டு மத்திய அரசு மந்திரிகள் ஆளுக்கொரு உலகப் படத்தை வைத்துக் கொண்டு எதையோ தேடிக் கொண்டிருந்தனர்.

முதலாமவர்: உலகப் படத்தில் நீங்கள் என்ன தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?

இரண்டாமவர்: நாம் கடனுதவி வாங்காத நாடு ஏதாவது இருக்கிறதா என்று தேடிக் கொண்டிருக்



கிறேன். நீங்கள் என்ன தேடிக் கொண்டிருக்கிறீர்கள்?

முதலாமவர்: நான் சுற்றுப் பிரயாணம் செய்யாத நாடு ஏதாவது இருக்கிறதா என்று தேடிக்கொண்டிருக்கிறேன்!

-ரா. லட்சுமிதாஸ்.

முன்கட்டுக்குப் போ! மற்றப் பெண்கள் உள்ள இடத்துக்குப் போ!'' என்று கத்தினான் கந்தமாறன்.

''இல்லை, அண்ணா! என் புத்தி சுவாதீனத்திலேதான் இருக்கிறது. உன் புத்திதான் கலங்கிப் போயிருக்கிறது. இல்லாவிட்டால் இவர் இளவரசரைக் கொன்றதாக நீ குற்றம் சாட்டியிருக்க மாட்டாய்!'' என்றாள் மணிமேகலை.

கந்தமாறன், ''அறிவுகெட்டவளே! இந்தக் கொலை பாதகனுக்கு நீ ஏன் பரிந்து பேசுகிறாய்?'' என்றான்.

''அவர் கொலை பாதகர் அல்ல; அதனால்தான்!'' என்றாள் மணிமேகலை.

கந்தமாறன் ஆத்திரச் சிரிப்புடன், ''இவன் கொலைபாதகன் இல்லை என்றால், பின்னே யார்? இளவரசரைக் கொன்றது யார்? நீ கொன்றாயா?'' என்றான்.

''ஆம்! நான்தான் கொன்றேன்! இந்த வாளினால் கொன்றேன்!'' என்றாள் மணிமேகலை.

இந்த வார்த்தைகளைக் கேட்டு அங்கேயிருந்தவர்கள் அவ்வளவு பேரும் திகைத்துப் போனார்கள். அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் வியப்புடன் பார்த்துக் கொண்டார்கள்.

ஒரு கண நேர திகைப்புக்குப் பிறகு கந்தமாறன் வந்தியத் தேவனை விட்டு விட்டு மணிமேகலையண்டை பாய்ந்து ஓடினான். அவள் கையிலிருந்த வாளைப் பிடுங்கிக் கொண்டான். அதன் நுனியை உற்றுப் பார்த்தான்.

''அப்பா! இதைக் கேளுங்கள். இவளால் இந்த வாளைத் தூக்கவே முடியவில்லை. இவள் இதனால் இளவரசனைக் கொன்றதாகச் சொல்லுகிறாள். இது இளவரசர் உடம்பில் பாய்ந்திருந்தால், திரும்ப இவளால் எடுத்திருக்க முடியுமா? இதன் நுனியில் பாருங்கள்! சுத்தமாய்த் துடைத்தது போலிருக்கிறது! வல்லவரையனைக் காப்பாற்றுவதற்காக இப்படிச் சொல்லுகிறாள்! இவன் பேரில் இவளுக்கு ஏன் இவ்வளவு அக்கறை? அவ்வளவு தூரம் இவளுடைய மனத்தை இந்தப் பாதகன் கெடுத்து விட்டிருக்கிறான். மாயமந்திரம் போட்டு மயக்கி விட்டிருக்கிறான்! அவனுடைய முகத்தைப் பாருங்கள்! அவன் செய்த குற்றம் அவன் முகத்திலேயே எழுதியிருப்பதைப் பாருங்கள்!'' என்றான்.

உண்மையிலேயே வந்தியத் தேவன் முகத்தில் வியப்பும் திகைப்பும் வேதனையும் குடிகொண்டிருந்தன. இத்தனை நேரம் மௌனமாயிருந்தவன் இப்போது வாய் திறந்து, ''கந்தமாறா! நீ சொல்வது உண்மைதான்! நான்தான் குற்றவாளி. உன் சகோதரி என்னைக் காப்பாற்றுவதற்காகவே இப்படிக் கற்பனை செய்து சொல்லுகிறாள்! இளவரசி! தங்களுக்கு நன்றி! என் உடலிலிருந்து உயிர் பிரிந்த பிறகும் தாங்கள் என்னிடம் வைத்த சகோதர பாசத்தை மறக்க மாட்டேன். ஆனால், தங்கள் தமையன் சொல்வதை இப்போது கேளுங்கள்! அந்தப்புரத்துக்குப் போய் விடுங்கள்!'' என்றான்.

இதைக் கேட்ட கந்தமாறனுடைய குரோதம் சிகரத்தை அடைந்தது. முன்னமே சிவந்திருந்த அவன் கண்கள் இப்போது அனலைக் கக்கின.

''அடே! எனக்காக நீ சிபாரிசு செய்யும் நிலைமைக்கு வந்துவிட்டதா? நான் சொல்லிக் கேட்காதவள் நீ சொல்லித்தான் கேட்பாளா? உன்னிடம் அவ்வளவு சகோதர வாஞ்சை வைத்திருக்கிறாளா இவள்? என்னுடன் பிறந்தவளா? உன்னோடு பிறந்தவளா? என்னைக் காட்டிலும் உன்னிடம் இவளுக்கு மரியாதை அதிகமா? அது ஏன்? என்ன மாய மந்திரம் செய்து இவள் மனத்தை அவ்விதம் கெடுத்துவிட்டிருக்கிறாய்? உன்னை நான் கொல்லுவதற்கு இதுவே போதுமே! இதோ, உன்னை யமனுலகம் அனுப்பிவிட்டு மறு காரியம் பார்க்கிறேன்! உன் அருமைச் சகோதரி கையில் வைத்திருந்த வாளினாலேயே உன்னைக் கொல்லுகிறேன். அது உனக்கு மகிழ்ச்சி தரும் அல்லவா?''

இவ்வாறு கத்திக் கொண்டே கந்தமாறன் வாளை ஓங்கிக் கொண்டு வந்தியத் தேவன் மீது பாய்ந்தான்.

(தொடரும்)

அத்தியாயம் பதினைந்து

அந்தச் சின்ன வீட்டின் முன்னால் கார் வந்து நின்றதும் கதவைத் திறந்து கொண்டு வேகமாக வெளியே இறங்கியது மஞ்சுளாதான். அவளைத் தொடர்ந்து சேகரும் கோபாலும் இறங்கினார்கள். அவர்கள் வந்திருப்பது டாக்ஸி டிரைவர் காளியப்பனின் வீட்டுக்கு. அது ஒரு பகட்டான பங்களா அல்ல. வசதிமிக்கதொரு வீடும்கூட அல்ல. சின்னஞ் சிறிய வீடு. ஒரு காலத்தில் குடித்தனம் நடத்தியிருக்கலாம், அந்த இடத்தில். அதற்கான அறிகுறிகள் தென்பட்டன. இப்போது மூலைக்கு மூலை ஒட்டடையும் குப்பையும் கூளமுமாக ஒரு பெண்ணின் கவனிப்பில்லாத பொலிவிழந்த நிலையில் தோற்றமளித்தது. இரண்டே அறைகள்தாம் புழக்கத்தில் இருக்கின்றன; மற்றவைகளில் நடமாட்டம்கூட இல்லை என்பதைப் புழுதி படிந்த தரையே கூறியது.

தனிக் கட்டையான காளியப்பனுக்கு அந்த இரண்டு அறைகளேகூட அதிகம் தான். காருக்குப் பயன்படும் பலவிதப் பொருள்கள் மூலைக்கு மூலை கிடந்தன. மோட்டாருக்காக அவ்வப்போது வாங்கப்பட்ட பொருள்களின் அட்டைப் பெட்டிகள், காகித உறைகள் அங்கங்கே அது ஒரு டாக்ஸி டிரைவரின் இருப்பிடம் எனக் கட்டியம் கூறின.

அழுக்காறு

கௌசிகன்



சமையலறையில் அவனோடு வாழ்ந்தவள் என்றைக்கோ மூட்டிய அடுப்பின் சாம்பல் அப்படியே அள்ளப்படாமல் படிந்து கிடந்தது. பாத்திரங்கள் பச்சைக் களிம்பேறிப் பரிதாபமாகக் காட்சி அளித்தன.

புழக்கத்திலிருந்த மற்றோர் அறையின் ஒரு மூலையில் ஒரு கட்டில். அதில் அழுக்கேறிய மெத்தை. அதன் மீது அலங்கோல நிலையில் ஒரு விரிப்பு. ஓய்ந்து போய் வரும் உடலைக் கிடத்தப் பயன்படும் அதை ஒழுங்குபடுத்தித் துப்புரவாக வைத்துக் கொள்ளக் காளியப்பனுக்குப் பொழுது ஏது? நன்றாக வாழ்ந்த ஒரு காலத்தை நினைவுபடுத்தும் சுவர்க் கடிகாரம், பூவேலை செய்த — கைவைத்த நாற்காலிகள் இரண்டு. ஒரு பெரிய மேஜை. மேஜை விளக்கு ஒன்று. இத்தனைக்கும் சிகரமாகச் சுவரில் தங்க ரேக்கு பிரேம் போட்ட என்லார்ஜ்மெண்ட் செய்த ஒரு பெரிய புகைப்படம். அது இளமை கொழிக்கும் ஒரு பெண்ணினுடையது. ஒரு காலத்தில் காளியப்பன் தன் வாழ்க்கையை அணு அணுவாக ரசித்து அனுபவிப்பதற்கு ஆதாரமாக இருந்தவள் அந்தப் பெண். அவனுடைய மனைவி.

தாறுமாறாகக் கிடந்த அந்த வீட்டிலுள்ள சாமான்களை இன்னும் மோசமாகப் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தார்கள், துப்பறியும் துரைசாமியும், அவரது சகாக்களும். போலீசின் ஆக்கிரமிப்புக்குப் பிறகு எதுதான் உருப்படியாக இருக்கும்? ஒவ்வொரு சாமானையும் உருட்டிப் புரட்டி, ஒரு டப்பா விடாமல் திறந்து குடைந்து கொண்டிருந்தார்கள்.

''கொலைக் குற்றத்தை ருசுப்படுத்த இங்கு ஏதாவது தேடிக் கொண்டிருந்தீர்களானால் அது வீண் வேலை. உங்கள் முயற்சியை வேறு இடத்தில் பயன்படுத்தலாம்... அது சரி, காளியப்பன் எங்கே?'' என்று கேட்டாள் மஞ்சுளா துரைசாமியைப் பார்த்து.

சின்னப் பணப் பெட்டி போன்றிருந்த ஒன்றை நெம்பித் திறந்து, அதிலிருந்த வெறும் பழங் காகிதங்களைக் கண்ட ஏமாற்றத்தில் அதைப் பட்டென்று அழுத்தி மூடியவாறே துரைசாமி பேசினார். ''தேவைக்கு அதிகமாகவே தடயங்களைச் சேகரித்துவிட்டோம் மஞ்சுளா. அந்தக் காளியப்பனை நீ இன்னும் அப்பாவி என்று எண்ணிக் கொண்டிருக்கிறாயே, அதுதான் வருத்தமாக இருக்கிறது.''

''வருத்தப்பட வேண்டாம். வேதனைப்பட வேண்டிய வேளை வரப் போகிறது. வாருங்கள், சேகர் போகலாம்'' என்று கூறியபடியே வெளியே நடந்தாள் மஞ்சுளா.

மங்களாவின் கார் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தின் அலுவலகத்துக்கு முன் போய் நின்றது. சேகரும் கோபாலும் மங்களாவைத் தொடர்ந்து ஸ்டேஷன் படிகளில் ஏறிக் கொண்டிருந்தார்கள். அவர்களை இன்ஸ்பெக்டரோ, வக்கீல்



நீலமேகமோ வரவேற்கவில்லை. வரவை விரும்பவும் இல்லை. ஆனால் அங்கிருந்த காளியப்பன் அப்படி இருக்க முடியுமா? மஞ்சுளாவைக் கண்டதும் அவன் முகத்தில் ஓர் இளக்கம் ஏற்பட்டது.

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தின் முன்னாலிருந்த மேஜையில் காளியப்பனைக் குற்றவாளியாக்கும் கருவிகளாக இரு தடயங்கள் கொலுவீற்றிருந்தன. நர்ஸ் நிர்மலாவின் டம்பப் பை ஒன்று; மற்றது டாக்சியைக் கிளப்ப உதவும் சாதனம் (கிராங்க்). அந்த இரும்புக் கம்பியில் ரத்தக்கறை படிந்திருந்தது. அவை அருகே ஒரு கொத்துச் சாவியும் கிடந்தது. மேஜையின் அருகிலிருந்த நாற்காலியில் தானாகவே போய்அமர்ந்து கொண்ட மஞ்சுளா, ''நீங்கள் கைப்பற்றிய அந்தப் பணம் எங்கே?'' என்று கேட்டாள்.

''உங்கள் பெருமதிப்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான காளியப்பனுடைய வீட்டிலிருந்து அந்தப் பணம் கைப்பற்றப்பட்டிருக்கிறது. ஒரே இடத்தில் அல்ல. கத்தை கத்தையான ரூபாய் நோட்டுக்களைப் பல்வேறு இடங்களில் ஒளித்து வைத்திருந்தான்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''காளி....'' மஞ்சுளாவின் குரலிலும் கடுமை கலந்திருந்தது. ''அது யாருடைய பணம்?''

காளியப்பனின் இறுகிய வாய் திறக்கவே இல்லை.

''அத்தனை பணமும் தம்முடையது தான் என்கிறார் தங்கள் மதிப்புக்குரிய டாக்ஸி டிரைவர் காளியப்பன் அவர்கள்!'' என்றார் இன்ஸ்பெக்டர் கேலி கொப்பளிக்கும் குரலில்.

'' அப்படியானால் அது அவனுடையதாகத்தான் இருக்கும்'' என்றாள் மஞ்சு.

பிறகு தொடர்ந்து ''இன்ஸ்பெக்டர் சார்! காளியப்பன் நிர்மலாவைக் கொலை செய்து அவளிடமிருந்த பணத்தை அபகரித்துவிட்டான் என்று உங்களால் வழக்கு ஜோடிக்கப் படலாம். ஆனால் ருசுப்படுத்த முடியாது! போலீஸின் சந்தேகப் பிடிக்குள் அகப்பட்ட ஒருவனிடம் கொஞ்சம் பணம் இருந்தாலுமே அது திருடப்பட்டது என்றும் அதை அடையக் கொலையே செய்திருக்கிறான் என்றும் வாதாடுவது சகஜம். நீங்கள் காளியப்பனின் வீட்டிலிருந்து கைப்பற்றிய நோட்டுக்கள் எல்லாமே புதியவைதானா?'' என்று கேட்டாள்.

''சில பழைய நோட்டுக்களும் இருந்தன'' என்றார் வக்கீல் நீலமேகம்.

முறுவல் பூசிய முகத்துடன் கேட்டான் சேகர்: ''கைப் பற்றிய தொகையின் மதிப்பென்ன இருக்கும்?''

'' ஆறாயிரம் ரூபாய்களுக்கு மேல் இருக்கும்.''

''பண்ணைக் காரியஸ்தன் ராமு டிராக்டர் விற்ற பணம் மூவாயிரம் ரூபாய், நர்ஸ் நிர்மலாவின் பையில் உத்தேசமாக ஆயிரம் ரூபாய்களாவது தேறி இருக்கும். ஆக நாலாயிரம் ஆயிற்று'' என்று சேகர் சொல்லிக் கொண்டு போனான். ''மிஸ்டர், ஏகாம்பரம்! உங்கள் பைலில் முடிவு காண முடியாத திருட்டுக் கேஸ்கள் நிறைய இருக்குமே. அதில் சிலவற்றைக் காளியப்பனிடமிருந்து கைப்பற்றிய மீதித் தொகை இரண்டாயிரத்துக்குச் சரிக்கட்டலாமே. ஏனென்றால் நீங்கள், 'ஸீஸ்' செய்த தொகையில் சில பல பழைய நோட்டுக்களும் இருக்கிறதல்லவா? அந்த 'அன் ஸால்வ்டு' கேஸ்களுக்கான தொகை அவை என்று முடிவு கட்டுவதில்....''

இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் கோபத்துடன் குதித்தெழுந்து காளியப்பனைச் சுட்டிக் காட்டி, ''மிஸ்டர், சேகர்! இந்த மனிதன் குற்றவாளி. நாளைக் காலைக்குள் இவன் மீது முறையான குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வேன். விரைவிலேயே இவனை 'கன்விக்ட்'டும் செய்வேன்'' என்றார் அழுத்தந்திருத்தமாக. அதே தோரணையில் ஹெட் கான்ஸ்டபிளுக்கும் கட்டளையிட்டார். '' இவனை லாக்-அப்பில் தள்ளிப் பூட்டப்பா!''

''என்னை லாக்கப்பில் தள்ள முடியாது — கூடாது'' என்றான் காளியப்பன். அவன் குரல் நிதானமாக, ஆனால் உறுதியோடு வெளிப்பட்டது. மேஜை மீதிருந்த கொத்துச் சாவியைப் பாய்ந்து எடுத்துக் கொண்டவன் இன்னொரு பொருளான அந்த ரத்தக் கறை படிந்த (கிராங்க்) இரும்பு சாதனத்தையும் வாவிக் கொண்டான். ஏகாம்பரத்துக்கு நடந்தது என்ன என்பது விளங்குவதற்குள் காளி கதவின் அருகே போய் விட்டான். அங்கு நின்று கொண்டிருந்த அரசாங்க ஸி.ஐ.டி.யான துரைசாமியைத் தன் முழங் கையால் தள்ளி ஒதுக்கிக் கொண்டு படிகளில் இறங்கி ஓடலானான். கைதி தப்பி ஓடுகிறான் என்பதை உணருவதற்கே துரைசாமிக்குக் கொஞ்சம் நேரமாயிற்று.

அந்தத் திகைப்பிலிருந்து விடுபட்டுத் தன் நிலை அடைந்தது முதலில் மஞ்சுளா தான். 'ஓடு.... ஓடு... காளியப்பா. இவர்கள் கையில் சிக்காதே!' என்று அவளது உள் மனம் உற்சாகமாகக் கெக்கலி கொட்டிக் குதூகலப்பட்டது.

''பிடியுங்கள் அவனை!'' என்று கர்ஜித்தார், ஏகாம்பரம், துரைசாமியிடம்.



போகுமிடமெல்லாம்
பொங்கிடும் அழகு
பொலிந்திட அணிவீர்...

மபத்லால் சேலைகள்

மபத்லால் சேலைகள், சீராடும் பேரணி
சிந்தை குளிர்த்திடும் பிரிண்ட்கள்,
விந்தை மிகுந்திடும் வண்ணங்கள்,
உன்னதமான காட்டன், 100%
போலியஸ்டர் மற்றும் கலவைத்
திறுகள்!

ஸ்டாண்டர்ட், பம்பாய் • ஸ்டாண்டர்ட் (நியூ சீனா),
பம்பாய் • ஸ்டாண்டர்ட், தேவாஸ் • மபத்லால் ஃபைன்,
நவ்ஸாரி: யூனிட் நம்பர் 1 • மபத்லால் ஃபைன்
(ஸாஸன்), பம்பாய்: யூனிட் நம்பர் 2
மபத்லால் ஃபைன் (நியூ யூனியன்), பம்பாய்:
யூனிட் நம்பர் 3 • நியூ ஷொராக், அகமதாபாத்
நியூ ஷொராக், நடியாத் • சூரத் காட்டன், சூரத்
மிஹ்ர் டெக்ஸ்டைல்ஸ், அகமதாபாத்

AIYARS-M-131 TM

இந்தச் சந்தர்ப்பத்தில் கோபால் தற்செயலாகத்தான் எழுந்திருந்தானே அல்லது திட்டமிட்டுத்தான் எழுந்திருந்தானே தெரியாது. எழுந்திருந்தவன் வாசலை நோக்கிப் பாய்ந்தான். அதே சமயம் யாரோ பிடித்துத் தள்ளியதைப் போல வழியை மறித்துக்கொண்டு குறுக்கே மடாரென்று சாய்ந்தான். அதே வேளையில்தான இன்ஸ்பெக்டரின் உத்தரவுப்படி செயல்படத் துப்பறியும் போலீஸ் அதிகாரி துரைசாமி தாவி எழவேண்டும்? இருவரும் மடாரென்று மோதிக் கொண்டு அப்படியே நிலைகுலைந்து கீழே விழுந்தார்கள். உடற்பயிற்சி நிலையத்தின் உபாத்தியாயரும் குத்துச் சண்டை வீரனுமான கோபாலின் மோதல் சாதாரணமானதாகவா இருக்கும்?... கோபால் எழுந்திருந்த பிறகும் கூட துரைசாமிக்கு நிதானம் வரவில்லை. இதற்குள் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரம் சுதாரித்து எழுந்து நின்ற கோபாலை ஒருபுறமாக ஒதுக்கித் தள்ளிவிட்டு வெளியே ஓடலானார். இத்தனை காவல் தாமதத்துக்குப் பிறகு காளியப்பனா இவர்களிடம் சிக்குவான்?



''பில் எத்தனை காசு?''
''பில் 50 காசு; டிப்ஸ் 20 காசு!''

வக்கீல் நீலமேகம் வேதனை கலந்த குரலில் கூறினார். ''காளியப்பனின் இந்தச் செய்கை அவன்தான் குற்றவாளி என்பதை உறுதிப்படுத்துகிறது.''

''காளியப்பனைக் குற்றவாளியாக்க முடியாது நீலமேகம் சார். கொஞ்சமும் சந்தேகம் வேண்டாம்'' என்றாள் பண்ணையார் செல்வமான மஞ்சுளா.

தெருக் கோடியில் இரண்டாகப் பிரியும் ரஸ்தாவில் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரமும், ஸி. ஐ. டி. துரைசாமியும் கைநழுவிப் போன காளியைப் பிடிக்க முடியாமல் வெறுங் கையர்களாய் — வெறுப்பும் கோபமும் பொங்க ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டு திரும்பி வருவதை அங்கிருந்தபடியே எல்லாரும் பார்த்தார்கள்.

இன்ஸ்பெக்டர் திரும்பி வந்ததும் எரிமலையாக வெடிப்பார் என்பதைத் தெரிந்து கொண்ட மஞ்சுளா சேகருக்குச் சைகை செய்து கிளம்பத் தயாரானாள்.

முல்லை வாசல் ஜமீனுக்குத் திரும்பிய மூவரும் வேப்பமரத்துப் பங்களாவில் உட்கார்ந்து தீவிரமாகச் சிந்திக்கலானார்கள். சூழ்நிலையின் போக்கையும் நடந்த சம்பவங்களையும் சீர்தூக்கிச் சிந்திக்கலானான் சேகர்.

''இந்தச் சம்பவங்களுக்குக் காரணமானவன், அல்லது அவன் யார் என்பதைப் புலனுக்கும் தடயங்கள் அல்லது அவனைப் பற்றிய ஏதோ ஒன்று இந்தப் பண்ணைக்குள் நமக்குப் புலப்படாமல் மறைந்திருக்கிறது'' என்றான் சேகர்.

''நாம்தான் இந்தப் பண்ணையின் மூலைமுடுக்கெல்லாம் பார்த்தோமே?'' என்றாள் மஞ்சு.

''ஒரு இடத்தைத் தவிர என்று சொல்'' திருத்தம் செய்தான் சேகர். ''திராட்சைக் கொடி வீட்டை நாம் எங்கே சோதனை இட்டோம்? இந்த இருட் போர்வையில் அந்த இடத்தை நாம் சோதனையிட வேண்டும் — உன் அப்பாவுக்குத் தொந்தரவு இல்லாத வகையில்.''

மஞ்சுளாவிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. அவள் சுந்தர முகம் சோம்பியது.

''நீங்கள் நினைக்கிறபடியே அந்த வீட்டைப் போய்ப் பார்க்கலாம், வாருங்கள்'' என்றாள்.

மூவரும் ஒரு தீர்மானமான முடிவோடு வெளி வந்த போது இரவு அமைதியாக இருந்தது. சப்தப்படுத்தாமல் மெல்ல நடந்தார்கள். பெரிய பங்களாவின் ஜன்னல்கள் விளக்கு ஒளியில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. மஞ்சுவின் தகப்பனார் இருக்கும் மாடி அறை ஜன்னலுக்குத் திரைச் சீலை கட்டி இருந்தார்கள். அது அந்த அறையின் மங்கிய ஒளியையும் வடிகட்டி அனுப்பிக் கொண்டிருந்ததைக் கண்டான் சேகர். தன் பார்வையை அந்தப் பிரதான பங்களாவிலிருந்து திருப்பித் திராட்சைக் கொடி வீட்டின் மீது பதித்த போது அது மர்மக் கதைகளில் வர்ணிக்கப்படும் பயங்கரங்களைத் தன் னகத்தே கொண்ட கட்டடமாகத் தோற்றமளித்தது. மங்கலான நிலவொளியில் கவனிப்பாரின்றிக் கைவிடப்

பட்ட அந்தக் கட்டடம் கம்பீரமாகத் தான் காட்சியளித்துக்கொண்டிருந்தது.

சேகர், கோபால், மஞ்சுளா மூவரும் அதை நெருங்கிய போது ஏதோ ஒன்று சட்டென்று அவர்கள் நடையைத் தடை செய்தது.

''என்னது, அந்தச் சப்தம்?'' என்றான் கோபால்.

திராட்சைக் கொடி வீட்டின் பலகைகள் வைத்துப் பலவந்தமாக மூடுக்கப்பட்ட ஜன்னல்களுக்கு அப்பாலிருந்து — அந்தக் கட்டடத்தினுள்ளிருந்து ஏதோ ஒரு சப்தம் கிணுகிணுத்தது.

''டெலிபோன் மணிக்குப் பதிலாக இணைக்கப்பட்ட 'பஸ்ஸரின்' ஒலி அது. அந்தப் பங்களாவிலிருந்து இங்குள்ள யாருக்கோ யாரோ டெலிபோன் செய்கிறார்கள்.'' சிந்தனை அப்பிக் கிடந்தது சேகரின் குரலில்.

மூன்றாவது முறையாக அந்தப் 'பஸ்ஸிங்' சப்தம் ஒலித்தது. ஆனால் இந்தத் தடவை அதன் குரல் மாறி ஒலித்தது. குளவியின் ரீங்கார ஓசையிலிருந்து ஆலயமணி அடித்து ஓயும் ஒருவித 'ம்...ம்' ஓசையாக மாறிப் பிறகு அதுவும் மறைந்து விட்டது. மஞ்சுளா சேகரை நெருங்கி அவனிடம் ஒட்டிக் கொண்டு நின்றாள். கோபால் இவ்விருவருக்கும் கொஞ்சம் முன்னால் தள்ளி நின்று கொண்டிருந்தான் — சுற்றுச் சூழலை உன்னிப்பாக நோட்டமிட்டபடி. அந்தப் பண்ணைக்கு வந்த அன்று இரவு வேப்ப மரத்துப் பங்களாவில் இவர்கள் இருந்தபோது இரவுச் சாப்பாட்டுக்குப் பெரிய பங்களாவிலிருந்து கோகிலா மஞ்சுளாவை அழைத்தது நினைவுக்கு வந்தது கோபாலுக்கு. வேப்ப மரத்துப் பங்களாவின் ஹாலிலிருந்த டெலிபோனில் அன்றும் இப்படித்தான் குளவியின் ரீங்காரமாக ஒலித்தது. மஞ்சுளா ரிஸீவரைக் கையில் எடுத்ததும் அந்த ஒலி இப்படித்தான் 'ம்...ம்' என்று மாறியது. இதைக் கோபால் சேகரிடம் விளக்கினான்.

''அந்தப் பெரிய பங்களாவிலிருந்து யாரோ ஒருவர் இந்தத் திராட்சைக் கொடி வீட்டுக்குள் இருக்கும் யாருடனோ தொடர்பு கொண்டிருக்கிறார்கள்'' என்று கூறிய சேகர் உடனே தன் நண்பன் கோபாலுக்கு ஆணையிட்டான். ''கோபால்! இந்த வீட்டின் கொல்லைக் கதவைப் போய்ச் சட்டென்று கண்காணி.''

கோபாலும் ஓடினான் பின்பக்கத்துக்கு. முன் பக்கத்து வாசல் கைப்பிடியைப் பற்றிப் பலமாக உந்தித் தள்ளிப் பார்த்தான் சேகர். அது பக்குவமாகப் பூட்டப்பட்டிருந்தது.

கையுறையும் காட்டிக் கொடுக்கும்

கையுறை போட்டுக் கொண்டு சாமர்த்தியமாகத் திருடும் திருடர்களையும் இப்பொழுது ஸ்காட்லாந்து யார்ட் போலீஸார் கண்டு பிடித்து விடுகிறார்கள். கை விரல் குறியைப் போலவே கையுறைகள் பதிக்கும் குறிகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருக்கும். அதை வைத்துக் கண்டுபிடித்து விடுகிறார்கள்.



- தர்மபுரி - முத்து

மஞ்சுளா சேகரின் அருகே வந்தாள். அவன் கையிலிருந்த வாக்கிங் ஸ்டிக்கை வாங்கிக் கொண்டு நுழைவாசலுக்கு அருகிலிருந்ததொரு கட்டைகள் வைத்து அறையப்பட்டிருந்த ஜன்னலைத் தன் பலத்தின் துணை கொண்டு வாக்கிங் ஸ்டிக்கின் ஆதரவோடு நெம்பித் திறக்கும் முயற்சியில் ஈடுபடலானாள்.

தன் முயற்சிக்குப் பலன் ஏதுமில்லாத நிலையில் சேகர் மூடிய கதவை முறைத்துப் பார்த்தபடி, 'இப்போது இல்லாவிட்டாலும் எப்படியும் உன்னை நீ வெளிப்படுத்திக் கொண்டுதான் ஆக வேண்டும்' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான், முகவாயைத் தடவியபடியே.

அப்போது.....

''கிளிங்... கிளிங்...'' என்று ஒரு சப்தம். சேகர் நின்ற இடத்திலிருந்தபடியே உடலை மட்டும் திருப்பி ஓசை வந்த திசையில் பார்த்தான். மஞ்சுளா தன் கைப் பிரம்பின் உதவியால், குறுக்கே வைத்து ஆணி அடிக்கப்பட்டிருந்ததொரு பலகையின் பிடி தளரும் படியாகச் செய்து கொண்டிருப்பதைக் கண்டான். ஆணிகள் மரத்திலிருந்து விடுதலை பெற்றுக் 'கிறீச்'சொலிகளைக் கிளப்பின. மஞ்சுளாவின் செயலைக் கவனித்தபடியே இன்னும் அந்தத் திராட்சைக் கொடி வீட்டின் நுழை வாயிலில் நின்று கொண்டிருந்தான் சேகர். அப்போது ஒரு மின்னல் வேகத்தில் மர்மங்கள் நிறைந்த அந்தக் கொடி வீட்டின் கதவு படீரென்று திறந்தது. அதே வேகத்தில் பளீரென்று மறுபடியும் மூடிக் கொண்டது. அதிலிருந்து வெளிப்பட்டதொரு வேகம் சேகரை உந்தித் தள்ளியது ஒருபுறமாக. திராட்சைக் கொடியின் அடிக் கட்டையில் போய் விழுந்தான் சேகர். அவனிடம் கைத்தடி இல்லாதது வேறு அவனை நிலைகுலையச் செய்துவிட்டது. அப்படியும் தொங்கித் தழைத்திருக்கும் திராட்சைக் கொடிகளைப் பற்றிக் கொண்டு சுதாரித்து எழுந்தான். தன் பின்னால் தடதடவென்று ஓடும் ஓசை. மஞ்சுளா பலகையைப்

பெயர்க்கும் தன் முயற்சியைக் கைவிட்டுக் காதலனுக்குக் கைகொடுக்க ஓடி வந்தாள். இதற்குள் கட்டடத்திலிருந்து வெளிப்பட்டுச் சேகரை நெட்டித் தள்ளிய உருவம் வெகு வேகமாகச் சரிவில் இறங்கி நிழல்களினூடே ஓடலாயிற்று. எல்லாம் இமைக்கும் நேரத்தில்.

''கோபால்...!'' கத்தினான் சேகர்.

''இதோ வந்தேன்!'' குரல் கொடுத்தான் நண்பன்.

''பிடி... பிடி... ஓடுகிறான். பின் தொடர்ந்து செல்'' மஞ்சுளா தவிப்போடு கூச்சலிட்டாள். சேகர் மஞ்சுளாவைப் பற்றிக் கொண்டு எழுந்து நின்ற அதே வேளையில் கோபால் அவர்கள் அருகே ஓடி வந்தான். மஞ்சுளாவின் விரல் சுட்டிக்காட்டி இட்ட ஆணையை மேற்கொண்டு அந்தத் திசையில் ஓடலானான். அவனைத் தொடர்ந்து மஞ்சுவின் மலர்ப் பாதமும் பரபரக்கலாயிற்று. அவ்விருவரையும் பின்பற்றித் தன் மடக்க முடியாத காலை இழுத்து வைத்தபடி சேகரும் நடக்கலானான். கைத்தடி இல்லாததால் அவனால் வேகமாக ஓட முடியவில்லை. மஞ்சுளா தப்பி ஓடும் உருவத்தைப் பிடிக்கும் பரபரப்பில் வாக்கிங் ஸ்டிக்கையும் கையோடு எடுத்துக்கொண்டு ஓடி விட்டாள்.

இங்கும் அங்கும் தேடியலைந்தார்கள். மூவரும் மூலைக்கு ஒருவராக. ஆனால் பலன் ஏதுமில்லை. பிரதான பங்களாவின் ஓர் ஈசானிய மூலையில் மூவரும் வந்து சேர்ந்து கொண்டார்கள். தன் கைத்தடியை வாங்கிக் கொண்டான் சேகர். சற்றுத் தூரத்தில் ஒரு சிறிய கார் நிறுத்தப்பட்டிருந்தது. மஞ்சுளா அதன் கதவைத் திறந்ததும் உள்ளே விளக்குப் பளீரிட்டது. அதில் யாருமில்லை. அது கோகிலாவின் சகோதரனான டாக்டர் ரகுநாத்தினுடைய கார். மஞ்சுளா வெறுப்போடு கார்க் கதவை உந்திச் சாத்திவிட்டுத் திரும்பினாள். ''எங்கேதான் போயிருப்பான்?'' என்றான் கோபால். பிடிக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் அவன் குரலில் தொனித்தது.

''எங்களைவிட நீதானேப்பா அவனை அதிக நெருக்கத்தில் தொடர்ந்து ஓடினாய்? உனக்கே அவன் போன இடம் புரியவில்லையா?'' என்றான் சேகர்.

''உண்மைதான். வெகுதூரம் வரை அந்த உருவத்தைக் குறி வைத்துத்தான் ஓடினேன். என்ன வேகமாக ஓடினான் தெரியுமா? டேயப்பா!'' தேக்கி வைத்த மூச்சுக் காற்றை வெளியேற்றிய கோபால். ''திடீரென்று ஆள் என் பார்வையிலிருந்து மறைந்து விட்டான். எப்படி எங்கே போனான் என்றுதான் தெரியவில்லை!'' என்றான்.

''உண்மைதான் சேகர்'' ஆமோதித்தாள் மஞ்சுளா. ''நான் இந்த மூலைக்கு வரும் போது அந்த உருவத்தை அதோ அங்கு பார்த்தேன். திடீரென்று எப்படியோ மாயமாகப் போய் விட்டான். அதுதான் விந்தையாக இருக்கிறது.''

''ஒரு வேளை பங்களாவுக்குள் நுழைந்திருப்பானோ?'' என்ற சேகரின் சந்தேகத்தைக் கோபால் மறுத்துவிட்டான்.

''நான் அந்த உருவத்தைக் கடைசியாகப் பார்த்தது அதோ அங்கே....'' என்று பங்களாவுக்கு அப்பால் ஓர் இடத்தைக் காட்டினான் கோபால். ''அவன் உள்ளே போயிருக்க முடியாது. நான் துரத்திச் சென்றது மனிதனை இல்லை, சேகர். ஏதோ ஓர் ஆவி, பேய், பிசாசு. அடேயப்பா, என்ன வேகம், என்ன ஓட்டம்!'' என்று அலமந்து கொண்டிருந்தான் கோபால்.

''என்னைத் தாக்கித் தள்ளி உருட்டி விட்டுப் போனவன் ரத்தமும் சதையும் கொண்ட மனித உருவம்தான், கோபால். அவனுடைய தோற்றத்தின் ஒரு பகுதியைக்கூட என்னால் உணர முடிந்தது. உங்களில் யாரேனும் அவனை வர்ணிக்க முடியுமா?'' என்று கேட்டான் சேகர்.

'' ஏதோ ஓர் உருவத்தைத்தான் நான் துரத்திக் கொண்டு ஓடினேனே தவிர அந்த உருவத்தின் அமைப்பு என்னில் பதியவில்லை'' என்றான் கோபால்.

''என்னாலும் அதை உருவகப்படுத்த முடியாது'' என்றாள் மஞ்சுளா.

''இனி அவனைத் தேடியலைவதில் பயனில்லை. இத்தனை நேரம் அவன் நல்ல பாதுகாப்பான இடத்தில் ஒளிந்து கொண்டிருப்பான். திராட்சைக் கொடி வீட்டினுள்ளே அவன் யார் என்பதைப் புலப்படுத்தும் தடயங்கள் ஏதாவது விடப்பட்டிருந்தாலும் இருக்கலாம்'' என்றான் சேகர். எப்படியும் திராட்சைக் கொடி வீட்டினுள் புகுந்து ஆராய்வது என்ற முடிவோடு மூவரும் திரும்பினார்கள்.

முன்பு ஒரு தடவை திறக்காத சாவியோடு போய்த் திண்டாடியமாதிரி ஆகிவிடக் கூடாதென்று 'டூல்' ரூமிலிருந்து ஒரு பெரிய சாவிக் கொத்துடன் வந்தாள் மஞ்சுளா. சேகர் கோபாலிடம் கூறினான்: ''கோபால், அதோ அந்த மூலையில் இருக்கு பார் சில ஆயுதங்கள். சுத்தி, சின்னக் கோடாலி முதலியன. அவற்றில் சில நமக்குத் தேவையாக இருக்கலாம். முடிந்தவற்றை எடுத்துக் கொண்டு வா!''

(தொடரும்)

ஆயிரத்தைக் கண்டவர்

நெசவாளிக் குடும்பத்தில் பிறந்து, இன்றும் 'தறி'யிலே அமர்ந்து அந்தத் தொழில் நுணுக்கத்தை வளர்த்து வரும் திரு எஸ். முத்து செட்டியார், ஓர் அசாதாரண மனிதர்! எப்படி?

தம் வீட்டில் நெய்யப்படும் பட்டுப் புடவையை விற்க முத்து செட்டியார் எந்த விற்பனை நிலையத்துக்கும் போவதில்லை! ஜவுளி வியாபாரிகள் கொடுக்கும் ஆர்டர்களை ஏற்று இவர் புடவைகள் தயாரிப்பதில்லை!

சென்னை, பம்பாய், டில்லி, ஹைதராபாத் என் — நியூயார்க்வரையிலும் திரு முத்து செட்டியாருக்கு நேரடி வாடிக்கையாளர்கள் இருப்ப

முத்துச் சேலை; முத்தான சேலை!

தால் இவரது உற்பத்தியும் வியாபாரமும் 1936 முதல் இன்றுவரையில் தனி நபர்களுடன் தொடர்பு கொண்ட முறையில்தான் நடக்கிறது.

''நீங்கள் எந்த வயதில் தறியில் நெசவு செய்ய ஆரம்பித்தீர்கள்?''

''என் பதினோராவது வயதில் காஞ்சிபுரம் ராகவ செட்டியார் வீட்டில் தறி வேலைக்குச் சேர்ந்தேன். தறியில் கரைக்கட்டுக்குக் கோத்து வாங்கல். இரண்டு வருடங்கள் வேலை கற்றுக் கொண்டு வயது பதின்மூன்றில் சொந்தமாகப் பாவாடைத் தறி போட ஆரம்பித்து விட்டேன்.''

''பிறகு பட்டுப் புடவை நெய்யத் தொடங்கினீர்களா?...''

''இல்லை. பதினாறாவது வயதில் எனக்கு இந்த நெசவுத் தொழில் பிடிக்கவில்லை. சங்கீத ஆசை பிறந்து விட்டது. அதைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். இசை உலகில் இணையற்ற புகழுடன் விளங்கிய நாயனாப் பிள்ளையிடம் போய்ச் சேர்ந்தேன். அவரிடம் பதினைந்து வருஷங்கள் இருந்தேன். நாயனா மறைந்தார்.''

''பிறகு?''

''பதினெட்டு வருஷங்கள் மறந்து போன தறியை மீண்டும் இயக்க வந்து விட்டேன்!''


சங்கீதத்தை அப்பியசிக்கா விட்டாலும் சங்கீத மோகம் இவரை விடவில்லை. சென்னையில் நடக்கும் முக்கியமான கச்சேரிகளைக் கேட்டு ரசிக்கத் தப்பாமல் ஆஜராகி விடுவார்.

''சென்னையில் எப்படி வாடிக்கையாளர்கள் ஏற்பட்டார்கள்?''

''முசிரி சுப்ரமணிய ஐயர் மூலம் திரு வி. சந்திரசேகரன் வீட்டுக்குப் போனேன். காலஞ்சென்ற ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய ஐயரின் பெண்ணுக்குக் கல்யாணம் வந்தது. கலைமகள் நாராயணசாமி ஐயரின் குமாரர் திரு ராமரத்தினம் மாப்பிள்ளை. அந்தக் கல்யாணத்துக்குப் பதினாறு புடவைகள் கொடுத்தேன். அந்தக் கல்யாணப் பந்தலில் தான் என் பட்டுப் புடவை வியாபாரத்துக்கு அஸ்திவாரம் அமைந்தது.''

பதினாயிரக் கணக்கில் பட்டுப் புடவைகளையும் மூந்நூறுக்கும் அதிகமான கூறைப் புடவைகளையும் தயாரித்து விட்ட திரு முத்து செட்டியாரின் புடவைகளை 'முத்துச் சேலை' என்றே வாடிக்கைக்காரர்கள் சொல்வார்கள்.

இவரிடம் ஒரு சேலையைப் பெறுவதற்காகப் பலந்த பொரிசுகளைப் பிடிக்கும்





பெரிய இடத்துப் பெண்மணிகள் ரொம்பப் பேர்!

ஒரு கல்யாணத்திலோ இதர விசேஷங்களிலோ கூடியிருக்கும் நூற்றுக் கணக்கான பெண்மணிகளுக் கிடையில் முத்து செட்டியார், தாம் கொடுத்த புடவையைப் பளிச்சென்று அடையாளம் கண்டு சொல்வார். எப்படியெனில் புடவையும் பளிச்சென்று ஒரு தனி மெருகுடன்தான் இருக்கும்!

''முன்பெல்லாம் போல் இப்போது உயர்ரக சாயமும் ஜரிகையும் கிடைப்பதில்லை. இரண்டாந்தர மூன்றாந்தரச் சரக்கு கொண்டு புடவை நெய்யவே மனம் வரவில்லை. அதனால் தறி போடுவதை ரொம்பக் குறைத்துக்கொண்டேன்'' என்கிறார் இந்த விசித்திர வியாபாரி.

''உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மறக்க முடியாத நிகழ்ச்சிகள் ஒன்றிரண்டைச் சொல்லுங்கள்!''

''ஆகா! என் அறுபதாண்டு நிறைவுக்கு மயிலை உட்லண்ட்ஸில், பிரமுகர்களின் ஆதரவில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடந்தது. திரு ராமரத்தினமும் திரு ஆர். ஐயாதுரையும் இதற்கு மூல காரணம். 'ஒரு நெசவாளியான என்னைப் பாராட்டவா இப்படியொரு விழா?' எனத் திகைத்துப் போனேன்...

''இரண்டாவது என்னால் தயாரிக்கப்பட்ட பட்டுப் புடவையை இன்றையப் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் மியூஸிக் அகாடமியின் அஸ்திவாரக் கல்நாட்டு விழாவுக்கு நேருஜியுடன் வந்தபோது அணிந்திருந்தார்கள்... அந்த விழாவுக்குச் சென்றிருந்த நான் இதைப் பார்த்துப் பூரிப்படைந்தேன்!...''

தம் சுய முயற்சியால் சம்பாதித்த பணத்தில் கட்டிய வீடொன்றைத் தாய் — சேய் நல விடுதிக்கு நன்கொடையாகத் தந்து விட்டார். 13—12—70ல் திரு நெடுஞ்செழியன் திறந்து வைத்தார். இன்னொரு வீட்டை விரைவில் பள்ளியொன்றுக்குக் கொடையாகத் தரப்போகிறார்!

பேட்டி: ஏ. சுவாமிநாதன்

சிறு தொழில் அதிபர்களே!



புதிய
தொழில்
ஆரம்பியுங்கள்
விரிவுபடுத்துங்கள்
அல்லது
நவீனப்
படுத்துங்கள்

அதறகு யூகோபாங்க் நிதி உதவுகிறது

சொந்தமாக ஒரு சிறு தொழிலை ஆரம்பிக்க உங்களிடம் சிறந்த திட்டம் இருக்கலாம் அல்லது இருக்கும் தொழில்களை விரிவு படுத்த அல்லது நவீனப்படுத்த விருப்பப் படலாம். நிதியின்மை அதற்கு முட்டுக் கட்டையாக இருக்கத் தேவையில்லை. எங்களிடம் வாருங்கள். உங்கள் சொந்த தொழில் ஆரம்பிக்க அல்லது இருக்கும் தொழிலை விரிவு படுத்த அல்லது நவீனப்படுத்த உங்களுக்கு நிதி உதவி செய்ய முயற்சிக்கிறோம்.

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

யூகோ பாங்க் வளம் பெற வழி வகுத்தளிக்கின்றது

UCO-5/71

நீர்தாமோ எழுத்தாளர்?

தமிழ் எழுத்தாளர் சங்க முதல் மாநாட்டை கோவையில் நடத்தினார்கள். "அந்த மாநாட்டில் ஏராளமான எழுத்தாளர்கள் கலந்து கொண்டார்கள். எனினும் மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் எவையும் எழுத்தாளர்களின் ஜீவாதார உரிமைகளையும் நலன்களையும் பிரதிபலிக்கவில்லை. கலைச் சொல்லாக்க முயற்சி வேண்டும்; கலைக் களஞ்சியம் தேவை; பாரதிக்குச் சிலை எடுக்க வேண்டும் என்பன போன்ற விஷயங்கள்தாம் தீர்மானங்களாக நிறைவேற்றப் பட்டதே யொழிய எழுத்தாளனையும் அவனுடைய எழுத்தையும் பாதுகாப்பதற்கான முடிவுகள், முயற்சிகள் எதுவும் செய்யப்படவில்லை" என்று கூறும் கவிஞர் ரகுநாதன், "'வாரும் பிள்ளாய், எழுத்தாளரே!' என்ற கவிதை பிறக்கக் காரணம் இதுவே" என்கிறார்.

சென்னையில் நடந்த இரண்டாவது எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொண்ட கவிஞர் ரகுநாதன் முதல் மகாநாட்டை மனத்தில்கொண்டு, ஜீவாதார உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்வதே எழுத்தாளர் மகாநாட்டின் முதற் கடமை என்பதை அறிவுறுத்துவதற்காக இந்தப் பாடலை எழுதினாராம். அதில் ஒரு பகுதியைப் பார்ப்போம்:

கட்டுக்கதை யென்று
கவியென்று, ரேவம்ச
வெட்டும் புலியென்று
விம்பிட்டு, பத்திரிகைக்
கூட்டம் நிறைந்து
குளப்பாசி வண்ணத்தில்
அட்டையிட்டு, அழகாக
அச்சிட்டு, நூலென்று
கொட்டமடித்து நிதம்
கும்மாளம் போட்டாலும்
நீர்தாமோ எழுத்தாளர்?

என்று எழுத்தாளர்களைப் பார்த்துத் துணிவுடன் கேட்கும் கவிஞர், "மாநாட்டுப் பந்தலிலே மனசைப் பறிகொடுத்து, வாளுட்டைத் தானிடிக்கும் வாய்ப்பந்தல் போடாதீர்!" என்றும் கிண்டல் செய்கிறார்.

அந்தக் காலத்தில் பத்திரிகைகளுக்கு எழுதும் எழுத்தாளர்களுக்குச் சன்மானம் மிகக் குறைவாகவே கொடுத்து வந்தார்களாம். சில பத்திரிகைகள் விஷயத்தை மட்டும் தானமாக எடுத்துக் கொண்டு சன்மானம் தராமல் இருந்தனவாம்! அதனை மனத்தில் கொண்டு கவிஞர் இந்தக் கவிதையின் முடிவில் நகைச்சுவையுடன் எழுத்தாளர்களை எச்சரிக்கிறார்:

"ரேட்டைக் குறைக்காதீர்
லெக்கைகெட்டுப் போகாதீர்!
ஓட்டைப் படகேறி
உள்ளமுங்கிச் சாகாதீர்!
ஆதலினால் சொல்லிவிட்டேன்
சோத்துக்கு வழிதேடும்.
சொன்னபடி கேளும்!
போய்வாரும்!
மறக்காதீர்!
போய்வாரும்!"

இந்தக் கவிதை ஒரு பத்திரிகையில் வெளி வந்திருந்த

கவிதை பிறந்த கதை





போது பலர் அதைப் பாராட்டினார்களாம்; சிலர் "என்ன இப்படி அப்பட்டமாக எழுதி விட்டாரே! யார் இவர்?" என்றெல்லாம் பேசிக் கொண்டார்களாம். கவிஞர், இந்தக் கவிதையைத் 'திருச்சிற்றம்பலக் கவிராயர்' என்ற புனைபெயரில் எழுதி யிருந்ததே இதற்குக் காரணம். கவிஞர் இப் பெயரில் முதன் முதல் எழுதிய கவிதையும் இதுவே. இந்தப் பெயருக்குள் மறைந்திருக்கும் கவிஞர் யார் என்று பலர் கேட்கத் தொடங்கினார்கள். கவிஞரும் பாட்டிலேயே அவர்களுக்குப் பதில் சொல்கிறார்:

"கேளும், ஓய்!
ஆரென்று கேட்டுவிட்டீர்;
அறைகின்றேன், செவிசாயும்!"

என்று ஆரம்பித்து, "தம் பலத்தின் சாறுண்டு, தமிழ்க் கவிபாய்க் கொப்பளித்த அம்பலக் கவிராய ஆசுகவி நானல்ல" என்கிறார். பின் யார்தான் இவர்?

"உம்மைப்போல் நானும் —
உள்ளிக்கும் உப்புக்கும்
ஒருவேளை வெற்றிலைக்கும்
அள்ளிப் பருகிபுனை
அரைவயிற்றுக் கஞ்சிக்கும்
நித்தம் உழைத்தலுத்தும்
நெஞ்சம் அலுக்காத
மானிடன்தான்!"

இவரது பாடல்கள் கருத்தாழத்துடன் அமைந்து சிந்தனையைத் தூண்டும்; சிறந்த நகைச்சுவை விருந்தையும் அளிக்கும்.

1949ல் திரு ஜி. டி. நாயுடு அவர்கள் முயற்சியால் கோவையில் பாரதி விழா கொண்டாடப் பட்டபோது ஒரு சுவையான நிகழ்ச்சி. அமரர் கு. அழகிரிசாமியும் திரு ரகுநாதனும் சரித்திர கால இரட்டைப் புலவராக மாறினர்! அதாவது முதல் பாட்டின் முதல் இரண்டு அடியைத் திருச்சிற்றம்பலக் கவிராயர் பாட அடுத்த இரண்டு வரிகளை கு. அழகிரிசாமி பாடி முடித்தார். தொடர்ந்து அவரே அடுத்த பாடலுக்கு முதல் இரண்டு வரிகளை எடுத்துக் கொடுக்க அப்பாடலைக் கவிராயர் முடித்து விட்டு மேலே தொடர்ந்தார். மிகக் கடினமான இந்தக் காரியத்தை இருவரும் வெற்றிகரமாய் நிறைவேற்றி வைத்தனர். அந்தக் கவிதையின் ஆரம்ப வரிகள் இதோ:

கோவைத் திருநகரில்
கூட்டமிட்டுப் பாட்டிசைத்து
நாவலிக்க நாவலிக்கும்
நாவலரே! - யாவருக்கும்
வந்தனங்கள் சொல்லி வாசிக்கும்
எம் கவிதை
சிந்தனையில் கொள்வீர் தெளிந்து.
நெல்லைப் பதியுடையான் நீடுபுகழ்
அம்பலத்தான்
ஒல்லை இடைச் செவலாம்
ஊருடையான் - சொல்லுக்கு
அழகேற்றும் அழகிரியான் அணி
செய்யக் கேட்டிடுவீர்
பழுதமிழ் எம்மிரட்டைப் பா.

பேட்டி: பி.வி.கிரி



சென்னை, சாஸ்திரிநகர், யூனைடெட் கமர்ஷியல் பாங்க் மானேஜர் ஸ்ரீ ஆர். ராமாமிர்தம் அவர்கள் குமாரத்தி சௌ. காதம்பரிக்கும், வேப்பத்தூர் மிராசுதார், ஸ்ரீ (கதர்) வெங்கட்ராம அய்யர் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி **வி. ராஜமோகன்** (இந்தியா பிஸ்டன், சென்னை) அவர்களுக்கும் 20-5-71ல் திருச்சானூரில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள் !

நாவல்

அஜநயனம்

ஜெகசிற்பியன்



ஜானகிபுரம் கிராமத்தின் எல்லையைக் கடந்து, இலுப்பைத் தோப்பு ஒன்றினுள் புகுந்து வெளிப்பட்டு, மேற்கு மலையடிவாரத்தை யொட்டிச் செல்லும் செம்மண் பாட்டையில் அந்த ஒற்றை மாட்டு வண்டி ஏறிய போது, வடக்கே தொலைதூரத்துக்கு அப்பால் ஒரு ரயில் வரும் சத்தம் அம் மலைத் தொடரில் எதிரொலிப்பது கேட்டது. அதைத் தொடர்ந்து காடாந்தகாரமாய்க் கப்பிக் கிடந்த இருளின் கர்ப்பப் பிராந்தியத்தையே ஊடுருவிப் பிளப்பது போன்ற ஓர் ஒளிக் கற்றை தெற்கு நோக்கிப் பரவிப் பாய்வதும் தெரிந்தது.

''மாமுண்டி அண்ணே! மணி பதினொண்ணு; அதோ, போட் மெயில் காரன் வரான் பார்!'' — அந்த ஒற்றை மாட்டு வண்டியை ஓட்டிச் சென்றவன், பக்கவாட்டில் திரும்பி உரத்த குரலில் இவ்வாறு சொன்னான்.

இடது கையில் அரிக்கன் விளக்கும், வலது கையில் பூண் போட்ட குறுந்தடியுமாக வண்டிக்குப் பின்னால் நடந்து வந்து கொண்டிருந்த மாமுண்டி ''ஆமாண்டா, பக்கிரி! கொஞ்சம் வெரசா ஓட்டு!'' என்றான்.

''வேணும், வேணும்; நீ மெதுவாலே ஓட்டுப்பா! இந்தப் பாழாய்ப் போன பாட்டையிலே ஏறினதுமே வண்டி ஒரேயடியா ஆட்டிக் குலுக்கி எடுக்குது'' என்று வண்டிக்குள்ளிருந்து குரல் கொடுத்தாள் ஒரு பெண்.

அவள் சொன்னதை அடுத்து, ''ஐயோ!... ஆத்தாடி!.... சாமி!... உசிரு போவுதே!... ஆ... ஊ...ம்ம்'' என்று இன்னொரு பெண்ணின் வேதனை



மிருந்த பிரலாப முனகல் ஒலியும் இலேசாகக் கேட்டது.

பரபரப்படைந்த யாமுண்டி விரைந்து போய்த் தன் கையிலிருந்த அரிக்கன் விளக்கை வண்டிக்குப் பின்னாலும் தூக்கிப் பிடித்துப் பார்த்தான்.

அந்த வண்டியின் பின்னாலும் முன்னாலும் பழைய போர்வைத் துணிகளைத் திரை போல் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்ததால் உள்ளே இருப்பவர்களைக் காண முடியவில்லை. ஆனாலும் பின் திரைக்கு வெளியே இரண்டு பாதங்கள் மட்டும் நீட்டிக் கொண்டிருப்பது தெரிந்தன. அந்தக் கால்களின் விரல்களில் மெட்டி அணிந்திருப்பதிலிருந்து



அவை ஒரு பெண்ணின் கால்கள் என ஊகிக்க முடிந்தது.

மாமுண்டியின் முகத்தில் — பயத்தாலோ, கவலையினாலோ — வியர்வை துளித்து வழிவது விளக்கொளியில் நன்றாகத் தெரிந்தது. அந்தப் பாதங்களையே கூர்ந்து பார்த்த அவன் பெருமூச்சு விட்டவாறு விளக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு வண்டிக்குப் பின்னால் சற்று நெருங்கி நடக்கலானான்.

அந்த வண்டிப் பாட்டை ஒத்திவாக்கம் ஸ்டேஷனுக்கு மேலண்டைப் பக்கமிருந்து ஆரம்பமாகி நீண்ட மலைத் தொடரின் அடிவாரத்தை யொட்டிச் சுமார் ஏழெட்டு மைல் தூரம் சென்று செங்கல்பட்டு நகர எல்லையில் போய் முடிவடையும். அவ்விரு ஊர்களுக்கும் இடையில் உள்ள நாலைந்து கிராமங்களை இணைப்பது இவ்வண்டிப் பாட்டையே. ஆனால் அது சாலைப் பராமரிப்புத் துறைகளில் எத்தரப்புக்கும் உட்பட்டதல்லவாதலால் அதன் போக்கு வடிவம் திடீர் திடீரென்று மாறிக் கொண்டேயிருக்கும். அதிலும் மழைக் காலங்களில் எப்படி யெப்படி யெல்லாமோ சுற்றி வளைந்து செல்லும். ஆயினும் அம்மலைத் தொடரின் அடிவாரத்திலிருந்து கிழண்டை சுமார் இரண்டு பர்லாங் தொலைவுக்கு அப்பால் மட்டும் அது போவதில்லை. காரணம், அங்கே வடக்கு — தெற்காக ரயில் பாதை மேடு கட்டி ஓடுகிறது. மற்றபடி அவ்வண்டிப் பாட்டையில் ஜனநடமாட்டம் மிகக் குறைவு. மாட்டு வண்டிகளுக்கே அது ஏகபோக உரிமை. கொஞ்சம் சைக்கிள் போக்குவரத்து உண்டு. சமயா சமயங்களில் அபூர்வமாக ஓரிரண்டு லாரிகள் ஜல்லிக் கற்களை ஏற்றிக் கொண்டு போகும், வரும். வேறு வாகனாதிகள் எதற்கும் அது லாயக்குப்படுவதில்லை. அவ்வளவு மோசமாகக் குண்டும் குழியும் ஓடை அறுப்புகளும் பறித்து கிடக்கும்.

இப்படிப்பட்ட அவ்வண்டிப் பாட்டையில்தான் அந்த ஒற்றை மாட்டு வண்டி இந்த நள்ளிரவு நேரத்தில் செங்கல்பட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

வடக்கே ஆகாயவெளியில் ஒரு செம்புள்ளி. அது கைகாட்டி விளக்கின் சிவப்பு விளக்கு. சற்றுமுன் கேட்ட ரயிலோட்டத்தின் எதிரொலியை அந்த மலைத் தொடர் கொஞ்சங் கொஞ்சமாகப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு போய் எங்கோ ஒரு மூலையில் கரைத்து விட்டு அமைதியில் ஆழ்ந்தது.

''அண்ணே! இப்படி என் பக்கவாட்டிலே வந்து ஏறி உட்கார்ந்துக்கயேன்!'' — பக்கிரி பின்னால் திரும்பிப் பார்த்துச் சொன்னான்.

''எதுக்குடா? விளக்கை வண்டிக்கு முன்னால் கொண்டாந்து மாட்டச் சொல்றயா?'' மாமுண்டி கேட்டான்.

''அதுக்கில்லேண்ணே! இம்மாந்தூரம் நடந்தே வரயேன்னுதான்...''

''பரவாயில்லை. நீ வண்டியைப் பார்த்து ஓட்டு.''

எதையோ புரிந்து கொண்டவன் போல், ''சரி, சரி'' என்று சிரித்த பக்கிரி, இரண்டு அதட்டல் போட்டு மாட்டை ஓட்டினான். கழுத்துச் சலங்கை குலுங்க மாடு பெருநடையில் விரைந்தது. போன வாரம் பெய்த பலத்த மழையால் அந்த வண்டிப் பாட்டை ரொம்ப மோசமாகிவிட்டிருந்தது. ஓடை அறுப்புகளும், சேறு குழம்பிய பள்ளங்களும் ஆங்காங்கே குறுக்கிட்டு வண்டி மாட்டைத் திணற அடித்தன. சில இடங்களில் மலையிலிருந்து சரிந்து உருண்ட பாறைக் கற்களும் கிடந்து அதன் கால்களை இடறிவிடப் பார்த்தன. பக்கிரி அதையெல்லாம் ரொம்பச் சாமர்த்தியமாகச் சமாளித்து வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான்.

வண்டிப் பாட்டையின் கிழண்டைப் பக்கம் — ரயில்வே லைன் வரை — பரந்து கிடந்த வயல்வெளிகளில் அப்போது சம்பா பயிரிடப்பட்டிருந்தது. நாற்றுகள் பச்சை கட்டாத பருவம். அதனால் நீர் தேங்கியிருந்த அந்நிலங்களில் தவளைகள் தான வாத்தியக் கச்சேரி நடத்திக் கொண்டிருந்தன. மேலண்டைப் பக்கம் மலைச் சரிவு நெடுகக் கள்ளி மரங்கள் சிகை உலர்த்தும் அரக்கிகள் போல் வளர்ந்து நின்றன. அவ்வட்டாரத்திலுள்ள நரிகள் மிகுதி. இப்போதும் எங்கோ ஓரிடத்தில் சில நரிகள் ஊளையிட்டுக் கொண்டிருப்பது கேட்டது.

ஓர் ஏரி முனையை நெருங்கிக் கொண்டிருந்தது மாட்டு வண்டி.

இவ்வளவு நேரத்துக்குப்பின் மீண்டும் வண்டிக்குள்ளிருந்து வேதனை செறிந்த முனகல் ஒலி எழவே, மாமுண்டி விளக்கைத் தூக்கிப் பிடித்தவாறு வண்டிக்குப் பின்னே தொங்கிய திரையை மெல்ல விலக்கிவிட்டு எட்டிப் பார்த்தான்.

வயதான பெண்மணியொருத்தி குறுக்குவாட்டத்தில் உட்கார்ந்து கால்களை எதிர்ப் பலகையில் உதைத்தாற் போல் நீட்டிக் கொண்டிருக்க, அவளது மடியில் தலைசாய்த்து நீளவாட்டிலே மல்லாந்து படுத்துக் கிடந்தாள் நடுத்தர வயதான மற்றொரு பெண்.


ஜூலை 3ந் தேதி முதல் சென்னை மற்றும் தமிழகமெங்கும்
நடிகர் திலகத்தின் 150வது படம்
தாஸ் & தாஸ் அளிக்கும்
மல்லியம் புரொடக்ஷன்ஸ்
சவாலே
சமாளி
கலர்-ஜெமினி
கதை. வசனம். டைரக்ஷன் :
மல்லியம் ராஜகோபால்
ஒளிப்பதிவு: வின்சென்ட் இசை: விஸ்வநாதன் பாடல்கள்: கண்ணதாசன்


GROWTH
with
DALMIA
REFRACTORIES
உன்னதத்தின் அடிப்படையிலே இயங்கும் தொழிற்சாலைகளுக்கு ''ரிஃப்ராக்டரிஸ்'' (''கட்ட கற்கள்) இன்றியமையாததாக இருப்பதால் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நமது தொழில்களுக்கு ''ரிஃப்ராக்டரி''களின் தேவையும் பெருகி வருகிறது.
ஆசியாவிலே ''ரிஃப்ராக்டர்'' உற்பத்தியாளர்களில் முதல் ஸ்தானம் வகிக்கும் டால்மியாவின் இரண்டு நவீன தொழிற்சாலைகளில், கட்ட கற்கள், ரசாயன முறையில் இறுக்கப்பட்ட கற்கள், மிக, அதிக, மிக அதிகமான உஷ்ணத்தை தாங்கவல்ல செங்கற்கள்; மணற் சத்துள்ள செங் கற்கள், கையனைட், சிலிமினைட் மற்றும் இராவகங்களைத் தாங்கக்கூடிய செங்கற்களையும் தயாரிக்கிறார்கள். வாடிக்கையாளரின் விசேஷ சேவைக்கேற்பவும் தயாரிக்கிறார்கள்.
ஒரிஸா சிமேண்ட் லிமிடெட்
ராஜ்கங்பூர், ஒரிஸா
பூரண விற்பனை ஏஜண்டுகள் :
M/s. S. G. சப்ளை ஏஜன்ஸி
48-B, முக்தாராம் பாபு தெரு, கல்கத்தா
கற்கள் தயாரிப்பவர்கள் :
டால்மியா செராமிக் இண்டஸ்ட்ரீஸ்
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
DALMIA ENTERPRISES

"ஐயோ... சாமி... தாள முடியலியே!... ஆ... அம்மாடியோவ்!... அப்பப்பப்பப்பா!... ம்ம்...." — வைக்கோல் பரப்பில் படுத்துப் புழுவாக நெளிந்து கொண்டிருந்த அந்தப் பெண் தலையை அப்படியும் இப்படியுமாக ஆட்டி உருட்டியபடி பிரலாபித்துக் கொண்டிருந்தாள்.

"ஏ, வடிவி! சும்மா இருக்க மாட்டே?.... கொஞ்சம் பொறுத்துக்க! இதோ, ஆசுபத்திரி வந்துடும்; எல்லாம் சரியாயிடும்!" என்று கண்டிப்பும் கரிசனமும் கலந்த குரலில் சொல்லிக் கொண்டே அவளது இடுப்பை இதமாகப் பிடித்துத் தடவி விட்டாள் முதியவள்.

இந்தக் காட்சியைக் கண்ட மாமுண்டியின் முகம் கவலையால் வெளிறிச் சிறுத்தது. விலக்கிப் பிடித்திருந்த திரையைப் பழையபடி இழுத்து மூடிவிட்டுப் பின்னால் இரண்டடி தங்கிய அவன் விளக்கைத் தொங்கப் பிடித்துக் கொண்டு நடக்கலானான். முன்னும் பின்னுமாகப் போய் வந்த அவ்விளக்கு வெளிச்சத்தில் வண்டிச் சக்கரங்களின் நிழல்கள் பாதையிலே சாய்வாக விழுந்து பல விநோத வடிவங்களாய் உருண்டு கொண்டிருந்தன. அத்துடன், பள்ளம் மேடுகளில் சக்கரங்கள் இறங்கி ஏறும்போதெல்லாம் கடையாணிகள் 'குடங்களிலே' மோதிப் பலத்த ஒலியை எழுப்பிச் சென்றன.

மா முண்டியின் மனைவிதான் வடிவு. அவளுக்கு இது மூன்றாவது பிரசவம். சாயந்திரம் நாலு மணிவாக்கில் இடுப்பு வலி கண்டது.

அப்போது மாமுண்டி வீட்டில் இல்லை. கத்திரித் தோட்டத்தைப் பார்க்கப் போய் விட்டிருந்தான்.

ஒன்றரைக் காணி பரப்புள்ள அந்தப் புஞ்சை நிலம் அவனுக்குச் சொந்தமானது. ஊருக்குக் கிழண்டைப் பக்கம் ரயில்வே லைன் ஓரமாக அது இருந்தது. அவனுடைய வீட்டிலிருந்து ஒரு பர்லாங் தூரம் போக வேண்டும். அந்த நிலத்தில் அவன் பெரும்பாலும் காய்கறி, கீரை வகைகளையே பயிரிட்டு வந்தான். அதுதான் கொஞ்சம் கூடுதல் லாபகரமாயிருந்தது. அவனது ஜீவனமும் அதை நம்பியே நடந்தது.

இந்தப் பருவம் பாதி தோட்டத்தில் கத்திரியும், மறு பாதியில் வெண்டையும் பயிரிட்டிருந்தான். செடிகளெல்லாம் நன்கு வளர்ந்து இப்போது பூ எடுத்துப் பிஞ்சும் இறக்கியிருந்தன. அதனால் இரவு பகல் எந்நேரமும் அந்தத் தோட்டமே கதி என்று கிடந்தான்.

ஆறுவது விரலுக்கு ஆறுதல்!



சமீபத்தில் எனக்கொரு பெண் குழந்தை பிறந்தது. உறவினர்கள் பலர் வந்து குழந்தையைப் பார்த்துவிட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். பக்கத்து வீட்டிலிருந்து வந்திருந்தவர்களில் சுமார் மூன்று வயது நிரம்பிய பெண் குழந்தை ஒன்று என் குழந்தையைத் தொட்டுப் பார்த்துவிட்டு "அய்யய்யோ! பாப்பாவுக்கு ஆறாவது விரலைக் காணோமே?" என்று கேட்டது. அதற்கு என் மனைவி, "ஆமாம்! அது வளரவில்லை" என்று சொன்னாள். அதற்கு அந்தக் குழந்தை, "அக்கா! உங்கள் குழந்தைக்கு 'மீரா' என்று பெயர் வையுங்கள். அப்பொழுது அவளுக்கு ஆறாவது விரல் வளர ஆரம்பித்து விடும்!" என்றாள் களங்கமில்லாத மழலையுடன். அந்தக் குழந்தையின் பெயர் மீரா. அதற்கு ஒரு கையில் ஆறு விரல்கள்!

-பார்வதி மணாளன்

பகலெல்லாம் களை பிடுங்குதல், பாத்திகளைச் செப்பனிடுதல், எரு இடுதல், நீர் பாய்ச்சுதல்; இரவிலே காவல் காப்பது. இதற்கெல்லாம் அவன் கூலிக்கு ஆள் வைப்பதில்லை. வைத்தால் கையைக் கடித்துவிடும். எனவே, தன் மனைவி வடிவாம்பாளைத் துணைக்கு வைத்துக் கொண்டு முழுத் தோட்ட வேலைகளையும் அவனே பார்த்துக் கொண்டான்.

அதுவும் கடந்த ஒரு மாதமாக வடிவாம்பாளால் அவனுக்கு ஒத்தாசை ஏதும் பண்ண முடியவில்லை. பாவம், அவளுடைய வயிற்றுச் சுமை அதற்கு இடம் தரவில்லை. அவனும் அவளை இனித் தோட்ட வேலைக்கு வர வேண்டாம் என்று சொல்லி விட்டான்.

வடிவாம்பாளின் சொந்த ஊர் விக்கிரவாண்டி. தலைப் பிரசவத்தைத் தன் தாய் வீட்டுக்குப் போய்ப் பார்த்துக் கொண்டாள். பிறந்தது பிள்ளைக் குழந்தை: இப்போது வயது ஏழு ஆகிறது. இரண்டாவது பிரசவத்துக்குத் தாயார்க்காரியே இங்கு வந்து அவளைக் கவனித்துக் கொண்டாள். பிறந்தது பெண் குழந்தை; அதற்கு வயசு நாலு நடக்கிறது. மூன்றும் பேற்றைப் பார்க்க அவளின் தாயாருக்குக் கொடுத்து வைக்கவில்லை; போன வருஷம் அவள் செத்துப் போனாள்.

மாமுண்டிக்குப் பெற்றோர் இல்லை. உற்றார் உறவினர்களும் தொலைதூரங்

கனில் இருந்தனர். உடன்பிறந்த அக்கா ஒருத்தி மட்டும் பக்கத்துக் கிராமத்தில் இருந்தாள். ஆகவே, இந்தத் தடவை உள்ளூர் மருத்துவச்சியைக் கொண்டு சமாளித்துக் கொள்ளலாம் என்று வடிவாம்பாள் தன் கணவனுக்குத் தைரியம் சொல்லிக் கொண்டு வந்தாள்.

ஆயினும் மாமுண்டிக்கு இதுபற்றி உள்ளூறக் கொஞ்சம் கவலை இருந்து கொண்டேயிருந்தது. அதனால் அவன் போன வாரம்கூட அவளிடம் "என்ன வடிவி! எதனுச்கும் மாசக் கணக்கு, நான் கணக்கு வைச்சிருக்கிறயா ?" என்று ஒரு போக்காகக் கேட்டான்.




அவள் சிரித்துக் கொண்டே, "வைச்சுக்காம இருப்பேனா? அதுக்கு இன்னும் கெடக்குதே ஒரு மாசம்!" என்றாள் அலட்சியமாக. அவளுடைய கணக்கு தப்பாகி விட்டது!


இன்று மதியம் சாப்பிட வீட்டுக்கு வந்த மாமுண்டி உடனேயே தோட்டத்துக்குப் புறப்பட்டுப் போய்விட்டான். அப்போதெல்லாம் நன்றாகவே இருந்த வடிவு, மாலை நாலு மணிக்கு மேல் இடுப்பு வலியில் துடிக்க ஆரம்பித்து விட்டாள். தன் பையனிடம் சொல்லி அப்பனை உடனே அழைத்து வருமாறு விரட்டினாள். தோட்டத்துக்குப் போய்ப் பார்த்து விட்டுத் திரும்பிய சிறுவன், "நைனா அங்கே இல்லேம்மா! வேலிப் படல் இழுத்துக் கட்டிக் கெடக்கு" என்று தெரிவித்தான். எடுப்பார் பிடிப்பார் எவருமின்றி அவஸ்தைப்படலானாள் வடிவு.

விளக்கு ஏற்றும் நேரத்துக்கு வீடு வந்து சேர்ந்த மாமுண்டி மனைவியின் நிலை கண்டு பயந்து போனான். ஓடிப்போய் அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள் சிலரை அழைத்து வந்தான். அவர்களில் எவளுக்குமே 'குளிகுளிப்பு'க்கு உதவி செய்து அநுபவம் கிடையாது. அதனால், வடிவு படும் வேதனையை அவர்கள் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கலாயினர். நிலைமை மோசமாவதைக் கண்ட ஒருத்தி மாமுண்டியிடம் வந்து, மருத்துவச்சி மங்கம்மாவைச் சீக்கிரம் அழைத்து வருவது நல்லது என்று யோசனை சொன்னாள்.



அந்தக் கிராமத்தில் பிள்ளைப் பேறு மருத்துவம் பார்க்கத் தெரிந்தவள் மங்கம்மா ஒருத்திதான். அது அவளின் குலத் தொழில். வயசு ஐம்பத்தைந்துக்கு மேல் ஆகிறது. கணவனை இழந்தவள். தன் ஒரே பெண்ணைச் சமீபத்தில் தான் பட்டணத்துக்காரன் ஒருவனுக்குக் கல்யாணம் பண்ணி வைத்து அனுப்பினாள். ஊரின் கடைகோடியில் குடிசை போட்டுக் கொண்டு ஒண்டிக் கட்டையாக வாழ்ந்து வந்த அவளுக்குத் துணை என்று இருப்பது ஒரே ஒரு வெள்ளாடுதான். நாளெல்லாம் அதன் பின்னாலேயே காடு, மலை, கழனிகளில் சுற்றித் திரிந்து கொண்டிருப்பாள். அந்த ஆடு இரண்டு முறை குட்டி போட்டு விட்டது. குட்டிகள் வளர்ந்து பெரிசானதும் விற்று விட்டாள். தாய் ஆட்டை மட்டும் விற்க அவளுக்கு மனம் வருவதில்லை. அந்த ஆடு இப்போதுகூட மூன்றும் முறையாகச் சூல் கொண்டிருப்பதாகக் கேள்வி!...

இந்த மருத்துவச்சி மங்கம்மாவை அழைத்து வரப் புறப்பட்ட மாமுண்டி ஏனோ தெரு வாசலிலேயே தயங்கி நின்று கொண்டு தன் பையனைக் கூப்பிட்டு விவரம் சொல்லி அனுப்பினான். சிறுவன் ஓடிச் சென்ற அதே வேகத்தில் திரும்பி வந்து, மங்கம்மா இல்லை என்றும் குடிசை சாத்திக் கிடக்கிறது என்றும் தெரிவித்தான். மாமுண்டியே போய் இருந்தால் அவளை எங்காவது தேடிப் பிடித்து அழைத்து வந்து விட்



தேடி எடுங்கள் தீப்பெட்டியை!

மணிலா நாட்டு ஆஸ்கர் ஸலஸர் எல்லோரையும் போலத் தீக்குச்சிகளைச் சிகரெட் கொளுத்தப் பயன்படுத்தாமல் அவற்றை வைத்துச் சில புதிர்களைக் கண்டுபிடித்திருக்கிறார்.

மிகுந்த புத்திசாலிகள் கண்களை மூடிக்கொண்டு இவற்றை விடுவித்து விடலாம். மற்றவர்களுக்குத் தான் 65ம் பக்கத்திலுள்ள விடைகள் தேவைப்படும்.

1. தீக்குச்சிகளில் ஒன்றை மட்டும் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்துக்கு மாற்ற வேண்டும். சமன்பாட்டின் இருபுறங்களும் சமமாக இருக்கவும் வேண்டும்.

2. நான்கு தீக்குச்சிகளைக் கொண்ட மிகப் பெரும் சதுரம் இது. இதே நான்கு குச்சிகளைக் கொண்ட மிகச் சிறிய சதுரம்?

3. இங்கிருக்கும் நான்கு சதுரங்களை மூன்றாகக் குறையுங்கள். மூன்று குச்சிகளை நகர்த்திக்கொள்ளலாம்.

4. வலப்பக்கம் பார்த்துக் கொண்டிருக்கிற இந்தப் பன்றியை இடப் பக்கம் திரும்பச் செய்ய வேண்டும். இரண்டு குச்சிகளுக்கு மேல் நகர்த்தி விடாதீர்கள். பன்றியின் வாலும் மேல் நோக்கியே இருக்கட்டும்.

5. மூன்றே மூன்று குச்சிகளை நகர்த்தி வைத்துக் கிழக்கு நோக்கி நீந்துகிற இந்த மீனை எதிர்த் திசைக்குத் திருப்பி விடுங்கள்.

- நீலகண்டன்

விவரம்: 'இம்ப்ரிண்ட்'

டிருக்கலாம். இப்போதுகூட அப்படிச் செய்யலாம். ஆனால் அவன் அம்மாதிரி முயற்சி எதிலும் ஈடுபடாமல், நேரே பக்கத்துக் கிராமத்தை நோக்கி நடையைக் கட்டினான்.

அவ்வூரில்தான் அவனுடைய அக்கா கிளியம்மா இருந்தாள். அவளிடம் விவரம் சொல்லிக் கையோடு அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர இரவு மணி எட்டாகி விட்டது. வடிவாம்பாள் இன்னமும் பேறு அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். சற்று முன்தான் பனிக் குடம் உடைந்ததாம்.

கிளியம்மாளுக்குப் பிரசவம் பார்ப்பதில் ஓரளவு அநுபவம் உண்டு. அவள் வந்ததும் ஏதேதோ சிகிச்சை முறைகளை மேற்கொண்டாள். ஆயினும் வடிவுக்கு வயிறு இறங்கவில்லை. நேரமாக ஆக வலி தாளாது புழுவாகத் துடிக்கலானாள். சுகப் பிரசவமாய் இருந்தால் பனிக் குடம் உடைந்து ஒன்று அல்லது ஒன்றரை மணி நேரத்துக்குள் பிரசவமாகி விட வேண்டும். அப்படி ஆகவில்லை. கிளியம்மாவுக்கு உள்ளூறக் கலக்கம் ஏற்பட்டது. அவள் மாமுண்டியிடம் வந்து, ''தம்பி, நிலைமை சரியில்லேன்னு தோணுதடா! எதனாச்சும் எக்கச்சக்கமாக இருக்கும் போல இருக்கு. இனியும் வீட்டிலே வைச்சிருக்காம ஆசுபத்திரிக்குக் கொண்டு போயிடறதுதான் நல்லது'' என்றாள்.

இரவு பத்தரை மணிக்கு மேல் ஆகி விட்டது. ஆசுபத்திரி என்றால் செங்கல்பட்டுக்குத்தான் போக வேண்டும். இங்கிருந்து ஆறேழு மைல் பயணம்.

மாமுண்டி திகைத்து நின்றான். அவனிடம் மாட்டு வண்டி கிடையாது. அவ்வூர் கணக்குப் பிள்ளையிடம் ஓடிப் போய்க் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டான். அவரும் மனம் இரங்கித் தம் ஒற்றை மாட்டு வண்டியைக் கொடுத்துக் கூடவே வண்டிக்காரப் பக்கிரியையும் உதவிக்கு அனுப்பினார்.

வடிவையும், கிளியம்மாவையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு இதோ, செங்கல்பட்டை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறான் மாமுண்டி.

'சளக்.'

ஓடிக் கொண்டிருந்த மாட்டு வண்டி ஒரு குலுக்கலிட்டு நின்றது. பரபரப்புடன் கைவிளக்கைத் தூக்கிப் பிடித்து அங்குமிங்கும் பார்த்தான் மாமுண்டி. அதே சமயம் பக்கிரியும் மாட்டின் மூக்கணாங் கயிற்றை இழுத்துப் பிடித்தபடி வண்டியை விட்டுக் கீழே குதித்துச் சக்கரங்களை நோக்கினான்.

வலதுபுறச் சக்கரம், பாட்டையில் சேறும் நீருமாய்க் குழம்பியிருந்த ஒரு சிறு பள்ளத்தில் சிக்கிப் புதைந்து நிற்பது தெரிந்தது. வண்டி உளையில் இறங்கியபோது ஏற்பட்ட குலுக்கல் அதிர்ச்சியால் வடிவு சற்று உரக்கவே முனகிப் பிரலாபித்தாள்.

'' எவ்வளவோ சாக்கிரதையாகத் தான் ஓட்டிக்கிட்டு வந்தேன். இந்த


இடத்துக்கு வந்ததும் மாடு மிரண்டு மக்கார் பண்ணிடுச்சு. அதான் வண்டிச் சக்கரம் உளையிலே இறங்கிப் போச்சு'' என்று சொல்லிச் சுற்றுமுற்றும் பார்த்தான் பக்கிரி. ''சரி, அண்ணே! நீ அந்தச் சக்கரத்தைப் பிடிச்சுக்க; நான் இதை மேலே சுத்தி ஏத்திக்கிறேன்'' என்றான்.

ஓர் ஐந்து நிமிட முயற்சிக்குப்பின் உளையில் சிக்கிய சக்கரம் விடுபட்டுக் கட்டாந்தரைக்கு ஏறியது. பக்கிரி பழையபடி வண்டியை ஓட்டிச் சென்றான். விளக்கை எடுத்துக் கொண்டு மாமுண்டி நடந்தான்.

''பார்த்தியா அண்ணே, நான் சம்சயப்பட்டது சரியாய்ப் போச்சு?'' என்றான் பக்கிரி.

''என்னது?'' என்றான் மாமுண்டி ஏதோ யோசனையாக.

''அந்த ஏரிக்கரை முக்கிலே நிக்கிற ஒத்தைப் பனை மரத்தை நெருங்கினதுமே



மாடு மிரள ஆரம்பிச்சதுன்னு சொன்னேன் இல்லையா?''

''ஆமா...''

''இது வழக்கமா அந்த இடத்திலே நடக்கிற விசயம் அண்ணே! நானும் எத்தனையோ வாட்டிச் சோதனையாப் பார்த்துட்டேன்; நடு சாமத்துக்குமேல் அங்கே வண்டியோ, மனுசாளோ யார் வந்தாலும் இப்படி எதனாச்சும் ஒரு சொடக்குக் காரியத்தை நடத்திக் காட்டறது 'அதுக்கு' வழக்கமாப் போச்சு.''

''அதுன்னா எதுடா?''

''அதாண்ணே!.... இதோ பார், மல்லிப்பூ வாசனை என்னமா கமகமத்துக்கிட்டு வருது! எல்லாம் அதோட வேலைதான்.''

உண்மையில் அப்போது மல்லிகைப்பூ வாசனை காற்றில் மிதந்து வரத்தான் செய்தது. அந்த மலையடிவாரத்தில் எங்கேனும் காட்டு மல்லிகைச் செடிகள் பூத்திருக்கலாம்.

ஆனால் பக்கிரி அதற்கு வேறு காரணம் கற்பித்துச் சொன்னதைப் புரிந்து கொண்ட மாமுண்டி அதை முற்றிலும் நம்புகிறவனை போல், ''அப்படியா?'' என்று இழுத்தவாறு சுற்றிலும் பீதியுடன் பார்த்துக் கொண்டான். இம் மாதிரி ஏதேனும் 'காற்று, கறுப்பு' சேஷ்டை நடக்கும் என்று அஞ்சித் தான் அவன் முன் எச்சரிக்கையாக அரிக்கன் விளக்கை வண்டிக்கு முன்னால் மாட்டித் தொங்க விடாமல் பின்னால் எடுத்து வருகிறான். வண்டிக்குள்ளே பிள்ளைத்தாச்சிப் பெண் இருக்கிறாள் அல்லவா?

''ஏண்டா, தம்பி, பக்கிரி! எந்தச் சமயத்திலே எதைப் பத்திப் பேசறதுன்னே உனக்குத் தெரியாதா?'' என்று எரிச்சலுடன் சிடுசிடுத்தாள் வண்டிக்குள் உட்கார்ந்திருந்த கிளியம்மா.

தன் தவற்றை உணர்ந்து கொண்ட பக்கிரி ஓர் அசட்டுச் சிரிப்புடன் மாட்டை அதட்டி ஓட்டிக் கொண்டே, ''அட, நீ ஒண்ணு அத்தைகாரே! அதுக்கெல்லாமா பயந்துடறது? எந்தக் கன்னிக் கழிசடையா யிருந்தாலும் நம்பளை என்ன பண்ணிட முடியும்? இது மாதிரி சாலக்கெல்லாம் நம்பக்கிட்ட வேவாதுன்னு அதுக்குத் தெரியாதா?'' என்றான் அலட்சியமாக. எனினும் அவர்களின் கவனத்தை வேறு திசையில் திருப்பும் பொருட்டுப் பேச்சை மாற்றினான்: ''அது சரி; மாமுண்டி அண்ணே! அந்த மருத்துவச்சிக் கெழவியை நீ கூப்பிட்டப்ப நிசமாவே அவள் வீட்டிலே இல்லையா? இல்லே, உள்ளே இருந்துக்கிட்டே இல்லேன்னு சொல்லிட்டாளா?''

''சேச்சே! எதுக்குடா அப்படிச் சொல்லப் போறு?'' என்று அளவுக்கு மீறிய ஓர் அவசரத்துடன் பதிலிறுத்தான் மாமுண்டி.


''நீயே நேரிலே போய்க் கூப்பிட்டியா, அண்ணே?''

''என் பையனை அனுப்பிச்சேன்.''


''ஏண்ணே, நீ போகலே?''

மாமுண்டி இதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் ஒரு கணம் திணறினான். பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''சின்னப் பையன் சுருக்கா ஓடிப் போய் அழைச்சுக்கிட்டு வந்துடுவானேன்னு தான்! அதுவுமில்லாம....'' என்று இன்னும் ஏதோ சொல்ல வாயெடுத்தவன் எதுவும் சொல்லாமல் மௌனமானான்.

''எதுக்குக் கேட்டேன்னா, அந்தக் கெழவி பிள்ளைப் பொறவு பார்க்கிறதிலே ரொம்பக் கெட்டிக்காரின்னு என் மாமியாரு சொல்லிக் கேள்விப்பட்டிருக்



நின்றால் கோவில் சிலையழகு:
அணிந்தால் சாரதாஸின்
புடவையழகு.
சாரதா'ஸ்
(ஏர்கண்டிஷண்ட்)
32, N.S.B. ரோடு,
திருச்சி-2 போன்: 7077
தன் பில்டிங்,
மவுண்ட் ரோடு,
சென்னை-2
போன்: 87177



விடைகள் :

1. ஒன்றின் வர்க்கமூலம் ஒன்றுதானே?
2. 'இவ்வளவு எளிதா?' என்று கேட்காதீர்கள்!
3. நீங்கள் நினைப்பது போல் அப்படியொன்றும் கடினமில்லை.
4. ரொம்பக் கஷ்டமில்லை. பன்றியின் தலையை மட்டும் திருப்பினால் போதுமே!
5. மீனை எதிர்த் திசைக்குத் திருப்பி விடுவதற்கு அ, ஆ, எ ஆகிய குச்சிகளை இம்மாதிரி மாற்றி அமைத்தால் போதும்.

இறேன். என்ன மாதிரி கேசாயிருந்தாலும் இறக்கிக் கொண்டாந்துடுவாளாம். அவளைக் கூட்டியாந்து பார்த்திருந்தா இம்மாந்தூரத்துக்கு ஆகியிருக்காதுன்னு எனக்குத் தோணுது.''

''என்னப்பா, பண்றது? எங்க போறாத காலம், இப்படியெல்லாம் படணும்னு இருக்குதே!'' என்று சலிப்புடன் முணுமுணுத்த மாமுண்டி, ''ஒரு வேளை நீ நினைச்ச மாதிரி அந்தக் கெழவி குடிசைக்குள்ளே இருந்துக்கிட்டே இல்லேன்னு சொல்லி அனுப்பிச்சுட்டாளோ என்னமோ!'' என்றான் ஆத்திரம் குமுறிய குரலில்.

''இல்லேண்ணே! அப்படி நினைக்கிறதுக்கு முடியாது. இப்பத்தான் எனக்கு இது ஞாபகம் வருது. சாயந்திரம் நான் வண்டி மாட்டைக் குளிப்பாட்டறதுக்காக அல்லிக் குளத்துக்கு ஓட்டிக்கிட்டுப் போனப்ப அந்தக் கெழவி எதிரே வந்தாள். மதியத்திலேயிருந்து அவளோட ஆட்டைக் காணுமின்னும், ஊர் முழுக்கத் தேடிப் பார்த்தும் கிடைக்கலேன்னும் சொல்லி, நான் எங்கேயாச்சும் அதைப் பார்த்தேனான்னு கேட்டாள். இல்லேன்னேன். பாவம், அவளுக்கு அழுகையே வந்துடுச்சு. அலைமோதிக்கிட்டு மலையடிவாரத்தைப் பார்க்க ஓடினாள்.''

மாமுண்டியின் இடது காலை ஒரு கல் இடறி விடவே, அவன் துள்ளிக் குதித்துப் பின் நொண்டி நொண்டி மேலே நடக்கலானான். அவனுக்கு ஏனோ உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது. அந்தச் சின்னக் கல் இடறியதற்காகவா இப்படி வேர்த்து விறுவிறுத்து இரைப்பு வாங்குகிறான்?

''ஏ, பக்கிரி! வண்டியைக் கொஞ்சம் நிறுத்தப்பா!'' என்று திடீரென்று உரத்த குரலில் கூவிய கிளியம்மா, ''தம்பி மாமுண்டி! இப்படி வந்து பாருடா, இவ என்னமோ மாதிரியா கழுத்தைச் சாய்க்கிறா!'' என்றாள் திலுடன்.

வண்டி நின்றது. விரைந்து வந்த மாமுண்டி, வண்டியின் குறுக்குக் கம்பியையும் திரையையும் விலக்கி விட்டு விளக்கைத் தூக்கிப் பிடித்தவாறு உள்ளே எட்டிப் பார்த்தான்.

வடிவாம்பாள் பிரக்ஞை தவறிவிட்டாற்போல் தோன்றினாள். கண்கள் மூடியிருந்தன. தலை ஒரு பக்கமாகச் சாய்ந்தது. முக்கல் முனகல் ஏதும் இல்லை. கைகாலெல்லாம் துவண்டு வீழ்ந்து கிடந்தன.

கிளியம்மா அவளின் தலையை ஏந்திப் பிடித்து மார்பில் சாய்த்துக் கொண்டு, ''மாமுண்டி, அந்தச் சொம்பிலே தண்ணி இருக்குது; கொஞ்சம் எடுத்து இவ வாயிலே ஊத்தி முகத்திலும் தெளிச்சுவிடு!'' என்றாள்.

வண்டிக் கூட்டில் தொங்கவிட்டிருந்த திருகுச் செம்பிலிருந்து தம்ளரில் தண்ணீர் ஊற்றி வடிவாம்பாளுக்கு இரண்டு வாய் புகட்டி, முகத்திலும் ஒரு கை நீரைத் தெளித்துவிட்டு விளக்கு வெளிச்சத்தில் அவளது முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான் மாமுண்டி.

அந்நிய மனிதனான பக்கிரி இந்தப் பக்கமே திரும்பாமல் வண்டியிலேயே தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தான்.

பேச்சு மூச்சற்றுக் கிடந்த வடிவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரக்ஞை திரும்பிக் கொண்டிருந்தது. மூடிக் கிடந்த கண்களைச் சிறிதே திறந்து தன் கணவனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

அடுத்த கணம், ''ஆடு!... ஆடு.... ஆடு!....'' என்று பலத்த அதிர்ச்சியும் பீதியும் கலந்த குரலில் குழறிக் கூவியவாறு சடாரெனப் பின்னால் நகர்ந்தான் மாமுண்டி. ஏதோ ஒரு பயங்



"இந்தத் தேள் சிரித்துக் கொண்டே கொட்டுறது!" என்றார் ஓர் இலக்கிய விமரிசகர் ஓடன் நாஷ் என்ற கவிஞரைப் பற்றி.

அமெரிக்க மக்களின் அன்பைக் கவர்ந்த நகைச் சுவைக் கவிஞர் ஓடன் நாஷ் இன்னும் இரண்டு மாதங்கள் இருந்திருந்தால் எழுபதாவது பிறந்த நாள் கொண்டாடியிருக்கலாம். அவரது நகைச் சுவைக் கவிதைகளில் மாதிரிக்கு இரண்டு:

1. லட்சாதிபதிக்கு ஒரு டாக்டரின் கடிதம்:
ஐயா, உம்மை அன்றொரு நாள்
ஆம்புலன்ஸ் வண்டி அதிலிருந்து
ஆக்ஸிஜன் கூட்டுக் குள்ளேநான்
அகற்றிய நிலையை நினைக்கின்றேன்.
கிட்னியிலே அடைப்பு; ஈரலிலே தடிப்பு.
உங்கள் உறுப்பெல்லாம் துலக்கிப்
பூட்டினேன் புதிதாக.
இன்று நீங்கள்
டென்னிஸில் ஒரு கிருஷ்ணன்
பந்து வீச்சில் ஒரு வெங்கட்.
தெம்பை அறிய சந்தோஷம்.
ஆனால் இன்னும் ஒன்றுசெய்ய
ஏனோ தெம்பு வரவில்லை?
உம்கை இன்னும் என்பில்லை
தீர்க்க ஏனோ எழவில்லை?

* * *

2. 'கண்ணே, அப்புறம் ஆகட்டும்!'-
என்றால் அர்த்தம் தெரியாதா?
ஒண்ணும் படியாப் பாப்பாகூடச்
சொல்லி விடுமே! 'இல்லே'தான்.

டி. எஸ். வி.

கரக் காட்சியைக் கண்டுவிட்ட மாதிரி அவன் உடல் நிலைகொள்ளாமல் நடுங்கியது.

அவன் போட்ட கூச்சலில் மயக்கம் தெளிந்து போன வடிவாம்பாள், "எதுக்கு இப்படிக் கத்தினுரு?" என்றாள் ஈன ஸ்தாயியில்.

திகிலும் திகைப்புமாகத் தன் தம்பியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த கினியம்மா, அ"அதுதானே — எனக்கும் புரியலே!..." என்று முணுமுணுத்தாள்.

பக்கிரியும் வண்டியிலிருந்து குதித்திறங்கி ஓடி வந்து, "என்ன அண்ணே! என்ன நடந்துச்சு? எதுக்கு அப்படிச் சத்தம் போட்டே?" என்று திகைப்புடன் கேட்டான்.

இதற்குள் மாமுண்டி தன்னைச் சமாளித்துக் கொண்டு பெருமூச்சு விட்டான். விளக்கைக் கீழே வைத்துவிட்டு முண்டாசை அவிழ்த்து உதறி மீண்டும் கட்டியவாறு, "அட, ஒண்ணுமில்லேப்பா! வாடிவி, வடிவின்னு கூப்பிடறதுக்குப் பதிலா வாய் குழறி ஆடு, ஆடுன்னுட்டேன் போலிருக்குது! அதுக்குப் போய் என்னமோ பெரிசாக் கேட்க வந்துட்டே!" என்றான் அலட்சியமாக. ஆனால் அவன் குரலில் இன்னமும் அந்தப் பீதியின் நடுக்கம் இருக்கவே செய்தது.

"சரி, சரி; சீக்கிரமா வண்டியைப் பிடிச்சு ஓட்டு! இப்பவே மணி ஒண்ணுக்கு மேலே ஆயிருக்கும்."

"நல்ல ஆளுதான் போ! இடுப்பு நோவு கண்டுட்ட பொம்பளைட்டிங்களுக்கு இந்த மாதிரி மயக்கமெல்லாம் வர்றது உண்டுதான். அதைப் பார்த்துட்டு ஓர் ஆம்பிளே இப்படியா பயப்படறது?" என்று பரிகாசமாகக் கூறிச் சிரித்துக் கொண்டே போய் வண்டியை ஓட்டிச் செல்ல ஆரம்பித்தான் பக்கிரி.

விளக்கை எடுத்துக் கொண்டு வண்டியைப் பின்தொடர்ந்தான் மாமுண்டி. இப்போது மீண்டும் வடிவாம்பாளின் வேதனை முனகல் இலேசாகக் கேட்கலாயிற்று.

மாமுண்டி சொன்னது நிஜம்தானா? 'வடிவு' என்பதற்குப் பதிலாக அவன் வாய் குழறித்தான் 'ஆடு' என்று அலறினானா? இல்லை.

வடிவாம்பாள் பிரசவ உபாதை பொறுக்கமாட்டாமல் பிரக்ஞையிழந்து பின் மெல்ல மெல்லத் தெளிவடைந்த போது அவளுடைய கண்கள் ஓர் ஆட்டின் கண்களைப் போலவே இருந்தன. அந்தக் கண்களைப் பார்த்துத்தான் மாமுண்டி தன்னையும் அறியாமல் 'ஆடு, ஆடு' என்று கூவி விட்டான். அவன் ஏன் அப்படிக் கூவ வேண்டும்? அந்த அளவுக்குப் பயந்து நடுங்கும்படியாக அக் கண்களிலே என்னத்தைக் கண்டான்? அதற்கு ஒரு காரணம் இருக்கத்தான் செய்தது.

இன்று மதியம் மாமுண்டி தன் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு வழக்கம் போல் காய்கறித் தோட்ட வேலைகளைக் கவனிக்கப் போனான் அல்லவா?

வெண்டைச் செடிகள் பயிரிட்டிருந்த பகுதியில் களை பிடுங்கிக் கொண்டிருந்த அவன் சற்று இளைப்பாறுவதற்காக மேலண்டை வேலியோரம் போடப்பட்டிருந்த ஒரு சிறு கீற்றுப் பந்தலடியில் வந்து கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தான்.

இந்தச் சமயம் கீழண்டை வேலி மூலையில் ஏதோ 'மொரக், மொரக்'



CHANDRIKA
AYURVEDIC SOAP
சந்திரிகா
ஆயுர்வேதிக் டாய்லெட் சோப்
உங்கள் சருமத்தை
புதுமலர் போன்று மிருதுவாகவும்,
தண்ணிலவு போன்று மென்மையாகவும்
பாதுகாப்பது சந்திரிகா சோப் மட்டுமே.
சந்திரிகா ஆயுர்வேதிக் டாய்லேட் சோப் இந்த இனத்தில் இது ஒன்று மட்டுமே
சந்திரிகா பிராடக்ட்ஸ் கோயம்பத்தூர்-2. சென்னை-10.
aries

மணியான மாப்பிள்ளை!

ரமணி ரங்கநாதன்

"அடேடே! நம்ம சேகரோட மனைவி உங்க மகளா? தெரியாதே! சேகரை எனக்கு சின்ன வயசிலிருந்தே ரொம்பப் பழக்கம். ரொம்ப நல்லவன். ஆனா படுகஞ்சன். மனுஷாளுக்காகப் பைசா செலவு பண்ண மாட்டான். அப்படிச் செய்துவிட்டாலும் அதைச் சொல்லிச் சொல்லி மாய்ந்து போவான். அப்படியொரு குணம்....!"- இப்படித் தன் மாப்பிள்ளையைப் பற்றி ஒரு சிநேகிதன் சொன்னால் எந்த மாமனார்தான் கவலைப்படாமல் இருப்பார்? அவனுக்குத் தன் பெண்ணைக் கல்யாணம் செய்து அனுப்பிய பின், இந்த இரண்டு மாதங்களாக வராத கவலை பிடித்துக் கொண்டு விட்டது அந்தப் பேச்சைக் கேட்டதும்.

'அப்படிப்பட்ட கஞ்சன் தாலி கட்டின பெண் டாண்டிக்குச் சோறுகூடச் சரியாகப் போடுகிறானோ இல்லையோ? கட்ட நல்ல துணி இல்லாமல் தவிக்கிறாளோ தம் பெண்' என்று அவருக்கு மனம் குடைய ஆரம்பித்து விட்டது. உடனே நேரில் பார்த்துத் தெரிந்து கொண்டால்தான் தூக்கம் வரும்போல் இருந்தது அவருக்கு! அன்றே கிளம்பிவிட்டார் சென்னைக்கு!

மாம்பலம் பஸ் நிலையத்தில் இறங்கி டவுன் பஸ் பிடிக்கத் திரும்பிய அவரது கண்கள் வியப்பால் விரிந்தன.

எதிர்த்தாற் போல் தெரிந்த ஸ்டாப்பிங்கில்...?

பட்டுச் சேலையும் நகையும் பளபளக்க, தலை கொள்ளாத பூவும் புன்னகையுமாக அவரது மகள் நிற்க, அருகே அவள் மேல் கொஞ்சமும் வெய்யில் படாமல் குடை பிடித்துக் கொண்டு நின்றவன்....அவரது மாப்பிள்ளையேதான்!

அந்தக் காட்சி அவரது மனத்தில் புகுந்து பாலை வார்த்தது.

'மடையன்! எந்தச் சேகரைப் பற்றி அளந்தானோ அவரிடம்! பெண்ணைக் கண்போல் காத்துக் கொண்டு தான் வெய்யிலில் நின்றாலும் பரவாயில்லை என்று மனைவிக்குக் குடை பிடித்துக் கொண்டு நிற்கிறானே இந்தத் தங்கமானவனைப் பற்றியா அவன் அப்படிச் சொன்னான்! அதைக் கேட்டுத் தாமும் மடத்தனமாக அவனைப்பற்றிச் சந்தேகப்பட்டு விட்டோமே!' என்று நினைத்தபோது அவருக்கு அவமானத்தால் வியர்த்தது. ஓசைப்படாமல் திரும்பி விட்டால் என்ன என்றுகூட எண்ணினார். ஆனால் பாசம் இழுக்க இருவருக்கும் எதிரே போய் நின்று அவர்களைத் திகைக்கவைத்தார்.

அவரது வரவுக்கு மகிழ்ச்சி தெரிவித்தனர் பெண்ணும் மாப்பிள்ளையும். ஒரு முக்கியமானவர் வீட்டுக் கல்யாணமாம்; அதற்குப் போகத்தான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் என்பதை அறிந்தார். தாம் சந்தேகப்பட்டுக் கொண்டு துப்பறியக் கிளம்பியதை வெளிக் காட்டிக்கொள்ளா விட்டாலும் தம் நிறைவான மகிழ்ச்சியை வெளியிடத் தயங்கவில்லை அவர்.

"மாப்பிள்ளை! நான் பஸ்ஸை விட்டு இறங்கினதுமே உங்களைப் பார்த்து விட்டேன். நீங்கள் வெய்யிலில் நின்றாலும் இவள் மேலே வெய்யில் படாமல் குடை பிடிச்சிண்டு நிற்கிறதைப் பார்த்ததுமே என் கவலை யெல்லாம் பறந்து விட்டது... உங்களுக்குத்தான் இவள் மேல் எவ்வளவு அக்கறை!"-பெருமையாகக் கூறி மகிழ்ந்தார் அவர்! பதிலுக்கு அழுத்தமான சிரிப்பு ஒன்று சிரித்தார் அந்த மாப்பிள்ளை! தமது அந்தச் சிரிப்புக்கு விளக்கமும் கொடுத்தார்.



"அக்கறைப் படாமல் என்ன செய்கிறது மாமா! அங்கே கல்யாண வீட்டுக்குப் பூ வாங்கிக் கொடுத்தால்தான் வருவேன்னு உங்க பெண் பிடிவாதம் பிடித்தாள். சொன்னா நம்ப மாட்டீங்க. இவள் தலையிலே இருக்கிறது முக்கால் ரூபாயாக்கும்! இவ்வளவு காசு கொடுத்து வாங்கின பூ வெய்யில் பட்டு வாடிப் போயிட்டா என்ன செய்கிறது? கல்யாண வீட்டுக்குப் போகிற மட்டுமாவது பூ வாடாமல் இருக்கணுமே!"

மாப்பிள்ளையின் பேச்சு அவருக்கு மயக்கத்தை வரவழைத்து விடும்போலிருந்தது!

என்ற சத்தம் கேட்டது. அவசரமாக எழுந்த மாமுண்டி அச்சத்தம் வந்த திசைப் பக்கம் பார்வையைச் செலுத்தினான். அங்கே ஓர் ஆடு தோட்டத்துக்குள் புகுந்து கத்திரிச் செடிகளை மானாவாரியாக மேய்ந்து கொண்டிருப்பது தெரிந்தது.

இன்று மட்டுமல்ல, கடந்த நாலைந்து தினங்களாகவே அந்த ஆடு இப்படித்தான் இதே நேரத்திலே தோட்டத்திலே புகுந்து பூவும் பிஞ்சுமாய் இருக்கும் செடிகளை மேய்ந்து வருகிறது. இத்தனைக்கும் அந்தத் தோட்டத்தின் நாலு பக்கமும் ஆள் உயரத்துக்கு நெருக்கமாக முள் வேலி போடப்பட்டேயிருக்கிறது. அப்படியிருந்தும் அந்த ஆடு எப்படியோ வேலிக்குள் புகுந்து செடிகளைச் சங்காரம் பண்ணி விடுகிறது. இதுவரை அதனால் இரண்டு பாத்திச் செடிகள் நாசமாகி விட்டன. ஆடு வாய் வைத்தது உருப்படுமா ?

இத்தனை நாட்களும் மாமுண்டி ரொம்பப் பொறுமையாகவே அந்த ஆட்டை வெளியே விரட்டிவிட்டு, அது புகுந்து வந்த வேலிப் பகுதியை அடைத்து வந்தான். ஆனால் அது ஒவ்வொரு நாளும் புதுப் புது வழி கண்டுபிடித்து உள்ளே நுழைந்துவிடும். இப்போதும்



ஐப்பானில் தாய்ப் பால்கூடக் கெட்டுவிட்டது என்கிறார்கள் விஞ்ஞானிகள். காரணம்? அரிசி, காய்கறி, பழங்கள் இவற்றைக் கெடாமல் பாதுகாக்கப் பூச்சி மருந்து தெளிக்கப்படுகிறது. பின்னால் இவற்றைச் சாப்பிடும்போது சிறுகச் சிறுகப் பூச்சி மருந்தும் உடலுக்குள் போகிறது. நாளடைவில் தாய்மார்களுடைய பால் இதனால் கெட்டுவிடுகிறதாம்.

டைம்ஸ் ஆப் இந்தியா - பாலி

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

அப்படித்தான் வந்து மேய்ந்து கொண்டிருந்தது. பல நாட்கள் ருசி கண்டு விட்டதல்லவா ?

மாமுண்டி கீழே கிடந்த குறுந்தடியை எடுத்துக் கொண்டு தோட்டத்தின் குறுக்கே புகுந்து மறுகோடியை நோக்கி ஓடினான்.

இந்நேரம் வரை ஆனந்தமாக மேய்ந்து கொண்டிருந்த அந்த ஆடு, அவன் 'ஆய், ஊய்' என்று கத்தியபடி வருவதைக் கண்டு பயந்து வேலிக்கு வெளியே ஓடிவிட முயன்றது. ஆனால் அது புகுந்து வந்த வழி அதற்கே மறந்து விட்டதாலோ என்னவோ — தோட்டத்தில் அங்குமிங்குமாக ஓடலாயிற்று. அப்படி ஓடும்போதே வாய்க்கு எட்டிய செடிகளை வாவிக் கொள்ளவும் தவறவில்லை. அத்துடன் பூவும் பிஞ்சுமாயிருந்த பல செடி கொடிகள் அதன் ஓட்டத்தால் மிதியுண்டு மண்ணில் சாய்ந்தன.

மாமுண்டிக்கு வயிறு பற்றி எரிந்தது. அசாத்திய கோபமும் பொங்கி எழுந்தது. அப்படியும் இப்படியுமாக ஓட்டம் காட்டிச் செடிகளை நாசம் பண்ணிக் கொண்டிருந்த அந்த ஆட்டை நோக்கித் தன் கையிலிருந்த குறுந்தடியைச் சுழற்றி வீசினான்.

அவனுடைய குறி தப்பவில்லை. சுழன்று சென்ற குறுந்தடி ஆட்டின் நெற்றிப் பொட்டைச் சரியாகத் தாக்கி விடவே, 'ம்மே' என்று அலறியபடி ஒரு சுற்றுச் சுற்றித் தொப்பென்று கீழே சாய்ந்து விட்டது. மறுபடியும் எழுந்திருக்கவில்லை.

''இருட்டுப் பய மவன் ஆடே! எனக்கு ஓட்டமா காட்டினே ஓட்டம்?'' என்று கூவிக் கொண்டே விரைந்து வந்த மாமுண்டி சற்றே திடுக்குற்று நின்றான்.

ஆட்டுக்கு இரத்தக் காயம் ஏதும் படவில்லை. ஆயினும் நெற்றிப் பொட்டில் பலத்த அடி. உயிராபத்தான நிலைக்கு உள்ளாகி விட்டதென்றே தோன்றியது. கண்கள் மூடிக் கிடக்கக் கால்களை 'விலுக் விலுக்'கென உதைத்துக்கொண்டது.

மாமுண்டியின் வயிற்றெரிச்சல் இன்னும் அடங்கவில்லை. ஆனாலும் அயலார் ஆட்டை இப்படி முரட்டுத்தனமாக அடித்துவிட்டோமே என்ற பயம் அவனுள் இலேசாகத் தலைதூக்கவே செய்தது.

தோட்டங்களில் ஆடோ, மாடோ புகுந்து செடி கொடிகளை மேய்ந்துவிட்டால் பிடித்துக் கட்டிப் போட்டு வைத்திருந்து, உரியவர் தேடி வந்ததும், உண்டான நஷ்டத்துக்கு ஈடு கேட்டு வாங்கிக்கொண்டோ அல்லது எச்சரித்தோ அவிழ்த்து விட்டு விட வேண்டும் என்பதும், மற்றபடி அவற்றை அடித்துத் துன்புறுத்தி உயிர் வதை செய்யக் கூடாது என்பதும், அப்படிச் செய்தால் ஊர்ப் பஞ்சாயத்தில் பெரும் தண்டனை கிடைக்கும் என்பதோடு தனிப்பட்ட விரோத குரோதங்களும் தலைதூக்கும் என்பதும் அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், உண்மையில் அவன் அந்த ஆட்டை அடித்துக் கொல்லவேண்டும் என்ற அளவுக்கு ஆத்திரப்படவில்லை. அது அவனுடைய நோக்கமும் அல்ல. ஓட்டம் காட்டிச் செடிகளை முறித்துப் பாழ் செய்யும் அதனைச் சீக்கிரமே வேலிக்கு வெளியில் விரட்டியடிக்கும் முயற்சியில் கொஞ்சம் வேகமாகத் தடியை வீசி எறிந்து விட்டான். அது எதிர்பாராத விளைவை ஏற்படுத்தி விட்டது.

சுற்று முற்றும் பரபரப்புடன் பார்த்துக்கொண்ட அவன் அந்த ஆட்டைக் குண்டுக் கட்டாகத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு தோட்டத்தை விட்டு வெளியே விரைந்தான்.

ரயில் பாதைக்குக் கிழக்கண்டைப் பக்கமிருந்த டிச்சிப் பள்ளத்தில் குத்துக் குத்தாக விழல் போத்துக்கள் வளர்ந்திருந்தன. அவ்விழல் போத்துக்களிடை ஆட்டைக் கொண்டு போய் இறக்கிப் போட்டான். இனி, அவன்தான் அந்த ஆட்டை அடித்துக் கொன்றான் என்பது யாருக்கும் தெரியாது. வேறு யாராலோ, எப்படியோ அது அங்கே செத்துக் கிடக்கிறது என்றே தீர்மானிக்க நேரும்.

அங்கிருந்து சீக்கிரம் போய்விடத் திரும்பிய மாமுண்டிக்குத் திடுமென்று

ஓர் எண்ணம் தோன்றவே, தயங்கி நின்று அந்த ஆட்டைக் குனிந்து பார்த்தான். அது செத்து விட்டதா, உயிரோடு இருக்கிறதா என்பதை அறியவே அவ்வாறு பார்த்தான்.

அநேகமாகச் செத்துப் போய்விட்டதென்றே தோன்றியது. அத்துடன் அது நிறை சூல் கொண்டிருக்கிறது என்றும் இப்போது தான் அவனுக்குத் தெரிந்தது.

தன் இடது கையால் அதன் ஒரு காதைப் பிடித்துத் தூக்கி முகத்தைக் கூர்ந்து நோக்கினான். இந்நேரம் மூடிக் கிடந்த கண்கள் மெல்லத் திறந்தன. அவனையே சில விநாடிகள் பரிதாபமாய்ப் பார்ப்பது போல் குத்திட்டு நின்றன. அவனும் அந்தக் கண்களை நேருக்கு நேர் பார்த்தான்.

வெள்ளையான நீள் வட்ட விழிக்கு நடுவே, மர வர்ணத்தில் மற்றொரு வட்டம்; அவ்வட்டத்துக்கு மையத்தில் சிறு கீற்றுப்போல் ஒரு கறுப்புக் கோடு - அப்பப்பா! அந்தக் கண்களில்தான் என்ன சோகம்! எத்தகைய அவல பாவம்!...

மாமுண்டியின் உடல் ஒரு குலுங்குக் குலுங்கியது. கையும் இலேசாக நடுங்கியது. தூக்கிப் பிடித்திருந்த காதைச் சட்டென்று விட்டு விட்டு அப்பால் வந்து விட்டான். இப்போதோ, இன்னும் கொஞ்ச நேரத்திலோ அந்த ஆடு செத்துவிடும் என்று அவனுக்கு நிச்சயமாய்த் தெரிந்து போயிற்று.

தோட்டத்துக்கு வந்து சேர்ந்த அவன் அங்கு இருக்கப் பிடிக்காமல் வேலிப் படலைச் சாத்திக் கொண்டு உர மூட்டை வாங்குவது சம்பந்தமாய் ஓர் ஆளைக் கண்டு பேச ஊருக்குள் நடையைக் கட்டினான்.

அந்த ஆள் கிடைக்கவில்லை. சோர்வும் களைப்புமாய் அவன் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது எதிரே அலங்கமலங்க ஓடி வந்தாள் மருத்துவச்சி மங்கம்மா.



"ரயில்கள் சரியான நேரத்துக்கு வராத போது டைம்-டேபிள் எதற்கு?"

"டைம்-டேபிள் இல்லாவிட்டால் ரயில் லேட் என்று எப்படிச் சொல்ல முடியும்?"

லாரீப் - நாயக்

* * *

அப்போலோ-11ஐ விண்வெளிக் கப்பல் சந்திரனுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்ததும் விண்வெளி வீரர் ஆம்ஸ்ட்ராங்குக்கு ஒரு பாராட்டு விருந்து கொடுக்கப் பட்டது. விருந்தில் அவருக்குப் பக்கத்தில் பிரபல போட்டோ நிபுணர் கார்ஷ் என்பவர் உட்கார்ந்திருந்தார். அவர் உலக நாடுகள் பலவற்றையும் பல முறை சுற்றி வந்தவர். அவரிடம் ஆம்ஸ்ட்ராங் வெளி நாடுகளைப் பற்றிக் கேள்வி கேட்டுக்கொண்டே யிருந்தார். கார்ஷ் அவரிடம், "நீங்கள் உங்கள் அனுபவத்தைப் பற்றி ஏதாவது சொல்லுங்களேன்" என்றார். அதற்கு ஆம்ஸ்ட்ராங் கூறிய பதில்: "நான் உங்களைமாதிரி பல நாடுகளுக்குப் போயிருக்கிறேனா, சந்திர மண்டலத்தைத் தவிர வேறு ஒரு இடத்துக்கும் போனதில்லையே!"



- சரோஜா ராமச்சந்திரன்

* * *

அ னு ஆவன்னு....


நாம் நம் பையன்களுக்கு அரிச்சுவடி கற்றுக் கொடுக்கும்போது அ என்றால் அரசன், ஆ என்றால் ஆனை என்றும் ஆங்கிலத்தில் A for Ant B for Box என்றும் தானே சொல்லிக் கொடுக்கிறோம்? ஆனால் ஜப்பானில் தங்கள் குழந்தைகள் அனைத்துக் குண நலன்களும் பெற்றுத் திகழ வேண்டும் என்று கருதும் பெற்றோர்கள் A to Z வரும் சொல்லித் தருவது கீழ்க் காண்பன:

Ambitions; Bravery; Caution; Determination; Earnestness; Fame; Genius; Honesty; Independence; Justice; Keenness; Labour; Method; Nobility; Order; Punctuality: Quickness; Readiness; Steadiness; Tirelessness; Uprightness; Versatility; Wisdom; X'actness; Yearning; Zeal.

நாட்டு முன்னேற்றத்துக்கான காரணம் இதுவும்கூட.

- ஜோ.

* * *



இரண்டு கைகளையும் விரித்துக் கொண்டு நிற்கும்போது வலது கை நுனியிலிருந்து இடது கை நுனி வரை மீறும் உள்ள அளவு அவனுடைய உயரத்துக்கும் சமமாக இருக்கும்.

விக்னேஷ் - நாயக்

"ஏம்பா, மாமுண்டி! என்னோட ஆட்டை எங்கனாச்சும் பார்த்தியா?" என்று அழமாட்டாக் குறையாகக் கேட்டாள் அவள்.

மாமுண்டிக்கு இப்போதுதான் தெரிந்தது, அந்த ஆடு இந்த மருத்துவச்சிக் கிழவிக்குச் சொந்தமானது என்று. திருடனைப் போல் விழித்த அவன் உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டு, "ஆடா?... நான் பார்க்கலியே பாட்டி!" என்றான் அலட்சியமாக.

"ஐயோ, மத்தியானத்திலிருந்து தேடறேன்: அது எங்கே போய்த் தொலைஞ்சுதுன்னே தெரியலியே!" என்று பிரலாபித்துக் கொண்டே மலையடிவாரத்து முருகன் கோயிலை நோக்கி ஓடினாள் மங்கம்மா.

விளக்கு வைக்கும் நேரத்தில் மாமுண்டி வீடு வந்து சேர்ந்தபோதுதான் வடிவாம்பாள் பேறு நோவு கண்டு துடித்துக் கொண்டிருப்பது அவனுக்குத்



தெரிந்தது. அதற்குப் பின் நடந்த களேபரங்களில் அந்த ஆட்டைப் பற்றி மறந்தே போனான்.

இந்நிலையில் சற்று முன் வண்டிக்குள்ளே பிரசவ வேதனை தாளாது பிரக்ஞை இழந்து கண் மூடிக் கிடந்த வடிவாம்பாள் தண்ணீர் பருகிச் சற்றே தெளிவடைந்து கண் விழித்துப் பார்த்தபோது அவளின் சோர்ந்து ஒளியிழந்த கண்கள் அந்த ஆட்டின் கண்களைப் போலவே இருந்ததை விளக்கொளியில் பார்த்துத்தான் அப்படி 'ஆடு, ஆடு' என்று அலறிக் கூவி விட்டான் அவன்.

"ம்மே!...ம்மே!..."

திடுக்குற்றுத் தலைநிமிர்ந்த மாமுண்டி பீதியுடன் சுற்று முற்றும் நோக்கினான்.

அந்த வண்டிப் பாட்டைக்கு இடது புறத்தே அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆவாரஞ் செடிகள் வளர்ந்திருந்த பொட்டல் வெளியில் ஆட்டு மந்தையொன்று பட்டி மடக்கிப் போடப்பட்டிருந்தது. சுமார் இருநூறு ஆடுகளுக்கு மேல் இருக்கும். மந்தையோரத்தில் இரண்டு இடையர்கள் குளிர் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து பீடி குடித்துக் கொண்டிருந்தனர். மந்தைக்குக் காவலாக ஒரு நாயும் சுற்றி வந்து கொண்டிருந்தது.

நிஜமாகவே அங்கு ஆட்டு மந்தை பட்டி போடப்பட்டிருக்கிறதா? அல்லது தன் மனத்தில் மிளர்ந்துள்ள பயத்தின் உருவெளியாக அவ்வாறு புலப்படுகிறதா என்று மாமுண்டிக்குச் சந்தேகமாகிவிட்டது.

"வண்டிக்காரய்யோவ்! இப்ப மணி என்னா இருக்கும்?" என்று கேட்டான் இடையர்களில் ஒருவன்.

"ஒன்னரை ஆவப்போவுது" என்று குரல் கொடுத்தான் பக்கிரி.


தன் சந்தேகம் தீர்ந்தவனாய் அந்த ஆட்டு மந்தையை நோக்கிப் பார்வையைச் செலுத்தினான் மாமுண்டி. இருட்டில் ஆடுகளின் உருவம் தெளிவாகப் புலப்படவில்லை. ஏதோ குண்டு குண்டாய்க் கற்கள் உருண்டு கிடப்பன போலத்தான் தோன்றின. ஆனால், மாமுண்டியின் பார்வையில் ஒரு விசித்திரக் காட்சி தென்பட்டது.

ஆம்; அங்கிருந்த ஆடுகள் ஒவ்வொன்றின் கண்களும் அவனுக்குத் துல்லியமாகப் புலனாயின. கண்கள் மட்டும் தான்; வேறு ஒன்றும் தெரியவில்லை! அத்தனை நூறு கண்களும் அவனையே பரிதாபமாகப் பார்த்தன. எல்லாம் அந்த மருத்துவச்சி மங்கம்மாவின் ஆட்டுக் கண்களைப் போலவே தோன்றின. அது மட்டுமல்ல; சற்று முன் பார்த்த அவனுடைய மனைவி வடிவாம்பாளின் கண்களைப் போன்றும் அவை இருந்தன. சகலவிதமான சக்திகளையும் இழந்த பின் சலனமற்று அமைதியாகச் சாவை எதிர்நோக்கும் பார்வை!...

மாமுண்டியின் உடல் நடுக்கம் கண்டது. வியர்வை ஆறாகப் பெருகியது. கால்கள் பின்னலிட்டன.

'ஐயோ, பிரசவ வேதனையால் பிரக்ஞை இழந்த என் மனைவி தண்ணீர் குடித்த பின் தெளிவடைந்தது போல அந்த வாயில்லா ஜீவனான ஆடும், என்னுடைய பேய்த்தனமான தாக்குதலுக்கு உள்ளாகி மயங்கிக் கிடந்தபோது அதன் வாயில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றியிருந்தால் உயிர் பிழைத்து எழுந்து விட்டிருக்குமோ?

நிறைவான கருத்தடைச் சாதனத்தைத் தேடி அறவே இனி அலைய வேண்டியதில்லை.



கருத்தடை முறைகள் பல: விடாய் கணக்கு முறை, வெளி இழுப்பு, பாதுகாப்பு முறை, கழுவல் முதலியன. உங்களுக்கென்று நீங்கள் ஒன்றைத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடும். ஆனாலும், நீங்கள் இப்புதிய கருத்தடைச் சாதனத்தை உபயோகித்துப் பாருங்களேன். அதுதான் டெல்ஃபென்

கருத்தடைச் சாதன வரலாறு காணாத வகையில் மிகச் சக்தி வாய்ந்த உயிரணுக்களைக் கொல்லும் மருந்துகளடங்கிய கருப்பை வழிக் க்ரீம் டெல்ஃபென். அது பாதுகாப்பானது, மென்மையானது. உலகெங்கிலுமுள்ள நாகரீக இல்லத்தரசிகள் டெல்ஃபென் உபயோகிக்கத் தொடங்கி வருகின்றனர். பயன்மிக்க, வசதியான இதை ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால், நீங்களும் கூட இதையே நாடுவீர்கள். அதற்கான காரணங்கள் இதோ:

- டெல்ஃபென் விரைவிலே உபயோகிக்க எளிதானது.
- உணர்ச்சிவேகத்துக்கு ஊறுசெய்யாது.
- பாதுகாப்பானது.
- மென்மையானது, எரிச்சல் தராது.
- சுத்தமானது,எண்ணெய்ப்பசையற்றது கணவன்-மனைவி இருவருக்குமே இன்பமானது.
- தேவையானபோது மட்டுமே உபயோகிக்கப்படுவது.
- மிகவும் சிக்கனமானது. ஒருதடவை உபயோகிப்பதற்கான செலவு 15 காசுதான்.
- சுவடின்றி மறைந்து விடுகிறது
- உலகெங்கும் டாக்டர்களால் சிபாரிசு செய்யப்படுகிறது.

நீங்களும் உங்கள் குடும்ப டாக்டரை விசாரிக்கலாம். இப்போது நீங்கள் உபயோகித்து வரும் கருத்தடைச் சாதனத்துடன் டெல்ஃபெனை ஒத்திட்டுப் பாருங்கள். டெல்ஃபென் அளிக்கும் நலன்கள் யாவையும் சிந்தித்துப் பாருங்கள்...

நிறைவான கருத்தடைச் சாதனத்தைத் தேடி அறவே இனி அலைய வேண்டியதில்லை என்று இப்போது ஒப்புக் கொள்கிறீர்களா?

50கி, 100கி, டியூபுகள் மற்றும் கையடக்கமான பிளாஸ்டிக் பைகளில் டெல்ஃபென் இப்போது கிடைக்கிறது. புதிய 2.5கி. அப்ளிகேடர் மூலம் டெல்ஃபெனை உபயோகித்து மேலும் சிக்கனம் செய்யுங்கள்.

விளக்கப்படங்களுடன் கூடிய இலவச கைப்புத்தகத்திற்கு எழுதுக:

டிபார்ட்மென்ட் எஸ், எத்னர் லிட்., 30ஏ, ஃபோர்ஜெட் ஸ்ட்ரீட், பம்பாய்-26

நம்பிக்கையின் மறு பெயர்

டெல்ஃபென் க்ரீம்

பதிவு பெற்ற டிரேடு மார்க்.

JAISONS-186

அப்படிச் செய்யச் சொல்லித்தான் அது என்னே அவ்விதம் பார்த்ததோ?''

அவன் தள்ளாடித் தள்ளாடி நடந்தான்.

அந்த மலையடிவாரத்துப் பாட்டையைக் கடந்து செங்கல்பட்டு நகரின் பிரதான கப்பிச் சாலை யொன்றில் மாட்டு வண்டி ஏறி விரைந்தது.

உற்சாகமடைந்த பக்கிரி, ''பரவா யில்லே! சீக்கிரமாவே வந்துட்டோம். ஆசுபத்திரி இன்னும் ஒரு மைல் தூரம் தான்'' என்று தனக்குத் தானே வாய் விட்டுச் சொல்லிக் கொண்டான். பிறகு ''மாமுண்டி அண்ணே! இனிமேலும் நீ பின்னாடி விளக்கை எடுத்து வரப் படாது. வண்டிக்கு முன்னாலே கொண் டாந்து மாட்டிப்பிடு. இல்லேன்னா போலீஸ்காரன் புடிச்சுக்கு வான்'' என்றான்.

வண்டிக்குள் வடிவாம்பாளின் வேதனை முனகல் இலேசாகக் கேட்டு கொண்டிருந்தது

பக்கிரி சொன்னவாறே மாமுண்டி அரிக்கன் விளக்கை எடுத்துப் போய் வண்டிக்கு முன்னால் மாட்டி விட்டுப் பக்கவாட்டில் நடக்கலானான்.

இரவு மணி இரண்டுக்கு மேல் இருக்கும். செங்கல்பட்டு பெரிய ஆசுபத்திரியை நெருங்கிக் கொண்டிருந்தது வண்டி.


இதுகாறும் மௌனமாய் நடந்து வந்து கொண்டிருந்த மாமுண்டி திடீ ரென்று ஏதோ ஒரு முடிவுக்கு வந்த வன்போல் நடையைச் சற்று எட்டிப் போட்டுப் பக்கிரியின் அருகில் நெருங்கி அவனை மெல்லச் சீண்டினான். திடுக் குற்ற பக்கிரி திரும்பிப் பார்த்தான்.

மாமுண்டி அவனுடைய காதோடு வாய் வைத்து மிக மிக ரகசியமான குரலில், ''தம்பியோய்! நீ கொஞ்சம் தயவு பண்ணி என் அக்காவோடு கூட மாட உதவியா யிருந்து வடிவை ஆசு பத்திரியிலே சேர்த்துப்புடு! நான் என் வீட்டு வரை போயிட்டு மறுபடியும் இங்கே வந்து கவனிச்சுக்கிறேன்!'' என்றான்.

இதைக் கேட்டு அதிர்ச்சி யடைந்து போன பக்கிரி, ''என்னது! நீ என் னண்ணே சொல்றே?'' என்று கிசுகிசுத்த குரலில் கேட்டான்.

''ஆமாண்டா பக்கிரி! இப்பவே நான் வீட்டுக்குப் போகணும்.''

''எதுக்கு?''



''இன்று உங்களுக்கு ஜுரம் அதிகமானாலும் தேவலை. பாம்புப் படம் பூர்த்தியாகிவிடும்.''



''இரண்டு விரல்லே ஒன்றைத் தொடுங்கள்!''
''எதற்கு?''
''சமையல் பிரமாதம். பாராட்டை உங்களுக்குச் சொல்வதா? இல்லே; உங்க' மிஸஸுக்குச் சொல்வதான்னு முடிவெடுக்கத்தான்!''



''என் பெயர் உஷாராணி, எம். எஸ்.ஸி. தேறி டைப்ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட் பாஸ் பண்ணி, அக்கவுண்ட்ஸ் கிளாஸிலேயும் தேறி யிருக்கிறேன். உங்க ஆபீஸில் தரையைப் பெருக்கித் தண்ணீர் பிடிச்சு வைக்க வேலைக்காரி தேவை என்றீர்களாமே...!''

சற்றே தயங்கிய மாமுண்டி, "என்னோட பிள்ளைகள் ரெண்டு பேரையும் தனியா விட்டுட்டு வந்துட்டேன். அதுக்குத்தான்" என்றான் கம்மிய குரலில்.

"அட, நீ ஒண்ணு! அதுகளைப் பக்கத்து வீட்டுக்காரங்க பார்த்துக்க மாட்டாங்களா?"

"அது சரிதான். ஆனாலும் நான் போய்த்தான் வரணும்."

"இதோ, ஆசுபத்திரி வந்துடுச்சே அண்ணே! இவ்வளவு தூரம் வந்துட்டு இப்ப நீ கூட இல்லாம திரும்பிப் போறது நல்லா இருக்குமா?"

"எதுக்குடா நான் கூட இருக்கணும்? என் பெண்டாட்டி பிழைக்கவா போறாள்? அவளுக்குச் சுகப்பிரசவம் ஆகாதுன்னு எனக்குத் தோணுது. அதுக்கான அறிகுறியெல்லாம் தெரிஞ்சு போச்சு. அதான் திரும்பிப் போயிடறதுன்னு தீர்மானிச்சுட்டேன். தகவல் வந்ததும் மறுபடியும் வீந்து பார்த்துக்கிட்டாப் போச்சு."

"அட, பாவி!" என்று முணுமுணுத்த பக்கிரி விளக்குவெளிச்சத்தில் மாமுண்டியின் முகத்தைத் திகிலுடன் கூர்ந்து நோக்கினான்.

அவனுடைய முகம் பேயறைபட்டது போல் வெளுத்திருந்தது. கண்கள் கலங்கி நீரை வழிய விட்டுக் கொண்டிருந்தன.

மாமுண்டி மெல்ல மெல்லப் பின்னால் தயங்கி நடந்தான். வண்டி முன்னே போய்க் கொண்டிருந்தது. வெகு தூரத்துக்குப் பின் தங்கிப் போன அவன், சடாரென்று திரும்பித்தன் கிராமத்தை நோக்கி வேகமாக நடை போட்டுச் சென்றான்.



விடியற் சாமக் கருக்கல் இருட்டு கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டு விட்டுக் கலைய, கீழ்த் திசை வானம் நரைக்கத் தொடங்கிய நேரத்தில் ஞானபுரம் கிராமத்தின் எல்லையை நெருங்கிக் கொண்டிருந்தான் மாமுண்டி.

"என்னப்பா, தம்பி! உன் வீட்டுக்காரிக்கு எல்லாம் நல்லபடியா நடந்து முடிஞ்சுட்டுதா? ஆசுபத்திரியிலே யிருந்து தானே வர்றே?"

தள்ளாடித் தள்ளாடித் தலை குனிந்தபடி நடந்து வந்து கொண்டிருந்த மாமுண்டி திடுக்குற்று நிமிர்ந்தான். மருத்துவச்சி மங்கம்மாதான் அவன் எதிரே நின்று கொண்டிருந்தாள்.

ஒரு கணம் திக்கித் திணறிப் போன மாமுண்டி அவளைத் திருதிருவென்று விழித்துப் பார்த்து விட்டு முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு, "ஆமா, பாட்டி! அவளை ஆசுபத்திரியிலே சேர்த்துட்டே வர்றேன். இன்னும் ஒண்ணும் ஆகலே.." என்று குழறினான்.

"பயப்படாதே, தம்பி! எல்லாம் சல்லிசா நடந்துடும். நேத்து ராத்திரி என்னைக் கூட்டி யாரச் சொல்லி உன் பையனை வீட்டுக்கு அனுப்பினியாம். பக்கத்து வீட்டுக்காரி சொன்னாள். அப்ப நான் இல்லே. அந்தப் பாழாய்ப்போன ஆட்டைத் தேடி அலைஞ்சுக்கிட்டு இருந்தேன். அது கிடைக்கலே. ஆனா எனக்கு அந்தக் கவலைகூட இல்லே.

யானை இருக்கக் கவலை ஏன்?

சினிமா நடிகைகள் தங்களைப் பற்றிய நினைவு மக்களுக்குச் சதா இருந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகப் பலவிதத்திலும் விளம்பரம் செய்து கொள்ளுவார்கள். ஒரு ஹாலிவுட் நடிகை தன்னுடைய வைர ஆபரணங்களை ஒரு நாய் விழுங்கி விட்டதாகப் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தாள். அப்பத்திரிகையின் விளம்பர மானேஜர் "அம்மணி, இப்படி விளம்பரம் கொடுத்தால் 'ஒரு நாயின் வயிற்றை நிரப்பும் அளவுக்குத்தான் உங்களிடம் வைர நகைகள் இருந்தன' என்று தாழ்வான எதிர்ப் பிரசாரம் கிளம்பக்கூடும். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்!'' என்றார்.

"அப்படியானால் ஒன்று செய்யுங்கள். 'நாய்' என்பதற்குப் பதிலாக 'யானை' என்று போட்டு விடுங்கள்!'' என்றாளாம் நடிகை.

ஆதாரம்: ஃபெமினா தகவல்: விஜயம்

உன் பெண்டாட்டிக்குப் பிரசவம் பார்க்கப் போகலியேன்னுதான் ராத்திரி முழுக்கத் தூக்கம் பிடிக்காம மனசைப் போட்டு உளப்பிக்கிட்டுக் கிடந்தேன். பொழுது எப்ப விடியும்னு காத்துக்கிட்டு இருந்து, விடிஞ்சதும் இதோ பொறப்பட்டும் வந்துட்டேன். இப்ப நேரே செங்கல்பட்டு ஆசுபத்திரிக்குத்தான் போறேன். எல்லாம் நான் கூடமாட இருந்து கவனிச்சுக்கிறேன். நீ ஒண்ணுக்கும் கவலைப்படாதே..'' என்று சொல்லிவிட்டு அவனுடைய பதிலையும் எதிர்பார்க்காமல் மேலே நடந்துவிட்டாள் மங்கம்மா.

பிரமை பிடித்தவன் போல் அப்படியே விக்கித்து நின்றான் மாமுண்டி. பிறகு தன்னை ஓர் உலுக்கு உலுக்கிக் கொண்டு தன் தோட்டத்தை நோக்கி விரைந்து நடந்தான்.

ஆனால் அவன் தோட்டத்துக்குள் செல்லவில்லை. அதைச் சுற்றிக்கொண்டு கிழண்டைப் பக்கமுள்ள ரயில்வே டிச்சிப் பள்ளத்தை அடைந்து, நேற்று அந்த ஆட்டைக் குற்றுயிரும் குறையுயிருமாகத் தூக்கி வந்து போட்ட விழல் போத்தருகில் போய்ப் பரபரப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

அங்கே ஆட்டைக் காணோம்!

அது செத்து விட்டதா? அப்படியானால் அதன் உடல் எங்கே? நாயோ, நரியோ இழுத்துச் சென்றுவிட்டிருக்குமோ?—

மார்பை அழுத்திப் பிடித்துக்கொண்டான் மாமுண்டி. அதற்கு மேல் அங்கு நிற்கவே அவனால் முடியவில்லை. கால்கள் பின்னலிடத் தன் கத்திரித் தோட்டத்துக்கு வந்து சேர்ந்தான்.

என்ன ஆச்சரியம்! அதோ, பச்சைப் பசுமையாய்த் தளதளவென வளர்ந்திருக்கும் கத்திரி, வெண்டைச் செடிகளை ஆனந்தமாய் மேய்ந்து கொண்டிருக்கிறதே ஓர் ஆடு?...

மாமுண்டிக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. உள்ளங் கையால் நிமிண்டி விட்டுக் கொண்டு மீண்டும் அவசரமாக நிமிர்ந்து பார்த்தான். சந்தேகமில்லை; அது மருத்துவச்சி மங்கம்மாவின் ஆடேதான்!

மகிழ்ச்சிப் பெருக்குடன் அந்த ஆட்டை நோக்கி ஓடினான் மாமுண்டி. அவனைக் கண்டதும் மிரண்டடித்து அங்குமிங்குமாக ஓடத் தொடங்கியது ஆடு. ஆனாலும் நேற்றுப் போல் அவ்வளவு வேகமாக ஓட்டம் காட்ட இப்போது அதனால் இயலவில்லை. அவன் அதைத் தாவிப் பிடித்துக் கொண்டு அப்படியே தரையில் உட்கார்ந்தான்.


மிரட்சியுடன் 'ம்மே...' என்று அலறிக் கூவிய அந்த ஆடு அவனைப் பரிதாபமாக ஏறிட்டுப் பார்த்தது.

மாமுண்டி அதன் கண்களையே சில விநாடி கூர்ந்து நோக்கி விட்டுப் பாசப் பரிவுடன் முதுகையும் தடவிக் கொடுத்தவாறு ஒரு கத்திரிச் செடியை வேரோடு பிடுங்கி அது தின்பதற்காக வாய்க்கு எதிரே நீட்டினான். பயம் நீங்கிய ஆடு அவன் கொடுத்த பசிய இலைகளை ருசித்துத் தின்ன ஆரம்பித்தது.



"இனிமேல் எனக்குப் பயமில்லே! என் வடிவாம்பா பிழைச்சுக்குவா! அவளுக்கு நல்லபடியாகவே பிரசவம் ஆயிடும்!'' என்று அவன் தனக்குத்தானே புன்முறுவலுடன் முணுமுணுத்துக் கொண்டான்.

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

